JANUARY 03, 2018
WEDNESDAY
VOL: 003/162
RS. 10.00
LATE CITY ★

Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk



பெரிய சேப்பு இருந்த போதிலும், அதில் அப்பணம் வைக்கப்பட வில்லை

# மிளகாய் தூள் வீசி கோடி ரூபாய் கொள்ளை

■ டி.ஷங்கீதன், டி.சந்ரு, ஆ.ரமேஸ், எஸ். சஜிதா, எஸ்.கணேசன்

தனியார் வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்குக் கொண்டு சென்றுகொண்டிருந்து ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய், (ரூ.14.5 மில்லியன்), மிளகாய்த் தூள் வீச்சு தாக்குதல் நடத்தி கொள்ளைடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம், நுவரெலியாவில் நேற்றுக்காலை 8:30 மணியளவில் இடம்பெற்றுள்ளதென, நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நுவரெலியா, அம்பேவலை பிளக்பூல் பகுதியிலிருந்து, ருவன்எலிய சிகரெட் முகவர் வியாபார நிலையத்துக்குச் சொந்தமான, இந்தப் பணம், தனியார் வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்கு எடுத்துச்சென்றுகொண்டிருந்த போதே, இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## மது விருந்தென முறைப்பாடு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர்கள், தாம் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில், பொதுமக்களை இலக்கு வைத்து மதுபான விருந்தளித்து வருவதாக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தளை மாவட்ட அமைப்பாளர் சுசில் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி, தேர்தல்கள் உதவி ஆணையாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாவுல பிரதேசத்தில் இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களே, இவ்வாறு செயற்படுகின்றனர்.

தொடர்ச்சி P2

## ஆரம்பம்



சுற்றாடல் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, மரக்கன்றுகள் விநியோகிக்கும் வேலைத்திட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (2) காலை நடைபெற்றது.



புத்தாண்டையொட்டி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், அலரிமாளிகையில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று (02) இடம்பெற்றதுடன், கடமைகளும் ஆரம்பிக்கப்பட்டன.



எதிர்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், விளக்கேற்றி, கடமைகளை நேற்று (02) ஆரம்பித்து வைத்தார்.



## 'வெளிப்படையாகச் செயலாற்றுதல் ஊழியர்களின் பொறுப்பாகும்'

"அரச அதிகாரிகள், சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, வெளிப்படைத்தன்மையுடன் மக்களுக்குச் சேவையாற்றுவதன் மூலமே அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் தூய்மை நிலை மேலோங்கும்" என, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

"முறையான திட்டமிடலுடன் சிநேகபூர்வமாக மக்களுக்குச் சேவையாற்ற வேண்டியது,

தொடர்ச்சி P2

## சார்ள்ஸின் சடலம் கொழும்பில் மீட்பு



பிரித்தானியப் பிரஜையான சார்ள்ஸ் சார்ள்ஸ் (வயது 37) என்பவரின் சடலம், கொழும்பு, மாளிகாவத்தைப் பகுதியிலிருந்து, நேற்று (02) மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஹையஸ்–ஓட்டோ மோதல்: மூவர் ஸ்தலத்திலேயே பலியாகினர்

■ செல்வநாயகம் கபிலன், எஸ். நிதர்ஷன், எம்.றொசாந்த்

யாழ். நீர்வேலிப் பகுதியில் நேற்று மாலை நான்கு மணியளவில் இடம்பெற்ற விபத்தில், சம்பவ இடத்திலேயே மூவர் பலியாகியதுடன், இருவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில், பருத்தித்துறை பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த முச்சக்கரவண்டியை, யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற



ஹையஸ், தனது பாதையிலிருந்து விலகிச் சென்று மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## செவிமடுக்கா விடின், சி.வியின் உருவப் பொம்மை எரிக்கப்படும்

■ எம்.றொசாந்த்

"வட மாகாண போக்குவரத்துச் சபை ஊழியர்களின் கோரிக்கைக்கு செவிமடுக்காது விடின், ஊழியர்கள் ஆத்திரத்தின் உச்ச கட்டத்துக்குச் சென்று முதலமைச்சரின் உருவ பொம்மையைக் கூட எரிக்கும் நிலைமை ஏற்படலாம்" என ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் செயலாளார் அ. அருட்பிரகாசம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பிரதமரும் இன்று விசேட அறிவிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், இன்று (03) விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளாரென, ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோருக்கான விசேட மாநாடு, இன்று நடைபெறும். இந்த மாநாட்டில் வைத்தே, விசேட அறிவிப்பை விடுக்கவுள்ளாரென, அறிய முடிகின்றது. இந்த மாநாடு, கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற உள்ளது.



தொடர்ச்சி P2

## குழந்தை உயிரை பறித்த மரம்



வெட்டிக்கொண்டிருந்த மரமொன்று விழுந்ததில், மூன்றரை வயதான குழந்தையொன்று, அந்த மரத்துக்குள் சிக்குண்டு உயிரிழந்த சம்பவமொன்று, ஹோமாகம - தெடிகமுவ, லெனகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## கலால் அதிகாரி வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு

வடமேல் மாகாணத்தின் கலால் உதவி ஆணையாளர் லேஸ்லி ஜெயரத்தின் மாகதுரப் பகுதியிலுள்ள வீட்டின் மீது, நேற்று (02) அதிகாலை 1 மணியளவில் கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதென, பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற வேளையில், உதவி ஆணையாளர், வீட்டில் இருந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



மேடையேறினார்

ஒன்றிணைந்த பொதுஜன முன்னணியின் மாநாடு, சுகததாச உள்ளக அரங்கில், நேற்று (02) நடைபெற்றது. அதில், முன்னாள் ஜனாதிபதியும் எம்.பியுமான மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்றார். இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் பலரும் பங்கேற்றனர்.

## நாகலகம சூட்டில் நால்வர் காயம்



கொழும்பு- நாகலகம் வீதியில், நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 'பிணைமுறி வழக்கை முதல் வழக்காக எடுக்கவும்'

ஊழல், மோசடி மற்றும் பாரிய குற்றங்கள் தொடர்பிலான வழக்குகளை விரைவாக விசாரணைக்கு உட்படுத்துவதற்காக, நியமிக்கப்படவுள்ள விசேட மேல் நீதிமன்றத்தில், முதலாவது வழக்காக, பிணைமுறை வழக்கை விசாரணைக்கு எடுக்குமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை, அடுத்தவாரம் நேரடியாகச் சந்தித்து விடுக்கவுள்ளனரென தகவல் வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## 'நான் பொறுப்பல்ல' மஹிந்தவுக்கு மஹிந்த கடிதம்



"என்னுடைய புகைப்படத்தைப் பயன்படுத்தித் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள சில குழுக்கள், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் அதற்கு, நான் பொறுப்பல்ல" என்று முன்னாள் ஜனாதிபதியும் எம். பியுமான, மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து உள்ளார்.

தொடர்ச்சி P2



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிப்பளை சந்தியில், பஸ்ஸொன்றின் மீது மோட்டர் சைக்களில் மோதியதில், மூவர் காயமடைந்துள்ளனர். (வ.திவாகரன்)

அம்பாறை, ஒலுவில் மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோதமாக ஆற்று மண் ஏற்றிய இருவருக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எம்.எஸ்.எம். ஹனீபா)



PAGE 1 தொடர்ச்சிகள்

# கோடி ரூபாய் கொள்ளை

பணத்தை கொண்டுசென்ற அந்த வெள்ளைநிற சிறியரக லொறி, நுவரெலிய பூங்கா வீதியில் பயணித்துக்கொண்டிருந்த போது, பச்சை நிற, முச்சக்கரவண்டியில் வந்த இருவர் வாகனத்தை இடைமறித்து மிளகாய்த் தூளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அப்போது வாகனத்தில், சாரதியும் காசாளர் மட்டுமே இருந்துள்ளனர். அவ்விருவரும், கண்களைத் துடைத்துக்கொண்டு, தங்களை சுதாகரித்துக் கொள்வதற்கு முன்னர், அவர்களிடமிருந்த பணத்தை அபகரித்துக்கொண்டு அவ்விருவரும் தப்பிச்சென்றுவிட்டனர்.

அந்த வாகனத்தில் பாதுகாப்புப் பெட்டகம் இருந்த போதிலும், அந்தப் பணம், பெட்டகத்தில் வைக்கப்பட்டிருக்கவில்லையென, நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக, இதுவரையிலும் எவரும் கைதுசெய்யப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நுவரெலியா பொலிஸ் அத்தியட்சகர் மஹிந்த திஸாநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய, நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தன பஸ்நாயக்கவின் வழிகாட்டலின் கீழ், குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பாளர் நிசாந்த பிரதீப் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக மூன்று தினங்கள் வங்கி விடுமுறை என்பதால், பெருந்தொகையான பணம், இவ்வாறு எடுத்துச்செல்லப்பட்டதாக, ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ‘வெளிப்படையாகச் செயலாற்றுதல் ஊழியர்களின் பொறுப்பாகும்’

அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி செயலக ஆளணியினருடன் நேற்றுக்காலை விசேட நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதியின் செயலாளர் தேசியக்கொடியை ஏற்றி வைத்ததன் பின்னர், அரச சேவை உறுதிமொழி செய்யப்பட்டது.

“அரச நிறுவனங்களுக்கிடையில் சிறந்த தொடர்புகள் பேணப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இதன்போது சுட்டிக்காட்டிய ஜனாதிபதியின் செயலாளர், சிறந்த எண்ணங்களின் மூலம் அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு ஒன்றிணைந்து செயற்படவேண்டும்” என்றார்.

# மூவர் இடத்திலேயே பலியாகினர்

இச்சம்பவத்தில், பருத்தித்துறை கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த ஓட்டோ ஓட்டுநரான எஸ். பாஸ்கரனும் (வயது 46) ஓட்டோவில் பயணித்த ஐந்து வயதான சிறுமியொருவருமே உயிரிழந்தனர்.

இதேவேளை, ஓட்டோவில் பயணித்த பெண்ணொருவரும் ஹையேஸின் ஓட்டுநரும் அதில் பயணித்த மற்றைய ஒருவரும் படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பிரதமரும் இன்று விசேட அறிவிப்பு

நாட்டில் உள்ள சகல மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களில், ஆகக்கூடுதலான எண்ணிக்கையான வேட்பாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள் தொடர்பிலான விசேட அறிவிப்பொன்றை, 3ஆம் திகதியன்று தான் விடுக்கவுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, திங்கட்கிழமை (01) அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சார்ள்ஸின் சடலம் கொழும்பில் மீட்பு

அந்தச் சடலத்தின் முகத்தில் காயங்கள் இருந்ததாகவும், ஒய்வூதியத் திணைக்களத்துக்கு முன்பாக இருந்தே, சடலத்தைத் தாம் மீட்டதாகவும் மாளிகாவத்தைப் பொலிஸார் தெரிவித்தினர்.

சடலத்துக்கு அருகில் கிடந்த பொதியிலிருந்த கடவுச்சீட்டின் உதவியுடன், சடலம் அடையாளம் காணப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தார்.

சடலமாக மீட்கப்பட்ட மேற்படி நபர், சுற்றுலாவை மேற்கொண்டு, கடந்த வருடம் நவம்பர் மாதம் 25ஆம் திகதியன்று, இலங்கைக்கு வந்துள்ளார். அவருடைய சுற்றுலா விசா, எதிர்வரும் 25ஆம் திகதியுடன் காலாவதியாகுகிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் இயற்கையாக மரணமடைந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுள்ளனவென, பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ‘முதல் வழக்காக எடுக்கவும்’

ஊழல், மோசடி மற்றும் பாரிய குற்றங்கள் தொடர்பிலான வழக்குகளை விரைவாக விசாரணைக்கு உட்படுத்தி முடிப்பதற்கான அனுமதியை, அமைச்சரவை கடந்த வருடம் இறுதியில் அனுமதி வழங்கியிருந்தது.

இதேவேளை, மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, தன்னுடைய விசாரணை அறிக்கையை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த 28ஆம் திகதியன்று கையளித்திருந்தது.

அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து, முன்னெடுக்கப்படும் சட்டரீதியான நடவடிக்கையின் போது, பிணைமுறி வழக்கை, விசேட மேல் நீதிமன்றத்தில் முதல் வழக்காக எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கை, சட்டமா அதிபரின் ஊடாக நடவடிக்கை எடுக்குமாறு, அந்த உறுப்பினர்கள் கோரிக்கை விடுக்கவுள்ளனரென அறியமுடிகின்றது.

## செவிமடுக்கா விடின்...

யாழ்ப்பாணத்தில் நேற்று (02) ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய போதே, அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

“திங்கட்கிழமை முதல் நாம் தொடர்ந்து சேவைகளை புறக்கணித்து, போராட்டம் நடத்தி வருகின்றோம். எமது கோரிக்கைகளுக்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்காவிடின், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் ஆத்திரத்தின் உச்சத்துக்குச் சென்று, முதலமைச்சரின் கொடும்பாவியை எரிக்கும் நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளது.

“அவ்வாறு நடந்தால், அதற்கு வட மாகாண போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் பொறுப்புக் கூறமாட்டாது” எனத் தெரிவித்தார். அதேவேளை, குறித்த போராட்டத்தின் பின் புலத்தில் தமிழ் அரசியல் கட்சியொன்று உள்ளதாகவும், அக்கட்சியின் ஆதரவாளர்களால் முதலமைச்சரின் கொடும்பாவி எரிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து உள்ளதாக, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று, கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘நான் பொறுப்பல்ல’

அவர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று (02) அனுப்பிவைக்கப்பட்ட அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“தேர்தல்கள் ஆணையாளரே!, 2017ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக என்னுடைய புகைப்படத்தை அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் பயன்படுத்துவதை நான் நன்கு அறிவேன்.

“அதற்காக, என்னுடைய எதிர்ப்பை நான் வெளிப்படுத்தவில்லை. மாறாக உங்களிடம் அறிவிக்கின்றேன். எனினும், என்னுடைய புகைப்படத்தைப் பயன்படுத்தி, தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள சில குழுக்கள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் அதற்கு நான் எவ்வித சம்பந்தமும் இல்லை. பொறுப்பும் இல்லை”

“எனவே, அவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குழந்தை உயிரைப் பறித்த மரம்

நேற்று (02) இடம்பெற்ற, இந்தச் சம்பவத்தில், ஓஷ்தி மதுபாஷினி என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குழந்தையின் தாய், தனது 11 வயது மகனிடம் குழந்தையை விட்டு வெளியே சென்றுள்ளார். இதேவேளை, வீட்டுக்கு முன்பாக இருந்த மரத்தை வெட்டும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், கொஞ்சத் தூரத்திலிருக்கும் தன்னுடைய தாத்தாவின் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றுக்கொண்டிருந்த ஏககாலத்தில் மரமும் விழுந்துவிட்டது. அந்த மரத்தில் சிக்குண்டு, குழந்தை காயமடைந்துள்ளது.

காயமடைந்த குழந்தை ஓஷ்தி மதுபாஷினி, சிகிச்சைக்காக ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதன் பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில், அக்குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மீபே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கைக்குண்டு வீச்சு

ஆணையாளரின் வீட்டில் உள்ள வாகனத் தரிப்பிடத்திலேயே கைக்குண்டு விழுந்து வெடித்துள்ளது. இதனால் மூன்று வாகனங்கள் சேதமடைந்துள்ளனவென பொலிஸார் தெரிவித்தனர். இருப்பினும், தாக்குதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன், தாக்குதலுடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிவித்த பன்னல பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# ‘கட்சி உட்பூசல்களை பயன்படுத்த வேண்டாம்’

“ஆட்சியதிகாரத்தில் உள்ளோரது உட்கட்சிப் பூசல்கள் காரணமாகவே வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையினர், பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனரெனக் கூறப்படுகின்றது. உட்பூசல்களை, மக்கள் சார்ந்த பணிகளில் திணிப்பதற்கு எத்தனித்துள்ளமை கண்டிக்கத்தக்கது. கட்சிக்குள் நிலவுகின்ற பூசல்களை, மக்கள் மீது திணித்து, மக்களைப் பாதிப்புகளுக்கு உட்படுத்த வேண்டாமென சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றேன்” என, நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கோரியுள்ளார்.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் முன்னெடுத்துவரும் பணிப் பகிஸ்கரிப்புத் தொடர்பில், அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர், ஆரம்பித்துள்ள பணிப் பகிஸ்கரிப்பு நடவடிக்கைகள் தொடரும் நிலையில் உள்ளது. இதனால், எமது மக்கள் பெரிதும் பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய ஆட்சி அதிகாரத்தில் இருப்போர், விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு, மக்களைப் பாதிப்புகளிலிருந்து மீட்க முன்வர வேண்டும்.

“பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால், எமது மக்கள் போக்குவரத்துத் தொடர்பில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேநேரம், பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்களும் பெரிதும் பாதிப்புகளுக்கு உட்பட வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது.

“ஆட்சி அதிகாரங்களில் இருப்போர், எச்சந்தர்ப்பத்திலும் எமது மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படாத வகையில் தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். எமது மக்களைப் பாதிப்புகளுக்குள் தள்ளிவிடுவதற்காக எமது மக்கள் அவர்களை அரச அதிகாரங்களில் அமர்த்தவில்லை என்பதையும், எமது மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே, எமது மக்கள் அவர்களை ஆட்சி அதிகாரங்களில் அமர்த்தியுள்ளனர் என்பதையும் அவரவர் மனதில் கொள்ள வேண்டும். அதேநேரம். எமது மக்களின் தேவைகளை, பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமல் இவர்கள் இருக்கின்ற நிலையில், எமது மக்களுக்குக் கிடைக்கின்றவற்றையாவது தடுக்காமல் இருந்தாலே அது எமது மக்களுக்குச் செய்கின்ற பேருதவியாக அமையும்.

“உட்கட்சிப் பூசல்களை மக்களுக்குரிய பொது விடயங்களில் பயன்படுத்தி, எமது மக்களுக்கான பணிகளைத் தடை செய்து கொண்டிருக்காமல், சம்பந்தப்பட்ட ஊழியர்களுடன் சுமுகமான முறையில் கலந்துரையாடி, ஓர் இணக்கப்பாட்டை எட்டி, மேற்படி போக்குவரத்துச் சேவையை விரைந்து செயற்படுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

“உட்கட்சிப் பூசல்களை கட்சிக்குள் தீர்த்துக் கொண்டு, எமது மக்களை பாதிப்புகளிலிருந்து மீட்பது குறித்தே சம்பந்தப்பட்ட அனைவரினதும் செயற்பாடுகள் அமைய வேண்டும்” என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘முடிவுகள் ஜனாதிபதிக்கு நிவாரணியைக் கொடுக்கும்’

“சிறிய கட்சிகளின் தயவில்லாமல் ஆட்சியமைக்கும் நோக்கத்தில்தான் இந்தப் புதிய தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது. இதன் பாதகங்கள் குறித்து பிரதமரிடமும், ஜனாதிபதியிடமும் பல வருடங்களாக பேசிவருகிறேன். ஆனால், ஜனாதிபதியும் சம்பந்தப்பட்ட அமைச்சரும் இதில் விடாப்பிடியாக இருக்கின்றனர். இந்நிலையில் தற்போதையை உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் ஜனாதிபதிக்கு நல்லதொரு நிவாரணியை கொடுக்கும்” என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

திருகோணமலையில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக மரச்சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான சந்திப்பு, தம்பலகாமத்தில் 1ஆம் திகதி நடைபெற்றது. இதில், கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மேலும் கூறியதாவது,

“ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதிக்கம் அதிகமுள்ள இடங்களில் தங்களுடன் சேர்ந்து போட்டியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி எங்களிடம் பேசிவந்தது. எங்களது ஆதரவுள்ள சபைகளை யானைச் சின்னத்தில் வென்றுகொடுத்தால், வெளியில் அதை அவர்களது சபையாக காண்பிப்பார்கள். இதன்மூலம் ஆட்சியாளர்களிடமிருந்து எங்களுக்கு அனுசரணை கிடைக்கும்” என்றார்.

“இதேபோன்று திருகோணமலையில் ஐ.தே.க.வுடன் இணைந்து போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு ஒரிரு நாட்கள் இருக்கும்நிலையில் கூட ரணில் விக்கிரமசிங்க எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவந்தார். ஐ.தே.க. அமைப்பாளர்கள் கூட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடுவதற்கே விருப்பப்பட்டார்கள்.

இந்நிலையில், மு.கா. மூலம் அரசியல் அதிகாரம் பெற்ற ஓர் அமைச்சர் அதற்கு அடம்பிடித்துக்கொண்டிருந்தார். கடைசியில் நாங்கள் எதிர்பார்த்தது போலவே நடந்தது. திருகோணமலையில் மூன்று கட்சிகளும் தனித்துப் போட்டியிடுகின்ற ஒரு சூழல் உருவாகியுள்ளது. எங்களது பலத்தை நிரூபிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே நாங்கள் இதைப் பார்க்கிறோம்” என்றார்.

“மு.கா மரச்சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்பதே, கட்சி ஆதரவாளர்களின் ஏகோபித்த ஆதரவாகவும் இருந்தது. மு.கா. தனித்துநின்று சபைகளைக் கைப்பற்றும் என்ற நம்பிக்கையை வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் தந்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கை கட்சியை மேலும் உற்சாகநிலைக்கு கொண்டுசென்றுள்ளது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

“இயங்கும் அரசியலுக்குள் பெண்களை உள்ளீர்க்கவேண்டியது காலத்தின் தேவையாகும். பெண்களை பெயருக்கு வேட்பாளர்களாக நிறுத்தாமல், ஆளுமைமிக்க பெண்களை தேர்தலில் களமிறக்கவேண்டும். பெண்களின் அரசியல் வகிபாகம் குறித்து அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும். தேர்தலின் நிமித்தம் மகளிர் காங்கிரஸ் மாநாட்டை நடாத்துவதற்கும் நாங்கள் தீர்மானித்துள்ளோம்” என்றார்.

# மது விருந்தென முறைப்பாடு

அப்பாவிக் கிராம மக்களை இலக்கு வைத்தும் இளைஞர்களை இலக்கு வைத்தும் இவ்வாறான வேலைகளை, அவர்கள் முன்னெடுக்கின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய தேர்தல் விதிமுறைகளுக்கமைய, இது தண்டணைக்குரிய குற்றமாகும் என்பதனால், இது தொடர்பில் ஆராந்து உரிய நடவடிக்கையை எடுக்குமாறு வேண்டுகோள் விடுப்பதாக, அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# நாகலகம சூட்டில் நால்வர் காயம்

குறித்த பிரதேசத்தில் உள்ள போதைப்பொருள் வர்த்தகர்களுக்கிடையில் இடம்பெற்ற தகராறே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கான காரணமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், காயமடைந்தவர்களுள் கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஒருவரும், அவரது சகாக்களும் உள்ளடங்குவதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரேரணையைக் கைச்சாத்திட்டார் பிரதமர்





தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட ஊடக ஒழுக்கக்கோவை நாடாளுமன்றில் முன்வைப்பது தொடர்பான பிரேரணையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று (02) காலை கையெழுத்திட்டார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம் (படங்கள்: ப்ரதீப் பத்திரண)



பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களை, வீடுகளிலோ, பொது இடங்களிலோ, எரியூட்டினால், சிறைத்தண்டனை அல்லது 10 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படுமென, மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது.

ரஷ்யாவுக்கான தேயிலை ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளதாக தேயிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. தேயிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோய் தொடர்பான விசேட ஆய்வாளர் கலாநிதி கீர்த்தி மோஹோட்டி தெரிவித்தார்.





“

**முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வந்த கட்சியானது, தலைகளை எண்ணி மொத்த வியாபாரம் செய்து, சமுதாயத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கும் துரதிர்ஷ்ட நிலைக்கு, இந்தக் குட்டித் தேர்தலின் மூலம் முடிவு கட்ட முன்வாருங்கள்**



அமைச்சர் ரிஷாட் பதியுதீன்



# ‘உள்ளிருந்து சென்றதுதான் எமக்குக் கவலை’

“கூட்டுத்தாபனத்தில் வேலை செய்பவர்களிடமிருந்து, குறுஞ்செய்தி (எஸ்.எம்.எஸ்) சென்றமைதான், எமக்கு கவலையளிக்கின்றது. இந்தச் செய்தியால்தான், எரிபெருள் தட்டுப்பாட்டுப் பிரச்சினை ஏற்பட்டது” என பெற்றோலிய வளத்துறை பிரதியமைச்சர் அனோமா கமகே தெரிவித்தார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில், நேற்று (02) இடம்பெற்ற புத்தாண்டு நிகழ்வில் கலந்துகொண்டு, உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

“அரச சேவையில் இருப்பவர்களுக்கு பிறப்பிலேயே புண்ணியம் கிடைத்துள்ளது. அரச உத்தியோகத்தர்கள் எத்தனைபேர் உள்ளனர். அதனால் உங்களது சேவைகளை உரியமுறையில் செய்யுங்கள்.

“இங்கு வந்த பிறகே எனக்குத் தெரியும் எமக்கு எப்படிப்பட்ட இராணுவம் உள்ளதென்று. அதற்குள் வருவதற்குப் பல பேர் எம்முடன் கதைக்கின்றனர். அமைச்சரையும் என்னையும் தேடி வருபவர்கள் நிறையபேர். எரிபொருள் நிலையத்துக்கான அனுமதியைப்பெற அல்லது நியமனம் தொடர்பாகவே சந்திக்க வருகின்றனர். என்ன இருந்தாலும் இத்தனை தூரம் வந்ததையிட்டு மகிழ்சியடைகின்றேன்.

“ஆனாலும், குறைபாடுகள் உள்ளன. இதைவிட நல்ல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க எனக்கு முடியும். அரச நிறுவனம் என்றாலும் நாங்கள் தனியார் நிறுவனத்தில் வேலைச் செய்வதுபோல வேலைசெய்யவேண்டும்.

“அரச நிறுவனங்களை, தனியார் நிறுவனமாக மாற்றவேண்டுமென்ற எண்ணம் எனக்குத் தோன்றுகின்றது. தனியார் நிறுவனத்தில் நானும் வேலைசெய்துள்ளேன் என்பதனால்தான் அந்த எண்ணம் தோன்றுகின்றது. “வேலையின் பெறுமதியை என்னால் உணர்ந்த முடிந்தமையால். இந்த வருடத்தில் சிறந்த வேலையையும், மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு என்ற நிலையை ஏற்படாதிருக்கவும் நானும் அமைச்சரும் மற்றும் நிர்வாகத்தினரும் எதிர்பார்க்கின்றோம்” என்றார்.

## தஸநாயக்க உள்ளிட்டோரது விளக்கமறியல் நீடிப்பு

கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கொமடோ டி.கே.பி.தசநாயக்க உள்ளிட்ட அறுவரை, எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (02) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு, கொழும்பில் வெள்ளை வானைப் பயன்படுத்தி, 11 இளைஞர்களைக் கடத்தி, அவர்களைக் காணாமற் செய்தமை தொடர்பில் கடற்படை முன்னாள் ஊடகப் பேச்சாளர் உள்ளிட்ட 6 பேர், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஊடாக கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## மருந்துக் களஞ்சியசாலையில் தீ

வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியசாலையில், நேற்றுக்காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால், அங்கிருந்த மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளனவென, பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸார், மின்சார சபையின் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் இணைந்து, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த வைத்தியசாலையின் குளிரூட்டியில் இருந்தே தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. எனினும், தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

## புத்தர் சிலைகள் குறித்து விசாரணை

தேர்தல் சட்டத்திட்டங்களை மீறும் வகையில், வேட்பாளர் ஒருவர், வாக்காளர்களுக்கு, புத்தர் சிலைகளைப் பகிர்ந்தளிக்கிறார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மாத்தளை பிரதேச சபையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரே, இவ்வாறு புத்தர் சிலைகளைப் பகிர்ந்தளிக்கிறார் என தனக்கு முறையிடப்பட்டுள்ளதாக, மாத்தளை உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஷானிக ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்Mirror

HAPPY BIRTHDAY

12 வயதிற்குட்பட்ட உங்கள் பிள்ளைகளின் பிறந்த நாள் வாழ்த்துகளை

தமிழ்மிரர் பத்திரிகையில் இலவசமாக பிரசுரிக்கலாம்.

உங்கள் பிள்ளைகளின் புகைப்படம், விவரங்கள், தகவல் தருபவரின் விவரங்களுடன் கீழ் காணும் அலுவலகத்திற்கு வருகைதரவும் அல்லது மின்னஞ்சல் மூலமாக தொடர்புகொள்ளவும்.

Wijeya Newspapers Ltd
36, Hyde Park Corner, Colombo-02

மேலதிக விவரங்களுக்கு
0773421476 / 0771 426439
E-mail: tamilmirroradvt@wijeya.lk

என்னால் செய்யமுடியவில்லை என்றால்

## ‘பதவியில் இருக்கமாட்டேன்’

”நிறுவனத்தை, ஊழல் இன்றி, சுத்தப்படுத்துகின்றோம். ஆறு மாதகாலப்பகுதிக்குள் பாரிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கமுடிந்தது. அதனால்தான், எமது அமைச்சர்களில் நிறையபேர் எனக்கு க்ளினிங் சேவையின் தலைவரென கூறுகின்றனர். நான் நாடு என்ற ரீதியிலேயே முடிவுச் செய்வேன். என்னால் செய்யமுடியவில்லை என்றால் அந்தப்பதவியில் இருக்கமாட்டேன்” என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.



பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில், நேற்று (02) இடம்பெற்ற புத்தாண்டு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

‘ஐ.ஓ.சி சிறுவனத்தின் எரிபொருள் விநியோகம் தொடர்பாக கடந்த காலத்தில் பிரச்சினை ஏற்பட்டது. இன்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பாக மூன்றாம் நான்காம் தரப்பினரை கொண்டுவர முயல்கின்றனர். ஆனால், இந்த நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்றும் எண்ணம் எங்களில் யாருக்கும் கிடையாது.

“எங்களால் மட்டுமே இந்த நிறுவனத்தை பாதுகாக்க முடியும். இதனால், இந்த நிறுவனத்தில் உள்ளவர்கள் 99 சதவீதம் வேலைசெய்தாலும் பிரோஜனமில்லை. நாங்கள் மிகுதியையும் செய்து முடிக்கவேண்டும். இந்த நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகளை செய்து முடிக்கவேண்டும். 40 வருடங்களுக்கு மேலாக அமைக்க முடியாத எண்ணெத் தாங்கிகளை நாங்கள் இன்று அமைக்கவுள்ளோம்.

“மேலும் 6 எண்ணைத் தாங்கிகளை ஆறு மாதத்துக்குள் அமைக்க திட்டமிட்டுள்ளோம். கடந்த காலத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை புனர்நிர்மாணம் செய்யவேண்டிய தேவையிருக்கவில்லை” என்றார்.

“ஆறுமாத காலத்துக்குள் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்போம் என்பதை,கடமைப்பாட்டுடன் நான் சொல்லுகின்றேன். கூடிய விலைக்கு வெளியிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வது நல்லதென்று சிலர் கூறுகின்றனர். ஆனால், நான் நாடு என்ற ரீதியிலேயே முடிவு செய்வேன். என்னால் செய்யமுடியவில்லை என்றால் அந்தப்பதவியில் இருக்கமாட்டேன்” என்றார்.

“நான், அமைச்சு பதவியை பொறுப்பேற்போது, இதில் நிறையப்பிரச்சினைகள் உள்ளன. அதனை சரிசெய்து தரும்படி கேட்டுக்கொண்டார். இதையே பிரதமரும் சொன்னார். எனக்கு துறைமுகத்தை கொடுத்தபோது அவர்களே சொன்னார்கள் இது இலகுவான இடமல்ல. இதனைச் சுத்தப்படுத்தி (ஊழலை ஒழிக்கவேண்டும்) தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

“அதனடிப்படையில் செயற்பாடுகளை முன்னெடுத்தேன். அதனால், க்லீனிங் சேவிஸ் தலைவரென, அமைச்சர்கள் நிறையபேர் எனக்கு கூறுகின்றனர். துறைமுகத்தை நான், பொறுப்பேற்ற பின்னர் அதனை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றினேன்” என்றார்.

## ‘ஏறாவூரில் 6.7 சதவீத இளவயது மகப்பேறுகள்’

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

“2016ஆம் ஆண்டு, ஏறாவூரில் 992 மகப்பேறுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 49 மகப்பேறுகள் இளவயதுக் கர்ப்பமடைதலால் ஏற்பட்டவைபயாகும். இது ஒட்டு மொத்த மகப்பேற்றில் 4.9 என்ற சதவீதமாகுமெனவும் கடந்த ஆண்டு (2017) இது 6.7 என்ற சதவீதமாக அதிகரித்துள்ளது” என ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி கலையரசி துரைராசசிங்கம் தெரிவித்தார்.

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவிலுள்ள கிராமப்புற முஸ்லிம் பிரதேசங்களில் இளவயதுக் கர்ப்பமடைதல் பற்றி அறிவூட்டுவதற்குத் தோதாக பிரதேச செயலகம், மற்றும் விவாகப் பதிவாளர் ஆகியோருடன் இணைந்து



> **இள வயதெல்லையில் திருமணம் செய்தல் என்பது தாய் சேய் மற்றும் சமூக ஆரோக்கியத்துக்குக் கேடானது**

பணியாற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏறாவூர் சகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் இளவயதுக் கர்ப்பந்தரிப்புகள் அதிகரித்துள்ளமை சம்பந்தமாக புள்ளிவிவரங்களை நேற்றுத் தெரிவித்து கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவின் பின்தங்கிய கிராமப் புறங்களில் இளவயதுத் திருமண வீதம் அதிகமாகவுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

“2017ஆம் ஆண்டு ஏறாவூரில் 1063 மகப்பேறுகள் கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளை இவற்றில் 72 மகப்பேறுகள் இளவயதுக் கர்ப்பத்தால் ஏற்பட்டவையாகும்.

“19 வயதுக்குட்ட காலத்தில் கர்ப்பம் தரித்தலே இளவயதுக் கர்ப்பம் எனப்படுகின்றது. இள வயதெல்லையில் திருமணம் செய்தல் என்பது தாய் சேய் மற்றும் சமூக ஆரோக்கியத்துக்குக் கேடானது” என்றார்.

## செலவுகளை ஏற்றது ஜனாதிபதி செயலகம்

வீரகேசரி பத்திரிகையின் சிரேஷ் ஊடகவியலாளர் மறைந்த ப.பன்னீர்செல்வத்தின் இறுதி கிரியைகள்,



பொரளை கனத்தை மாயனத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதேவேளை, இறுதி கிரியைகளுக்கான சகல செலவுகளையும், ஜனாதிபதி செயலகம் பொறுப்பேற்று கொண்டுள்ளதென, ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நன்னீர் மீன் பிடி அதிகரிப்பு

“நாட்டில் நன்னீர் மீன்பிடி தொழிற்றுறை மூலம் 2017ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாத காலப்பகுதி வரையில் 3இலட்சத்து 35 ஆயிரத்து 750 மெற்றிக் தொன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.



“2016ஆம் ஆண்டுடன் இத்தொகையை ஒப்பிடுகையில் இது 1.2 சதவீதம் அதிகரித்துள்ளது என, கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது,

“2017ஆம் ஆண்டில் நிலவிய வரட்சியான காலநிலை கரையோரப் பகுதியில் நிலவிய கடும் மழை, கடற்கொந்தளிப்பு முதலானவை, மீன் உற்பத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

“இருப்பினும், நாட்டில் நன்னீர் மீன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இத்துறையின் மூலம் தேசிய மீன் உற்பத்திக்கு 49.5 சதவீத பங்களிப்பு இடம்பெற்றுள்ளது.

“2017ஆம் ஆண்டில் ஆழ்கடல் தொழில் மூலம் பெறப்பட்ட மீன் தொகையில் 9.2 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

“கரையோர கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளோர் நாளாந்தம் நாட்டுக்கு தேவையான மீனை வழங்கி வருகின்றனர். நாளாந்தம் பொதுமக்கள் புதிய மீன்களைப் பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

“விசேடமாக இதற்கு உதவி வரும் கடற்றொழில் கூட்டுதாபனத்தின் விற்பனை கிளையின் எண்ணிக்கையை அதிகரிக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

“2018ஆம் ஆண்டில் இலங்கை கடற்றொழில் கூட்டுதாபனத்துக்குட்பட்ட விற்பனை கிளைகள் 50 திறக்கப்படவுள்ளன” என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

**ஹப்புத்தளை பிரதேச சபை**

**2018ஆம் ஆண்டுக்கான விநியோகஸ்தர்களைப் பதிவு செய்தல்**

ஹப்புத்தளை பிரதேச சபைக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிக்கும் விநியோகஸ்தர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனைத்து விண்ணப்பங்களும், 2018.01.15க்கு முன்னர் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நிபந்தனைகள்**

- கீழ்க் காணப்படும் ஒவ்வொரு விநியோகம் மற்றும் சேவைக்காக, தனித்தனியே தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் முன்வைக்கப்படல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களுக்கும், தனித்தனியே தலா 600.00 ரூபாய் பதிவுக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். அந்தக் கட்டணம், காசோலையாகவோ அல்லது பணமாகவோ, அலுவலக நாட்களில், அலுவலகத்துக்கு வந்து செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டைக் பெற்றுக்கொள்ள முடியும்.
- 2018ஆம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிப்பதற்கான சாதாரணக் விலைகள், பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. முன்வைக்கப்படும் விலைகளுக்கு, 6 மாதகால நிர்ணய விலையொன்று காணப்படல் வேண்டும். அதற்கமைய, 6 மாத காலத்துக்கு, பொருட்கள் விநியோகம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- விநியோகஸ்தர்கள், 60 நாட்களுக்கான காலத்துக்கு, கடனடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

**விநியோகம்**

1. மின்சார உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
2. அலுவலக உபகரணங்கள் மரத்தளபாடங்கள்/ இரும்பு மற்றும் சமயலறை உபகரணங்கள்
3. எழுது பொருட்கள், அச்சிடப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்கள்
4. வாகன உதிரிப்பாகங்கள், டயர்கள், டியூப்கள் மற்றும் பற்றரிகள்
5. சுகாதாரப் பிரிவு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள்
6. நூலகப் புத்தகங்கள்
7. கட்டட நிர்மாணத்துக்குத் தேவையான கல், மணல், தார், கட்ட நிர்மாணப் பொருட்கள் மற்றும் பராமரிப்பு உபகரணங்கள்
8. விளையாட்டு உபகரணங்கள்
9. அனைத்து வகையான குழாய்கள் மற்றும் கொங்கிரீட் உற்பத்திகள்
10. தும்பு மற்றும் இறப்பர் உற்பத்திகள்
11. பிரதி இயந்திரங்கள் மற்றும் அச்சு இயந்திரங்களுக்குத் தேவையான மை மற்றும் டோனர்கள்
12. கணினி இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்

**சேவைகள்**

1. வாகன சேவை மற்றும் வாகன திருத்தும் சேவை (அதிகாரப் பிரதேசம் அல்லது அதனை அண்மித்த பகுதியாக இருத்தல்)
2. அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரப் பழுதுபார்த்தல்
3. இறப்பர் முத்திரை வெட்டல், அறிவித்தல் பதாதைகளை அச்சிடல்
4. சட்டச் சேவை மற்றும் ஆய்வுச் சேவை வழங்கள்
5. வாடகை அடிப்படையில் இயந்திர விநியோகம்

**இருக்கவேண்டிய தகுதிகள்**

1. திணைக்களம்/ நிறுவனம்/ தனிநபர்/ வியாபாரமாகப் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழ்கள் அல்லது பதிவு ஆவணங்கள்
2. உத்தரவாத காலமுள்ள பொருட்களுக்கான விலைகள் முன்வைக்கப்படும் போது, அந்த உத்தரவாதக் காலம் முன்வைக்கப்படல் வேண்டும்.
3. வாகனம் பழுதுபார்ப்பது தொடர்பில், ஊவா மாகாண சபையின் அனுமதி பெற்ற மோட்டார் வாகன கராஜாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல், விசேட தகுதியாகக் கொள்ளப்படும்.

**வை.எம்.யூ.பீ. யாப்பா**
**செயலாளர் – ஹப்புத்தளை பிரதேச சபை**
**அதிகாரங்களை நிறைவேற்றும் அதிகாரி**
**2017.12.28**




யாழ்ப்பாணத்தில், நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், இருவர் உயிரிழந்துள்ளனர். (எஸ்.நிதர்ஷன்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் மூலம் ஓய்வூதியம் பெறும் நபர்கள், 2018ஆம் ஆண்டுக்கான தமது ஓய்வூதிய வதிவிட சான்றிதழை எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரிடம் சமர்ப்பிக்குமாறு, பிரதேச செயலாளர் தேவநந்தினி பாபு தெரிவித்தார். (எஸ்.குகன்)




“

**இலங்கையின் வறுமை மிகுந்த மாவட்டங்களாக மன்னார் மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டமும் காணப்படுகின்றன. இவ்வாறு வறுமையில் வாழும் இரு மாவட்டங்களுக்கும் உலருணவு நிவாரணங்களை வழங்க வேண்டும். வடமாகாண சபையின் 53ஆவது அமர்வில் இதனை வலியுறுத்தியுள்ளபோதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை**



**–வடமாகாண சபை உறுப்பினர்– து.ரவிகரன்**

# சர்ச்சையைக் கிளப்பியது ‘ஒரே இனம்’

■ எஸ்.நிதர்ஷன்

அரச அலுவலகத்தில் வருட ஆரம்பத்தில் நடைபெறும் சத்தியப் பிரமாணத்தில், இந்த வருட சத்திய பிரமாணம் எடுப்பதில், தமிழ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களிடத்தே சர்ச்சைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அரச நிர்வாக முகாமைத்துவ அமைச்சால் புதுவருடத்தை முன்னிட்டு, அரச திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அரசாங்க சேவை சத்தியப் பிரமாண உறுதிமொழி அறிவித்தல் குறிப்பில், ஒரே இனம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாலேயே, இத்தகைய சர்ச்சைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு, அரச அலுவலர்கள் நேற்று முன்தினம் (01) சத்தியப் பிரமாணம் மேற்கொண்டனர். இதன் பிரதான நிகழ்வு ஜனாதிபதி தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அங்கு ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுக்கப்பட்டது.

இதன்போது, எடுக்கப்பட்ட சத்தியப் பிரமாணத்துக்கமையவே, மேற்படி விடயம் குறித்தான அறிவித்தலை அரச நிர்வாக முகாமைத்துவ அமைச்சால் நாட்டிலுள்ள சகல அரச திணைக்களங்களுக்கும் அனுப்பி



அரசாங்க சேவை சத்தியப் பிரமாணம் / உறுதி மொழி

இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு சனவரி மாதம் கடமைகளைத் தொடங்கும் முதல் நாளான இன்றைய தினம்,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
இந் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை யதார்த்தமாக மாற்றியமைக்கும்
புதியதோர் ஆண்டின் ஆரம்பத்தில் காலடிவைக்கிறோம்.

இன்று ஆரம்பமாகும் புத்தாண்டினுள்
ஒரே நாட்டின், ஒரே இனத்தின், ஒரே கொடியின் நிழலில்
ஐக்கியமாகவும், ஒரே மனப்பான்மையுடனும் வளர்ச்சியடைகின்ற தாய் நாட்டை
அபிவிருத்தி செய்யும் பாரிய சவாலை வெற்றி கொள்வதற்காக
அனைவரும் பயனடையும் வகையிலான துரித அபிவிருத்தியினூடே
2018 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தியை மேம்படுத்துவது தொடர்பாகவும்
இந்நாட்டு மக்களுக்கான
பாதுகாப்பானதோர் எதிர்காலத்தை தோற்றுவிப்பதற்காக
பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரசாங்க ஊழியனான நான்,
அரசாங்க கொள்கைகள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை
நடைமுறைப்படுத்தும் பொருட்டு என்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற கடமைப்
பொறுப்புக்களை
வினைத்திறனாகவும்,
பயன்மிக்கதாகவும்,
திடசங்கற்பத்துடனும்,
உயரிய அர்ப்பணிப்புடனும்,
நேர்மையாகவும்,
மக்களுக்கு பக்கச்சார்பின்றியும்,
நிறைவேற்றுவேன் என்று சத்தியப்பிரமாணம் செய்கின்றேன் / உறுதிமொழிகின்றேன்.

வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட சத்தியப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

“2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடமைகளைத் தொடங்கும் முதல் நாளான இன்றைய தினம், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இந்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை யதார்த்தமாக மாற்றியமைக்கும் புதியதோர் ஆண்டின் ஆரம்பத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம்.

“இன்று ஆரம்பமாகும் புத்தாண்டினுள் ஒரே நாட்டின், ஒரே இனத்தின், ஒரே கொடியின் நிழலில் ஐக்கியமாகவும் ஒரே மனப்பான்மையுடனும் வளர்ச்சியடைகின்ற தாய் நாட்டை அபிவிருத்தி செய்யும் பாரிய சவாலை வெற்றி கொள்வதற்காக, அனைவரும் பயனடையும் வகையிலான துரித அபிவிருத்தியினூடே பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரசாங்க ஊழியரான நான், அரசாங்க கொள்கைகள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தும் பொருட்டு என்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற கடமைப் பொறுப்புகளை வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும் திடசங்கற்பத்துடனும் உயரிய அர்ப்பணிப்புடனும் நேர்மையாகவும் மக்களுக்கு, பக்கச் சார்பின்றியும் சத்தியப்பிரமாணம் செய்கின்றேன் அல்லது உறுதிமொழிகின்றேன்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்குறிப்பில், “ஒரே இனம்” என்ற பந்திலேயே தமிழ் அரச அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் மத்தியில் கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழ். மேல் நீதிமன்றத்தால் 41 பேருக்கு மரண தண்டனை தீர்ப்பளிப்பு

■ எம். றொசாந்த், டி.விஜிதா

யாழ். மேல் நீதிமன்றத்தில் கடந்த 13 வருடங்களில் 3 இராணுவத்தினர் உட்பட 41 பேருக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக, யாழ். மேல் நீதிமன்ற புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக மா.இளஞ்செழியன் கடமையேற்ற கடந்த மூன்று வருட கால பகுதியில், 31 பேர் மரண தண்டனை குற்றவாளிகளாகக் காணப்பட்டு, நீதிபதியால் மரண தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றம், யாழ் மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பின்னர் இது வரை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 9 நீதிபதிகள் கடமையாற்றியுள்ளனர். அந்த வகையில், கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு வரை நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு வரை நீதிபதி எஸ்.தியாகேந்திரன், 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரை நீதிபதி பி.ஸ்வர்ணராஜா, 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை நீதிபதி ஆர். ரி.விக்னராஜா, 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டு வரை நீதிபதி எஸ். பரமராஜா, 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரை நீதிபதி ஜெ.விஸ்வானந்தன், 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை நீதிபதி அ.பிறேம்சங்கர், 2014ஆம் ஆண்டு தொடக்கம் 2015 மே மாதம் வரை நீதிபதி திருமதி கே.சிவபாதசுந்தரம் ஆகியோர் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதிகளாக கடமையாற்றியுள்ளனர். அத்துடன், கடந்த 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் இன்று வரை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிபதி மா.இளஞ்செழியன் கடமையாற்றி வருகிறார்.

மேற்குறிப்பிட்ட நீதிபதிகளின் சேவைக்காலப்பகுதியிலேயே, மேற்குறித்த 41 பேருக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன், கடந்த 2005, 2008, 2010ஆம் ஆண்டுகளில், தலா ஒருவருக்கும் 2012 ஆம் ஆண்டில் 2 பேருக்கும் 2013ஆம் ஆண்டில் ஒருவருக்கும் 2014ஆம் ஆண்டில் 4 பேருக்கும், 2015ஆம் ஆண்டில் 8 பேருக்கும் 2016ஆம் ஆண்டில் 11 பேருக்கும் 2017ஆம் ஆண்டில் 12 பேருக்கும் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ். மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு, நீதவான் நீதிமன்றங்கள் ஊடாக வழக்கு விசாரணைகளை இடம்பெற்றன. பின்னர், மேல் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அதில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்களுக்கே, மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விடுவிக்கப்பட்ட காணிகளில் துப்புரவு

■ சண்முகம் தவசீலன்

படையினரால் விடுவிக்கப்பட்டுள்ள கேப்பாபுலவு காணிகளுக்குச் சென்ற மக்கள், தமது காணிகளைத் துப்புரவாக்கும் நடவடிக்கையில், நேற்று முன்தினம் (01) ஈடுபட்டனர்.

கேப்பாபுலவு மக்களுக்குச் சொந்தமான காணிகளில், படையினர் அபகரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் 28ஆம் திகதி மக்கள் முன்னிலையில், படைத்தரப்பில் இருந்து மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (01) மக்கள் தமது காணிகளில் சென்று துப்புரவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## ‘புத்தாண்டிலும் நடுவீதியில் உள்ளோம்’

“பரம்பரையாக நாங்கள் வாழ்ந்து தொழில் செய்த எமது நிலத்தைத் தர மறுத்து, புத்தாண்டிலும் எங்களை வீதியிலிருந்து போராட இந்த அரசாங்கம் விட்டிருக்கின்றது” என, பூநகரி - இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரணைதீவுப் பிரதேசத்தில், நூற்றாண்டு காலம் மக்கள் தொன்மையாக வாழ்ந்த இடத்திலிருந்து அப்பகுதி மக்கள் கடந்த யுத்தம் காரணமாக வெளியேற்றப்பட்டபோதும், இன்று வரை அவர்களை அந்த நிலத்தில் சென்று வாழ்வதற்கான உரிமை வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் போது, இந்த மக்கள் தங்களை மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தப்பட்டபோதும், பல்வேறு காரணங்களைக் காட்டி மக்கள் மீள்குடியேற்றம் தடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில்,

கடந்த மே மாதம் 1ஆம் திகதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

புத்தாண்டு தினத்திலும் வீதியில் போராடி வருகின்றனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள், எங்கள் நிலத்தில் நாங்கள் சென்று வாழ்வதற்கான உரிமையை, அங்கு தொழில் செய்வதற்கான உரிமையை விரைவாகப் பெற்றுத்தருமாறு தெரிவித்துள்ளனர்.

## தமிழ்த் தேசிய பேரவைக்கு ஆசிர்வாதம்

■ எம்.றொசாந்த்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பேரவையினர் நேற்று முன்தினம் (01) சின்மயாமிஷன் பிரம்மச்சாரிய யாக்கிரத சைதண்யா சுவாமிகள் மற்றும் யாழ். நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பிரம்மச்சாரிய சுவாமிகள் ஆகியோரைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுள்ளனர்.

யாழ். சின்மயாமிஷன் சுவாமிகள் ஆச்சிரமத்தில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற சந்திப்பில், தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர முதல்வர் வேட்பாளர் வி.மணிவண்ணன் தலைமையிலான குழுவினர் சுவாமிகளைச் சந்தித்தனர். இதன்போது, அவர்களுடன் கலந்துரையாடிய சுவாமிகள், அவர்களுக்கு ஆசிர்வாதம் வழங்கினார். அதையடுத்து ,நல்லை ஆதீன குருமுதல்வரைச் சந்தித்த தமிழ்த் தேசிய பேரவையினர் நல்லைஆதீனக் குருமுதல்வரிடமும் ஆசிர்வாதம் பெற்றனர்.

இதேவேளை, யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோரைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றனர்.

## மாணவர்களை சேர்ப்பதற்கு பணம் அறவீடு

■ செல்வநாயகம் கபிலன்



அச்சுவேலி பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில், தரம் 6க்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காக, 3 ஆயிரம் ரூபாய் பணம் அறவிடப்படுவதாக, பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

கட்டடப் பணி ஒன்றுக்காக எனக் கூறியே, ஒவ்வொரு மாணவர்களிடம் இருந்து, 3,000 ரூபாய் பணம் அறவீடு செய்யப்படுகிறது. பாடசாலை நிர்வாகத்தின் இச்செயற்பாடு காரணமாக, மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் பெற்றோர், பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பாக, அச்சுவேலி நகரப்பகுதியில் இருந்து புறநகர் பாடசாலைகளில் கல்விக் கற்ற மாணவர்கள், தரம் 6க்காக அச்சுவேலி பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இணைப்பது வழமை. கடந்த காலங்களில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு இல்லாத நடைமுறை தற்போது பின்பற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையில் கட்டுமாணப் பணிக்கு, மாகாண கல்வி அமைச்சு நிதி வழங்கி, கட்டடப்பணி இடம்பெற்று வருகின்ற நிலைமையில், கட்டுமாண நிதிக்கென கூறி மாணவர்களை இணைப்பதற்கு பணம் அறவிடும் நடவடிக்கையை, அடிமட்டக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் பெற்றோர், பணத்தைப் புரட்டுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பில் கல்வி அதிகாரி சற்குணராஜாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

“மாணவர்களை பாடசாலையில் இணைப்பதற்கு பணம் வாங்குவது சட்டரீதியான குற்றமாகும். பாடசாலையில் மாணவர்களை இணைப்பதற்கும் கட்டுமாணப் பணி என கூறி பணம் வசூழிப்பதற்கு பாடசாலை நிர்வாகத்துக்கு அனுமதியில்லை. இது தொடர்பில் பெற்றோர்கள் முறைப்பாடு பதிவு செய்யும் பட்சத்தில் சட்ட நடிவடிக்கை மேற்கொள்ளப்படும்” எனத் தெரிவித்தார்.

## இரண்டாவது நாளாகவும் ஸ்தம்பிதம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

வடக்கில், இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் இரண்டாவது நாளாகவும், நேற்று (02) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், இலங்கை போக்குவரத்துச் சபையின் மன்னார் மாவட்ட ஊழியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். எனினும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கம் வடமாகாண தனியார் போக்குவரத்துச் சங்கத்துடன் இணைந்து விசேட போக்குவரத்து சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னாரில் இருந்து மக்கள் தனியார் பஸ்கள் மூலம் தமது போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## வவுனியா பஸ் நிலைய விவகாரம்: ‘போராட்டம் நடத்துவோம்’

### வர்த்தக சங்கம் தெரிவிப்பு

“சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில், பஸ் நிலைய வர்த்தகர்களுக்குச் சார்பாக, ஏனைய வர்த்தகர்களும் போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளோம்” என, வவுனியா வர்த்தக சங்கத்தின் தற்காலிக தலைவர் எஸ்.கிரிதரன் தெரிவித்தார்.

வவுனியா வர்த்தக சங்கத்தில், நேற்று (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

“வவுனியா பஸ் நிலைய வர்த்தகர்கள் தொடர்பில் சரியான முடிவெடுக்காத பட்சத்தால், வர்த்தகர்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, உள்ளூர் பஸ் சேவையை பழைய பஸ் நிலையத்தில் ஓட விடும்பட்சத்தில் வர்த்தகர்கள் பாதிப்படையாது தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இது தொடர்பில் அதிகாரிகள் சரியான முடிவு எடுக்க வேண்டும்.

“இன்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) இதற்கு ஒரு சாதகமான பதில் கிடைக்காதவிடத்து, ஏனைய வர்த்தகர்களும் பஸ் நிலைய வர்த்தகர்களுக்கு ஆதரவுத் தெரிவித்து, போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளனர்” எனத் தெரிவித்தார்.

## அச்சுவேலி பொதுச்சந்தை பிரதேசசபை நிர்வாகத்துக்கு கைமாறியது

### நாளாந்த வரி அறவீடு 50 சதவீதத்தால் குறைவு

வலி கிழக்கு பிரதேச சபையின் நிர்வகிப்பின் கீழ் உள்ள அச்சுவேலி பொதுச்சந்தையை, நேற்று முன்தினம் (01) முதல் பிரதேச சபை நேரடியாக எடுத்து நடத்துகின்றது.

கடந்த வருடம் சந்தையைப் பெற்ற குத்தகைக்காரர், மரக்கறி வியாபாரிகளிடம் இருந்து நாளாந்த வாடகையாக 300 ரூபாய் வசூலித்து வந்துள்ளனர். அதேபோன்று, மீன் வியாபாரிகளிடம் இருந்து 1 கிலோகிராமுக்கு 6 ரூபாய் என்ற ரீதியில் வசூலித்துள்ளார்.

இதனால், சந்தை வியாபாரிகள் பலர் நட்டம் காரணமாக, சந்தை வியாபாரத்தை கைவிட்டுச் சென்று வேறு தொழில் செய்து வருகின்றனர். இம்முறை பிரதேசசபையால் சந்தை குத்தகைக்குக் கேள்வி மனுப்பத்திரம் விடுக்கப்பட்டிருந்த போதும், அதனைப் பெறுவதற்கு யாரும் முன்வந்திருக்கவில்லை. மாறாக, மாட்டு இறைச்சி கடையும் கோழி இறைச்சி கடையுமே குத்தகைக்குப் பெறப்பட்டுள்ளன.

இந்நிலையில், அச்சுவேலி பொதுச்சந்தையை எடுத்து நடத்துவதற்கு, யாரும் முன்வராத காரணத்தால், நேரடியாக பிரதேசசபை நேற்று முன்தினம் (01) முதல் எடுத்து நடத்துகின்றது.

**“ கடந்த காலங்களில், சந்தையை எடுத்து நடத்தியவர்கள், நாளாந்த இட வாடகையாக ஒரு வியாபாரியிடம் இருந்து 300 ரூபாய் பணம் அறவிட்டிருந்தனர். இதனால், மீன் வியாபாரிகள் பலர் தொழிலை விட்டுச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன**

இதையடுத்து, இம்முறை சந்தை வியாபாரிகளிடம் இருந்து நியாயமான முறையில் நாளாந்த வரிப்பணம் அறவீடு செய்வதாக, வியாபாரிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில், சந்தையை எடுத்து நடத்தியவர்கள், சந்தை வியாபாரிகளை மோசமான முறையில் நடத்தியதுடன், நாளாந்த இட வாடகையாக ஒரு வியாபாரியிடம் இருந்து 300 ரூபாய் பணம் அறவிட்டிருந்தனர். இதனால், மீன் வியாபாரிகள் பலர் தொழிலை விட்டுச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீள்குடியேற்ற நடவடிக்கைகளை நேரில் ஆராய்ந்தார் அனந்தி

■ எஸ். நிதர்ஷன்



வலி. வடக்கு, தையிட்டி பகுதியில் நடைபெற்று வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை, வட மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல் அமைச்சர் அனந்தி சசிதரன், அண்மையில் (29) நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டார்.

கால் நூற்றாண்டு கடந்த இடப்பெயர்வு காலவெளியில், தன்னியல்பாகக் குடிப்பரம்பலில் ஏற்படும் அதிகரிப்புக் காரணமாக, சொந்தமாக காணிகள் இல்லாததுடன், தற்காலிக முகாம்களில் வசித்து வந்த மயிலிட்டியைச் சேர்ந்த 38 குடும்பங்களின் மீள்குடியேற்றத்துக்காக, தையிட்டி பகுதியில் விடுவிக்கப்பட இடத்தில் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவ்வாறு அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்யும் பணி, கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது. அப்போது, அங்கு சென்ற அமைச்சர், மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அத்துடன், அத்தியாவசியமாகத் தேவைப்படும் குடிநீர் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்து கொடுப்பது குறித்து அங்கிருந்தவாறே உரிய அதிகாரிகளுடன் அலைபேசியில் தொடர்பு கொண்டு, ஆலோசனை வழங்கினார்.

இதையடுத்து, மீள்குடியேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள், தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றித்தருமாறு, அமைச்சரிடம் கோரிக்கை கடிதம் கையளித்திருந்தனர். இது தொடர்பாக, கடந்த 29ஆம் திகதி மாலை நடைபெற்ற வட மாகாண அமைச்சர் வாரியக் கூட்டத்தின் போது, முதலமைச்சருக்குத் தெரியப்படுத்தியதுடன், அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



கடந்த வருடம், நாடளாவிய ரீதியில் 183,235 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனரென, தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை நகரிலுள்ள பள்ளிவாயலுக்கு, திங்கட்கிழமை சென்ற நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன், வழிடுபாடுகளில் ஈடுபட்டார்.



“

**ஒரு வருடத்துக்கு மேலாகியும், ஆசிரியர் உதவியாளர் விடயங்களில் கல்விப் பணியகம் எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதனால் பாதிப்படைந்துள்ள ஆசிரியர் உதவியாளர்கள், தத்தமது கண்ணீர் கதையை கூறி, என்னிடம் முறையிட்டுள்ளனர்**



பதுளை மாவட்ட எம்.பி அ.அரவிந்தகுமார்

## ரூ.40 இலட்சம் வருமானம்

செ.தி.பெருமாள்

இலங்கை போக்குவரத்துச் சபையின் ஹட்டன் டிப்போவுக்கு, கடந்த வாரம் மட்டும் 40 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்துள்ளதாக, டிப்போ அதிகாரி ரோஹன சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம், நீண்ட விடுமுறை வழங்கப்பட்டதால், சிவனொளிபாத மலைக்கு வருகை தந்த யாத்திரிகர்கள் மற்றும் கிறிஸ்மஸ் விடுமுறையில் வந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

இதனால், இ.போ.சவின் ஹட்டன் டிப்போவுக்கு அதிக வருமானம் கிடைத்ததாக, அவர் மேலும் கூறினார்.

## தமிழ் பாடசாலைகள் புறக்கணிப்பு

எம்.செல்வராஜா

“மிகவும் பின்தள்ளப்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு, பாதணிகள் வழங்கும் விடயத்தில், தமிழ் பாடசாலைகள் பல புறக்கணிக்கப்பட்டுள்ளன” என்று, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இந்தப் புறக்கணிப்பு குறித்து, அ.அரவிந்தகுமார் எம்.பி, வெலிமடை கல்வி வலயப் பணிப்பாளருக்கு, அவசரக் கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

“மாணவர்களுக்கு பாதணிகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் வவுச்சர்கள் வழங்கும் வேலைத்திட்டம் கல்வியமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மிகவும் பின்தங்கிய பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 1,200 ரூபாய் முதல் 1,500 ரூபாய் வரை வவுச்சர் வழங்கப்படுகின்றது.

“வெலிமடை கல்வி வலயப் பாடசாலைகளுக்கு, பாதணி வவுச்சர்கள் வழங்கப்பட்ட போதிலும், கம்பஹா தமிழ் வித்தியாலயம், லக்கிலேண்ட் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர், மாணவிகளுக்கு, பாதணி வவுச்சர்கள் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

“ஆனால், லக்கிலேண்ட் தமிழ் வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள சிங்கள வித்தியாலயம் உள்ளிட்ட அனைத்து சிங்கள வித்தியாலய மாணவர் மாணவிகளுக்கும் பாதணி வவுச்சர்கள் வழங்கப்பட்டுள்ளன.

“நல்லிணக்கம், சகவாழ்வு என்றெல்லாம் நடைமுறைப்படுத்தி வரும் நல்லாட்சி அரசுக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில், ஓர் இனம் புறக்கணிக்கப்படுவதை எம்மால் அனுமதிக்க முடியாது” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 25ஆவது ஆண்டு விழா

முஹம்மது ஜலீல்

மாத்தளை அல்குல்லியதுல் ஹரீமிய்யா அரபுக் கல்லூரியின் 25ஆவது ஆண்டு பூர்த்தியின் வெற்றி விழாவும் 7ஆவது பட்டமளிப்பு விழாவும், மாத்தளை நகர ஜும்ஆ மஸ்ஜிதில், எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு, நடைபெறவுள்ளது.

தொழிலதிபர் எஸ்.எம்.மன்சூர் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சிறப்புரையாளராக ஜமியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி கலந்துகொள்ளவுள்ளார்.

நாடளாவிய ரீதியில் பிரபல உலமாக்கள், மௌலவிமார்கள் பிரதேச பிரமுகர்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கல்லூரியில், பிக்ஹ் கட்டக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் மூவருடன் ஹாபிழ்கள் 28பேரும் ஆலிம்கள் 23பேரும் பட்டமளித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

உலக தமிழ் ஆசிரியர் தினத்தை

# ‘ஏற்படுத்த முயற்சி’

டி.ஷங்கீதன்

உலக தமிழ் ஆசிரியர் தினத்தை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறியுள்ள அவர்,

“நான் அண்மையில் மலேசியாவுக்கு விஜயம் செய்து, அந்நாட்டின் கல்வி அமைச்சர் கமலநாதனுடன் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கல்வி நிலைப்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினேன். இதன்போது, ‘உலக தமிழ் ஆசிரியர் தினம்’ என்ற ஒன்றை ஏற்படுத்தினால் என்ன என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.



“இது தொடர்பாக, சிங்கப்பூர் நாட்டின் கல்வி அமைச்சர், அதேபோல தமிழ் நாட்டின் கல்வி அமைச்சர் செங்கோட்டையன் ஆகியோருடனும் கலந்துரையாடி, ஒரு தீர்மானத்தை ஏற்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

“அதன் பிரகாரம், எதிர்வரும் வெள்ளிக்கிழமை (5) மாலை 5 மணியளவில் இந்தச் சந்திப்பு, இந்தியா, சென்னையில் அமைந்துள்ள லீ மெரிடியன் விருந்தகத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் நான் உட்பட மலேசியா, சிங்கப்பூர், தமிழ் நாடு ஆகிய நாடுகளின் கல்வி அமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளோம்.

“முதலில் எமக்குள் ஒரு தீர்மானத்தை எடுப்பதுடன் அதன் பின்னர், சர்வதேசத்துக்கு எவ்வாறு கொண்டு செல்வது என்பது தொடர்பாக நாங்கள் தீர்மானிக்க உள்ளோம்.

“விசேடமாக இந்த நான்கு நாடுகளின் கல்வி அமைச்சர்கள் கலந்துகொள்வதில் ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. மேற்படி மூன்று நாடுகளிலும் தமிழ்மொழி தேசிய மொழியாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நாடுகளில், தமிழர்கள் அதிகமாக செறிந்து வாழ்கின்றார்கள்.

“இந்த தினத்தை ஏற்படுத்துவதுடன் இதனை ஓர் அமைப்பாகவும் செயற்படுத்த முடியுமா என்பது தொடர்பாகவும் விரிவாக ஆராய உள்ளோம்.

“உலக தமிழ் ஆசிரியர் அமைப்பு என்ற ஒன்றை ஏற்படுத்த முடியுமானால் அதன் மூலமாக அனைத்து நாடுகளிலும் உள்ள தமிழ் ஆசிரியர்கள் அவர்களுடைய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இதன்மூலமாக ஆசிரியர்கள், தங்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள முடியும். அது மட்டுமல்லாமல் கற்பித்தலில் மற்ற நாடுகளில் எவ்வாறான நுணுக்கங்கள் கையாளப்படுகின்றன என்பது தொடர்பாகவும் தெரிந்து கொள்ள முடியும்.

“மேலும் தமிழ் சமுதாயம், எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அவர்களுடனான ஒரு தொடர்பையும் ஏற்படுத்திக்கொள்ள முடியும். இந்தச் செயற்பாடின் ஊடாக, தமிழ் ஆசிரியர்கள் பல நன்மைகளை அடைவர்” எனவும் அவர் கூறினார்.

இ.தொ.கா ஊழியர்களின்

# ‘அர்ப்பணிப்புமிக்க சேவை பாராட்டுக்குரியது’

“இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு ஊழியர்களதும் சேவையானது, அர்ப்பணிப்புமிக்கது” என்று, இ.தொ.காவின் உப தலைவரும் சட்டத்தரணியுமாக கா.மாரிமுத்து தெரிவித்துள்ளார்.



**“ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கடந்த 77 வருடங்களாக, சளைக்காமல் தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது**

“இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கடந்த 77 வருடங்களாக, சளைக்காமல் தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தனது உறுதிப்பாட்டில் மிகத் தெளிவாக இருப்பதன் காரணமாக, எவராலும் அசைக்க முடியாத சக்தியாக, இ.தொ.கா பரிணமித்துக் கொண்டுள்ளது” என்றும் அவர் மேலும் கூறினார்.

இ.தொ.காவின் தலைமையகமான சௌமியபவனில், நேற்று (2) நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

“இ.தொ.கவில் அங்கம் வகிக்கும் சகல உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையால், இன்று பல்வேறு சாதனைகளை நாம் நிலைநாட்டியுள்ளோம்.

“இ.தொ.காவில் அங்கம் வகிக்கும் உத்தியோகத்தர்கள், சமூக மேம்பாட்டுக்கு அடித்தளமாகவும் உந்துசக்தியாகவும் அமைந்து, தமது பணிகளை செவ்வனே செய்து வருகின்றார்கள்.

“2017ஆம் ஆண்டில் நாம் மேற்கொண்ட சேவையில் முற்றுப்பெறாத சேவைகள் இருக்குமாயின், அவற்றை 2018ஆம் ஆண்டு நிச்சயமாக தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்று, அவர் மேலும் கூறினார்.



## கடமைகளை பொறுப்பேற்றனர்

டி.கேதீஸ், சிவாணி ஸ்ரீ



மத்திய மாகாண சபை மற்றும் சப்ரகமுவ மாகாண சபை ஆகியவற்றில் கடமையாற்றும் அரச அதிகாரிகள், பிறந்திருக்கும் புதுவருடத்தில், சம்பிரதாயபூர்வமாக தமது கடமைகளை, நேற்று பொறுப்பேற்றுக்கொண்டனர். இந்நிகழ்வு, மேற்படி இரு மாகாண சபைகளின் கட்டடத் தொகுதிகளிலும், நேற்று(2) நடைபெற்றது.

# ஒரே பிரசவத்தில் மூன்று சிசுக்கள்

காஞ்சன குமார ஆரியதாச

புதுவருட பிறப்பன்று, தம்புள்ளை வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்ட 25 வயது நிறைமாத கர்ப்பிணி ஒருவர், ஒரே பிரசவத்தில் மூன்று சிசுக்களை பிரசவித்துள்ளதாக, தம்புள்ள வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.



தம்புள்ள, பஹல எருவுல பிரதேசத்தைச் சேர்ந்த பியானி மல்லிகா என்ற பெண்ணே, இவ்வாறு மூன்று சிசுக்களை பிரசவித்துள்ளார்.



மூன்று சிசுக்களும் பெண் சிசுக்களென தெரிவித்துள்ள வைத்தியசாலை நிர்வாகம் தாயும் சிசுக்களும் நலமாக உள்ளனரென்றும் அறிவித்துள்ளது.

# கழிவு நீரால் ஆலயத்துக்கு மாசு

## மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை

எம்.செல்வராஜா



பதுளை ஸ்ரீ மாணிக்க விநாயகர் கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்துக்குச் செல்லும் வழியிலுள்ள வடிகானில், அசுத்த நீர் மற்றும் கழிவுப்பொருட்கள் நிறைந்து காணப்படுவதால், ஆலயத்துக்கு வரும் அடியார்கள், பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வடிகானிலுள்ள அசுத்த நீர் காரணமாக ஆலயம் மற்றும் ஆலயத்தைச் சுற்றி துர்நாற்றம் வீசுவதாகவும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப் பட்டதைத் தொடர்ந்து, மாகாண அமைச்சர் நேற்று (2)ஆலயத்துக்கு விஜயம் மேற்கொண்டதுடன் வாடிகானின் நிலையையும் கண்டறிந்தார்.

இவ்விடயம் தொடர்பில் உடனடியாக அமைச்சின் செயலாளர் ஜி.கே.எல்.எஸ் ராஜதாச, பதுளை மாநகர ஆணையாளர், தொழில்நுட்ப அதிகாரிகள் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஸ்தலத்துக்கு மேற்படி அதிகாரிகளும் வருகைத்தந்தனர்.

இறைச்சிக்கடை, மீன்கடைகள், ஹோட்டல்கள், ஆகியவற்றின் கழிவுகள் வாடிகானுக்கு திசைத்திருப்பி விடப்பட்டுள்ளதை அமைச்சர், அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டுச் சென்றார்.

இதையடுத்து, இரு வாரங்களுக்குள் குறித்த வடிகானை திருத்தியமைக்குமாறு, அமைச்சர் செந்தில் தொண்டமான் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.





மூதூர், வெள்ளைநாவல் பகுதியில், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட சாரதிகள் 8 பேர் கைதுசெய்யப்பட்டனர் எனவும் 6 டிப்பர் வாகனங்களும் 2 உளவு இயந்திரங்களையும் கைப்பற்றப்பட்டதாகவும் மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பத்மநாத தெரிவித்தார். (தீஷான் அஹமட்)

நிலாவெளியில் 12,000 ரூபாய் பெறுமதியான கேஸ் அடுப்பு, சிலிண்டர் எரிவாயு ஆகியவற்றைத் திருடிய நபரொருவரை, நாளை (04) வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை பதில் நீதவான் எச். எம்.எம்.தனுஸ்க உத்தரவிட்டார். (எப்.முபாரக்)



“

**அன்றிருந்து இன்று வரை தமிழ்த் தேசியம் என்ற ஒரே நிலைப்பாட்டில் மாறாமல் இருக்கின்ற ஒரே கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமேயாகும். காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடுதலை, காணிப் பிரச்சினைகள் தொடர்பாக, எங்களது நிலைப்பாட்டிலே சற்றளவும் தளராமல் நாம் பயணிக்கின்றோம்.**



**–த.தே.கூ எம்.பி– எஸ்.வியாழேந்திரன்**

அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப

# உணவு உற்பத்தி அதிகரிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

நாட்டில் அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டுக்கான வருட வேலைகளை ஆரம்பிக்கும் சத்தியப்பிரமாண நிகழ்வு, வைபவ ரீதியாக பல்கலைக்கழக பதிவாளர் எச்.அப்துல் சத்தார் தலைமையில், ஒலுவில் வளாகத்தில் நேற்று (02) நடைபெற்றது.

இதில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

“நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுத்து, பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுவதற்குப் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

“தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பல பரிணாம வளர்ச்சி கண்டு, நாட்டின் அபிவிருத்திக்கும் உயர் கல்விக்கும் பெரும் பங்காற்றி வருகின்றது. சர்வதேச ரீதியில் திகழ்கின்ற இப்பல்கலைக்கழகம், மூவின மக்களின் சமாதான கேந்திர நிலையமாகத் திகழ்கின்றது.

“இதைச் சீர் குலைப்பதற்கு தீய சக்திகள் செயற்படுகின்றன. சட்டத்தை யாரும் கையில் எடுக்க முடியாது.

“மக்களின் வரிப் பணத்தில் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்கள், நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

“ஒரு நிறுவனத்தில் கடமையாற்றும் சகல தரப்பினரும் ஒரு குடும்பத்தைப் போன்றவர்கள். ஒரு குடும்பம் எவ்வாறு வாழ வேண்டுமோ அவ்வாறே ஒரு நிறுவனமும் தனது செயற்பாட்டை முன்மாதிரியாகக் கொண்டு செல்வதற்கு சகல தரப்பினரின் ஒத்துழைப்பும் ஆலாசனைகளும் அவசியமாகும்” என்றார்.



## ஓய்விலும் சேவை

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்கள் 7 பேர், மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்களை, ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ், இவர்கள் ஒப்பந்த அடிப்படையில், சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராம உத்தியோகத்தர்களும், காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் 2 கிராம உத்தியோகத்தர்களும், ஆரையம்பதி மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் தலா ஒரு கிராம உத்தியோகத்தருமாக, 60 வயதுக்கும் 67 வயதுக்குமிடையிலானவர்களே, இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

3 மாதகாலத்துக்கு, இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவார்கள். அதன் பின்னர் அவர்களின் சேவைக்காலம் நீடித்து வழங்கப்படலாமென எதிர் பார்க்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

■ தீஷான் அஹமட்

திருகோணமலை, புல்மோட்டைப் பகுதியிலுள்ள வயலில் வேளாண்மைக் காவலில் ஈடுபட்டிருந்த த.இல்லியாஸ் (வயது 52) எனும் குடும்பஸ்தர், நேற்று முன்தினம் (01) இரவு 11 மணியளவில், காட்டு யானையொன்றின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளாரென, புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம், புல்மோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்ட நிலையில், நீதவானின் விசாரணையின் பின்னர் நேற்றுக் காலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ‘சக்தி பெறவேண்டும்’

“இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன், 2017ஆம் ஆண்டு பல்வேறு திட்டங்களைத் திட்டமிட்டு, கிராம மட்டங்களில் மக்களைத் தயார்படுத்ததும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில், 2018ஆம் ஆண்டு அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஆரம்ப ஆண்டாக அமைந்துள்ளது.

“அந்தவகையில் 2018ஆம் ஆண்டு, அரச உத்தியோகத்தர்களுக்கு சவால்கள் நிறைந்த ஆண்டாக அமையவுள்ளதால், சவால்களை எதிர்கொண்டு, நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுக்கக்கூடிய வகையில், சக்திமிக்கவர்களாகத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்” என, திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தெரிவித்தார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலகத்தில் அலுவலக ஆரம்ப முதல் நாளான நேற்று (02) உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.ஜெயரூபன் தலைமையில் இடம்பெற்ற உத்தியோகத்தர்களில் சத்தியப்பிரமாண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## மனைவியை தாக்கியவருக்கு விளக்கமறியல்

■ எப்.முபாரக்

திருகோணமலை, சேருநுவர பகுதியில் மதுபோதையில், மனைவியையும் பிள்ளைகளையும் அடித்துத் துன்புறுத்திய 45 வயதுடைய நபரை, இம்மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மூதூர் பதில் நீதிவான் ஏ.எம்.முபாரிஸ் உத்தரவிட்டார்.

## ‘வாடகையில் சூரியன் சின்னம்’

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



“சூரியன் சின்னம், வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அது அப்படியே பத்திரமாக இருக்கட்டும். எல்லோரும் வீட்டுக்கு வாருங்கள்” என, இலங்கைத் தமிரசுக் கட்சியின் செயலாளரும் முன்னாள் மாகாண அமைச்சருமான கே.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிவுறுத்தல் வழங்கும் கூட்டத்தில் உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு தேவாயகம் மண்டபத்தில் நேற்று முன்தினம் (01) மாலை நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்துரையாற்றிய அவர் தெரிவித்ததாவது,

“எங்களுடைய சூரியனை, மதிப்புக்குரிய தலைவர் ஒருவர் வாடகைக்கு விட்டிருக்கின்றார். அது அப்படியே பத்திரமாக இருக்கட்டும். எல்லோரும் வீட்டுக்கு வாருங்கள் என நாங்கள் கேட்கின்றோம்.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற கூட்டு, தமிழ் மக்களுடைய விடுதலை இயக்கமாக இன்னும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கான ஆணையை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்று, இந்த நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் காட்டுகின்ற ஒரு செயற்பாடாக எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இருக்கின்றது.

“இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே வேட்பாளர்களாக களமிறங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நம்மை விமர்சித்துக் கொண்டிருக்கின்றவர்கள் மத்தியில் உண்மையான விடயங்களை எடுத்துச் செல்ல வேண்டிய கடப்பாடு உள்ளது.

“அரசமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கையை முழுமையாக வாசிக்காத பலர், அது புத்தி ஜீவிகளாக இருக்கட்டும் அல்லது பத்தி எழுத்தாளர்களாக இருக்கட்டும் இவர்கள் சொல்லுகின்ற விமர்சனங்களைப் பார்க்கின்ற போது, இந்த இடைக்கால அறிக்கையை அது தொடர்பாக நியமித்திருக்கின்ற உப குழுக்களின் அறிக்கையை இவர்கள் படிக்கவில்லை என்பது எங்களுக்கு விளங்குகின்றது.

“ஆகவே, அவர்களால் செய்யப்பட்டுள்ள பரப்புரையை முறியடிக்கக் கூடிய வகையில் வேட்பாளர்கள் உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் இருக்கின்ற மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும்.

“இந்த அரசமைப்பு சட்ட உருவாக்கம், இதற்கு முன்பு இலங்கையில் நடைபெற்ற அரசியல் உருவாக்கங்களை விட வித்தியாசமானது. இதற்கு முன்பு இலங்கையில் நடைபெற்ற அரசியல் உருவாக்கங்களிலே, தமிழ் மக்கள், தமிழ் தலைவர்கள் பங்குபற்றவில்லை. அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

“ஆனால், இப்போது இருக்கின்ற அரசியல் உருவாக்கத்திலே எங்களுடைய தலைவர்கள், அரசியல் நிர்ணய சபையாக உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்திலே பல்வேறு குழுக்களிலே பிரதிநிதிகளாக இருந்து, எங்களுடைய பிரச்சினைகளைப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஏனையோருக்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்றால் அரசியல் தெரிந்தவர்களாக அரசியலை வாசிப்பவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இருப்பார்கள்.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள், மிகவும் பொறுமையாக நிதானத்துடன் நடந்து கொள்வதுடன், தமக்கு எதிராக நிற்பவர்களுடன் நேசமாகப் பேசி, எங்களோடு சேர்த்து கொள்ள வேண்டும். எந்த விதத்திலுமே ஆத்திரப்பட்டோ அவமதிக்கின்ற விதத்திலோ சேறு பூசுகின்ற விதத்திலோ மற்றவர்களைக் கேலி செய்ய வேண்டாம்.

“2010ஆம் ஆண்டு, மட்டக்களப்பு மாவட்டத்தில் 66,000 வாக்குகளை பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 2015ஆம் ஆண்டு 127,000 வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. காரணம் வெளியிலிருந்து பலரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கொண்டு வந்திருக்கின்றோம்.

“ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் வெளியிலிருக்கின்ற வாக்காளர்களைத் திரட்டி எடுப்பதுதான் மிகவும் முக்கியமானதாகும்” என்றார்.



## சத்தியப்பிரமாணம்

கல்முனை மாநகர சபை ஊழியர்களின் புதுவருட சத்தியப்பிரமாண நிகழ்வு, மாநகர ஆணையாளர் ஜே.லியாகத் அலி தலைமையில், நேற்று (02) நடைபெற்றது. இதில் பொறியியலாளர் ரி.சர்வானந்தன், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.ஆரிப் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். (படப்பிடிப்பு: அஸ்லம் எஸ்.மௌலானா)

ஊழலை ஒழித்து

## ‘மக்களுக்கு வழி விடுவோம்’

■ ஹஸ்பர் ஏ ஹலீம், ஏ.எம்.ஏ.பரீத்



“ஊழலை ஒழித்து, மக்களுக்கான சேவைகளை விரிவுபடுத்துவதே, உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் நாம் களமிறங்கக் காரணமாக அமைந்துள்ளது” என, கிண்ணியா பிரதேச சபைத் தேர்தலில் ஆயிலியடி மஜீத் நகர் வட்டாரத்தில் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக குதிரை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் எஸ்.எம்.ஸிஹாஜித் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (01) நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

“கடந்த காலங்களில் கிண்ணியா பிரதேச சபைகளில் பல ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. வீதி அபிவிருத்தி உட்பட பல அபிவிருத்திகளில் மக்களின் வரிப்பணம் சூறையாடப்பட்டுள்ளது.

“இம்முறை அவ்வாறானதோர் ஊழல் இடம்பெறாவண்ணம், தேசிய காங்கிரஸைப் பலப்படுத்துவதன் ஊடாக, இவ்வட்டார மக்களுக்கு மாத்திரமல்ல, முழு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஊழல்கள் இடம்பெறா வண்ணம் தடுக்கலாம்.

“அரச அதிகாரிகள், மக்களுக்காகவே அரச சேவையில் ஈடுபாட வேண்டும். அதைவிடுத்து, மக்களுடைய சொத்துகளை, ஊழல் மோசடிகளுக்கு இட்டுச் செல்வது பெரும் அநியாயமாகும்.

“மக்களை ஏமாற்றும் எண்ணம் எமக்குக் கிடையாது. மக்களுக்கான ஒருமித்த குரலாகவே நாம் செயற்படுகின்றோம். எமது கிராமம் பல பின்னடைவுகளை எதிர்நோக்குகிறது. அபிவிருத்திகளிலும் புறக்கணிக்கப்படுகிறது. எமது சமூகம் எமது கிராமம் முன்னேற வழிவகுப்பதற்கான தேர்தலாக, இத்தேர்தல் அமைய வேண்டும்.

“இத்தனைக்கும் மக்களாகிய உங்களது ஒத்துழைப்பே எமக்கு என்றும் தேவை. வரலாறு காணாத வெற்றியை, எமது மண்ணுக்கு பெற்றுக் கொடுப்பது, ஒட்டுமொத்த எமது சமூகத்தின் வெற்றியாகும்” என்றார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலத்தில்

## ‘சர்வமதப் பேரவை உறுப்பினர்களது பணி பொறுப்பு வாய்ந்தது’

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



“உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலத்தில், சர்வமதப் பேரவை உறுப்பினர்களின் பணி பொறுப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டும்” என, தேசிய சமாதானப் பேரவையின் திட்ட இணைப்பாளர் விஜயநாதன் துஷாந்த்ரா தெரிவித்தார். தேர்தலின்போது இடம்பெறக் கூடிய இனவாத உணர்ச்சியூட்டல்கள் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி, மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்களுக்காக, அவர் இந்த வேண்டுகோளை, நேற்று (02) முன்வைத்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

“உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெற முன்பாகவும் தேர்தல் சமயத்திலும் தேர்தல் முடிவுற்ற பின்னரும் பிரதேசத்தில் இனமுறுகல் உருவாக்கப்படும் சூழ்நிலைகளை, மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்கள் உன்னிப்பாகக் கவனித்து எதிர்வினையாற்ற வேண்டும்.

“சமூக, இன ஐக்கியத்தையும் சகல சமூகங்களினதும் இயல்பு வாழ்க்கையையும் குழப்பும் எந்தவொரு முன்னெடுப்புகளையும் பிரதேசத்திலுள்ள மாவட்ட சர்வமத உறுப்பினர்கள் பொறுப்புடன் கவனிக்க வேண்டும். “அதுமட்டுமல்லாமல், அத்தகைய சமூக விரோத நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்படும் சூழ்நிலைகளைத் தடுக்கும் வண்ணம் விரைந்து நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். “இலங்கை தேசிய சமாதானப் பேரவை மற்றும் இலங்கையில் அனைத்து மதங்கள் மற்றும் அனைத்து இனங்களுக்கிடையில் நிலைத்து நிற்கக் கூடிய சகவாழ்வுக்கான செயற்றிட்டங்களில் தங்களை அர்ப்பணித்துள்ள ஆசிய மன்றம், பிரிட்டிஷ் கவுன்ஸில் என்பன இனமுறுகலை ஏற்படுத்தும் சூழ்நிலைகளைத் தடுப்பதற்கான அக்கபூர்வ முயற்சிகளில் அதிக அக்கறை கொண்டுள்ளன.

“இத்தகைய சூழ்நிலைகளை எந்தத் தரப்பினர் தோற்றுவித்தாலும் அது தடுக்கப்பட வேண்டும். சட்டம், இந்த விடயத்தில் ஏற்ற ஒழுங்குகளுக்கான நடவடிக்கைகளுக்கு தேசிய சமாதானப் பேரவை விரைந்து பணியாற்றும்.

“இனப்பூசலை வளர்க்கும் எந்தவொரு சூழ்நிலைகளையும் உன்னிப்பாகக் கவனித்து அவற்றை எல்லாத் தரப்பினரோடும் இணைந்து தடுப்பதில் தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வமத உறுப்பினர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்” என்றார்.

## ‘பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்’

■ பைஷல் இஸ்மாயில்

“பெற்றோர்கள், தங்களது பிள்ளைகளை ஒழுக்கமானவர்களாக வளர்த்தெடுத்தால், எதிர்காலத்தில் இந்த நாட்டில் சிறந்த கல்விச் சமுதாயத்தை உருவாக்க முடியும். அவ்வாறு ஒழுக்கமுள்ள பிள்ளைகளை வளர்க்காவிட்டால், நாம் எதிர்ப்பார்க்கின்ற ஒரு கல்விச் சமுதாயத்தை எதிர்காலத்தில் காண முடியாது” என்று, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.



சம்மாந்துறை, ஜம்இயத்துல் குர்ஆனில் ஹக்கீமின் ஏற்பாட்டில், அல்-குர்ஆனை திறமையாகப் பார்த்து ஓதி முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, சம்மாந்துறை அப்துல் மஜீத் நகர மண்டபத்தில் அல்ஹாபிழ் மௌலவி யு.எல். சலாஹீத்தீன் தலைமையில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்றது.

இதன்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

“பிள்ளைகளுக்கு மார்க்கக் கல்வியை வழங்கி, மார்க்கப்பற்றுள்ளவர்களாக உருவாக்கும் பட்சத்தில், அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாகவும் எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாகவும் உருவாக்க முடியும். இது பெற்றோர்களின் தலையாய கடமையாகும்.

“ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளை எதிர்காலத்தில் சமூகத்தை வழி நடத்துகின்ற சிறந்த தலைவர்களாகவும், மார்க்கத்தைப் போதிக்கும் கல்வியாளர்களாகவும் மாற்ற முன் வரவேண்டும்.

“அப்போதுதான் நாட்டில், ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும்” என்றார்.



மஹாகும்புக்கடவிலிருந்து பழைய வைத்தியசாலை வரைக்குமான வீதி, 340 இலட்சம் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான புனரமைப்புப் பணிகளை, நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார ஆரம்பித்து வைத்தார். (எம்.யூ.எம். சனூன்)

செவனகல பொதுச் சந்தையில் வரிச் சேகரிக்க வருகின்றவர்கள், எவ்வித முன்னறிவித்தலுமின்றி ஏற்கனவே பெறப்பட்ட தொகையிலும் பார்க்க இரண்டு மடங்கு அதிகமாக வரி கேட்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.





“

**போக்குவரத்து நெரிசல் மற்றும் வீதி பாதுகாப்பை கருத்திற்கொண்டு பொலிஸ் போக்குவரத்துப் பிரிவை மேலும் பலப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது**



பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர

## மருந்து களஞ்சியசாலை தீக்கிரை

வலஸ்முல்லை ஆதார வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையில் நேற்று (02) அதிகாலை பரவிய தீயினால் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மருந்து வகைகள் மற்றும் உபகரணங்களுக்கு இதனால் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தீ பரவியதையடுத்து, பொலிஸார் மின்சார சபையின் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வைத்தியசாலையின் குளிரூட்டியில் இருந்தே தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை, வலஸ்முல்லை வைத்தியசாலையின் மருந்தகம் சேதமடைந்துள்ளமையால், ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து குறித்த வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகள் விநியோகிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## 650,000 வழக்குகள் நிலுவையில்

நீதிமன்றங்களில் தற்போது 650,000 வழக்குகள் நிலுவை நிலையில் இருப்பதாக நீதிஅமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இதனால் நீதிமன்ற விவகாரங்களில் பாதிக்கப்படும் சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைத் தடுப்பதற்காக புதிய வருடத்தில் அவதானம் செலுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த வழக்குகளை விரைவில் விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

புதிய வருடத்தின் நீதிமன்ற அமைச்சின் கடமைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், “ வழக்கு ஒன்றில் சிக்கியவுடன் சாதாரண மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங் கொடுக்கின்றனர். நாம் அது தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளோம்“ எனவும் அமைச்சர் தலதா குறிப்பிட்டுள்ளார்.

## வாசகர் உரிமை

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு, இப்பத்திரிகை ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர்களின் உரிமைகளுக்கு நாம் மதிப்பளிப்பதோடு, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத் துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் எம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால், எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின், அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனஞ்செலுத்தி, அவற்றை நிறைவுசெய்ய முயல்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

மேலதிக விவரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு.
இல.96, கிருல வீதி, கொழும்பு-05
தொலைபேசி: 011-5353635
தொ.நகல்: 011-5335500
மின்னஞ்சல்: srockwood@pccsl.lk
இணையத்தளம்: www.pccsl.lk

வடமத்திய மாகாண கல்வி நிருவாக சேவையில்

# 106 வெற்றிடங்கள்

வடமத்திய மாகாணத்தில் கல்வி நிருவாக சேவையில் 106 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், இதனால் கல்வி நிருவாக சேவைகள் பாதிக்கப்படுவதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பிரணாந்து தெரிவித்துள்ளார்.



வடமத்திய மாகாணத்தில், மாகாண கல்வி வலயங்கள் 48 உள்ளன. இவற்றில் 32 கல்வி வலயங்களில் நிருவாக சேவையாளர் வெற்றிடம் காணப்படுவதாகவும், குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஒரு சில இடங்களில் கல்வி நிருவாக அதிகாரிகளின் கடமைகளை பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மேற்கொள்கின்றனர் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இத்தகைய கல்வி நிருவாக சேவையாளர்களுக்கான வெற்றிடம் காணப்படுவதனால் இரண்டு மூன்று பேரின் கடமைகளை ஒருவர் ஆற்ற வேண்டியிருப்பதாகவும் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வி நிருவாக உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளும் வகையில் கடந்த வருடம் அரசாங்கத்தால் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு 875 பேர் நிருவாக சேவை உத்தியோகத்தர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட போதிலும் மேலும் 106 வெற்றிடங்கள் வடமத்திய மாகாணத்தில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் புதிதாக நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் 16 பேருக்கு வட மத்திய மாகாணத்தில் நியமனம் வழங்கப்பட்ட போதிலும் அவர்களில் 10 பேரே கடமையை பொறுப்பேற்றுள்ளனர்.

இவ்வாறு கல்வி நிருவாக உத்தியோகத்தர் வெற்றிடம் காணப்படுவதனால் மாணவர்களின் கல்விக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வட மத்திய மாகாணத்தில் நிலவும் கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பிரணாந்து தெரிவித்துள்ளார்.

## ‘ஒன்றிணைந்து செயற்படுங்கள்’



அரச அதிகாரிகள் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு, வெளிப்படைத்தன்மையுடன் மக்களுக்கு சேவையாற்றுவதன் மூலமே அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் தூய்மைநிலை மேலோங்கும் என ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

முறையான திட்டமிடலுடன், சினேகபூர்வமாக மக்களுக்கு சேவையாற்ற வேண்டியது அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மலர்ந்துள்ள புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நேற்று (02) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி செயலக ஆளணியினருடன் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச நிறுவனங்களுக்கிடையில் சிறந்த தொடர்புகள் பேணப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இதன்போது சுட்டிக்காட்டிய ஜனாதிபதியின் செயலாளர், சிறந்த எண்ணங்களின் மூலம் அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு, மலர்ந்துள்ள புத்தாண்டில் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

புத்தாண்டில் கடமைகளை ஆரம்பித்து வைக்கும் முகமாக ஜனாதிபதியின் செயலாளர் தேசியக்கொடியை ஏற்றி வைத்ததன் பின்னர் அரச சேவை உறுதிமொழி செய்யப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட ஆளணியினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## எம்.பிக்களில் அதிகமானோர் முதியோர்



இலங்கை நாடாளுமன்றத்தில் வயதானவர்களே அதிகம் உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

2018 ஆண்டில் பெரும்பாலானோர் 70 வயதை பூர்த்தி செய்யவுள்ளனர் எனவும், ஒருசிலர் 70 வயதை அண்மித்தவர்களாக காணப்படுகின்றனர் எனவும் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய , இந்த வருடம் (2018 ) நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் 70 வயதை பூர்த்தி செய்யவுள்ளனர். இதற்கமைய 70 வயதை அடைந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூவர் இந்த வருடம் 69 வயதை அடையவுள்ளனர் என்பதுடன், நால்வர் 65 வயதை பூர்த்தி செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய 2020 ஆம் ஆண்டளவில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 9 பேரில் ஒருவர் 70 வயதை அடைந்தவர்களாகவே காணப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் முதியோரின் எண்ணிக்கை 16.9 வீதம் வரை அதிகரித்துக் காணப்பட்டதாகவும், 2041 ஆம் ஆண்டளவில் இலங்கையில் நான்கில் ஒரு பங்கினர் முதியோராகவே காணப்படுவர் எனவும் ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.



### அலுவல்கள் ஆரம்பம்..

2018 ஆம் ஆண்டு புதிய வருடத்தில் அலுவல்களை ஆரம்பிக்கின்ற உத்தியோகபூர்வ நிகழ்வு பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேன தலைமையில் நேற்று காலை (02) புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்றதை இங்கு காணலாம்.

## சமூக வலையத்தளங்களில் தேர்தல் பிரசாரம்



ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தம்புள்ளை மாநகர சபைக்காக இம்முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் யார் என்பதை தான் அறியவில்லை எனவும், அவர்களுக்கு முகநூல் வழியாகவே உதவி செய்து வருவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சி மாநகர சபை உறுப்பினர் திஸ்ஸ பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் தம்புள்ளை மாநகர சபை மற்றும் பிரதேச சபைக்காக எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அடங்கிய பெயர்ப்பட்டியல் தொகுதி அமைப்பாளரினால் தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் திஸ்ஸ பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை தேர்தலில் போட்டியிடும் அநேகமான வேட்பாளர்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரங்களை மேற்கொள்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 16,450 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்



பிலியந்தலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மதுபோதையில் வாகனம் செலுத்திய 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒருவார காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வீதி விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 100 க்கும் அதிகமான சாரதிகளுக்கு தண்டச் சீட்டும் வழங்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மது போதையில் வாகனம் செலுத்துவதனால் அதிகளவான விபத்துகள் நிகழ்வதாகவும், இதனால் மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தல பகுதியில் மாத்திரம் இப்பண்டிகைக் காலப்பகுதியில் வாகன விபத்துகள் இரு உயிரிழப்புகள் நேர்ந்ததுடன், பாரிய வாகன விபத்துகள் ஐந்து இடம்பெற்றதாகவும், சாதாரண விபத்துகள் 7 பதிவாகியுள்ளதாகவும், வீதி போக்குவரத்துப் பொலிஸார் தெரித்தனர்.

அத்துடன் வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறும் சாரதிகளை கைது செய்ய விசேட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த வருடத்தில் (2017) 16,450 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தல்

## ‘செல்வாக்கை உரசிப்பார்க்கும்’



‘இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலானது, புதியதொரு முறையில் நடைபெறுகின்ற தேர்தலாகும். ஆட்சியில் இருக்கின்றவர்களின் செல்வாக்கை உரசிப்பார்க்கின்ற ஒரு முக்கியமான உரைகல்லாகவும் இத்தேர்தல் அமையப்போகின்றது” என்று, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களை தெளிவுபடுத்தும் கூட்டம், அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“முஸ்லிம் காங்கிரஸ் இந்த அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்ற காரணத்தால், இக்கட்சி எவ்வளவு செல்வாக்குப் பெற்று நிற்கின்றது என்பதை கணிப்பிடுவதற்கான ஒரு முக்கியமான தேர்தல் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். நாங்கள் அரசாங்கத்திலே இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டாலும், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தும் சில இடங்களில் தனித்து மரச்சின்னத்திலும் போட்டியிடுகிறோம்.

“ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகக்கூடிய அதிகார மையமாக இருக்கின்ற அம்பாறை மாவட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சி பட்டியலை எமது கட்சி தன்னுடைய பட்டியலாக மாற்றியுள்ளது. குருணாகல் மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் போட்டியிடுகிறது. குருநாகல் மாவட்டத்தில் 6 உள்ளூராட்சி சபைகளிலும், திக்குவல்லை நகர சபையிலும், ஹம்பாந்தோட்டை மாநகர சபையிலும் மரச்சின்னத்தில் போட்டியிடுகின்றோம். ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் பட்டியலில் முதன்முறையாக எல்லோரும் மலே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் களமிறங்கியுள்ளனர்.

“ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட்டிலுள்ள இன்னும் இரண்டு கட்சிகளூடாகவும் போட்டியிடுகின்றோம். முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியில், ஜனாதிபதியின் இடமான லங்காபுர பிரதேசத்தில் போட்டியிடுவதுடன் அந்த சபையில் 3 ஆசனங்களை வெல்லக்கூடிய சந்தர்ப்பமும் எமக்கு உள்ளது. “திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், சேருநுவர ஆகிய சிங்கள மக்கள் செறிந்துவாழும் பிரதேசங்களில் நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். ஏனைய முஸ்லிம் பெரும்பான்மை சபைகளிலும் தனித்துப் போட்டியிடுகின்றோம். திருகோணமலையில் ஐக்கிய தேசியக் கட்சி, மயில் சின்னம் என்பன போட்டியிடுவதால் அங்கு மும்முனைப் போட்டி நிலவுகின்றது.

இருப்பினும் முஸ்லிம் காங்கிரஸ் பெரும்பாலான சபைகளை வெற்றிகொள்ளும் நிலைமையை அங்கு உருவாக்கியுள்ளோம்.

“அதேபோல், புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள புத்தளம் நகர சபை, கல்பிட்டி பிரதேசசபை என்பவற்றில் தனித்தும் போட்டியிடுகிறோம். புத்தளம் பிரதேச சபையிலும், வண்ணாத்திவில்லு பிரதேச சபையிலும் எங்களுடைய ஆதரவில்லாமல் யாரும் ஆட்சியமைக்க முடியாது என்ற நிலைவரம் காணப்படுகின்றன. வன்னி மாவட்டத்தில் நாம் தனித்துக் கேட்கின்றோம். அக்கரைப்பற்று நகர சபையில் போட்டியிடுகின்றோம்.

“இந்த வட்டார தேர்தலில் எங்களுடைய சமூக வேட்பாளர்கள் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கிலும் நாம் செயற்பட்டால், எமக்கான சபைகளை இலகுவாக வெற்றிகொள்ள முடியும்” என்றார்.

2017 ஆம் ஆண்டில்

## ரயில் விபத்தில் 517 பேர் பலி



கடந்த வருடத்தில் புகையிரதத்தில் மோதுண்டு 517 பேர் உயிரிழந்துள்ளனரென, புகையிரத திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகாரி அநுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

புகையிரத குறுக்கு வீதியில் பயணித்த நிலையில், 16 பேரும், புகையிரத கடவையில் வாகனங்களைச் செலுத்தி விபத்துக்குள்ளானதில் 60 பேரும், தற்கொலை மற்றும் ஏனைய காரணங்களால் 441 பேரும் உயிரிழந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புகையிரத குறுக்கு வீதிகளில் சமிக்ஞையை மீறி பயணித்த 134 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, இவர்களுக்கு 1,54,950 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் நாடுபூராகவும் உள்ள புகையிரத குறுக்கு வீதிகளில் கவனக்குறைவாக வாகனங்களை செலுத்துதல், புகையிரத கடவைகளில் நடந்து செல்லுதல் போன்ற காரணங்களாலேயே அதிகளவு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த 2016 ஆம் ஆண்டு 470 மரணங்கள் சம்பவித்துள்ளதுடன், முடிவடைந்த 2017 ஆம் ஆண்டு இதன் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளதாகவும், புகையிரத திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒருநாள் ஊடக செயலமர்வு

மாவனெல்லை ஜே.எம் மீடியா ஊடக நிறுவனம் மற்றும் ஜே.எம் மீடியா ஊடகக் கல்லூரி இணைந்து மூன்றாவது முறையாகவும் ஏற்பாடு செய்திருக்கும் இலவச ஒருநாள் ஊடக செயலமர்வு எதிர்வரும் 7ஆம் திகதி மாவனெல்லை ஹயா வரவேற்பு மண்டபத்தில் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை இடம்பெறவுள்ளது. இந்த இலவசக் கருத்தரங்கு தேசிய புகழ் பெற்ற அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம் ஜிப்ரி, சிரேஷ்ட ஊடகவியலாளர் நவ்ஷாட் முஹிடீன் உட்பட பல ஊடகவியளாலர்களைக் கொண்டு நடத்தப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் மாணவர்கள், ஊடக அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றவர்கள், ஊடக ஆர்வலர்கள், சமூகவலைத்தளங்கள் மற்றும் செய்தி இணையங்களை செயற்படுத்துகின்றவர்கள் அனைவரும் வயதெல்லையின்றி இச்செயலமர்வில் பங்குபற்றி பயன்பெறலாம்.

பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

மேலதிக தகவல்கள் மற்றும் பதிவுகளுக்கு, ரஸா மல்ஹர்தீன் 0777 162 511 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## சீட்டிழுப்பு முடிவுகள்

**மெகா பவர்**
சீட்டிழுப்பு இல: 172
ஜனவரி - 01
போனஸ் இல. 25 M
14- 67 - 74- 76

**கொவிசெத**
சீட்டிழுப்பு இல: 1633
ஜனவரி - 01
G- 37-40- 43- 66

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இல: 801
டிசெம்பர் - 30
போனஸ் இல. 03
O 02- 03- 02- 07- 08

**மஹாஜன சம்பத**
சீட்டிழுப்பு இல: 3568
ஜனவரி - 01
O 04- 05- 02 - 05- 01-09

**சுப்பிரிவாசனா சம்பத**
சீட்டிழுப்பு இல: 1287
டிசெம்பர் - 30
போனஸ் இல - 22
14- 30 - 38 - 45

**சம்பத் ரேகா**
சீட்டிழுப்பு இல: 798
டிசெம்பர் - 31
போனஸ் இல. 42/68
T/44 18- 24- 39- 61

**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இல: 1472
டிசெம்பர் - 28
போனஸ் இல. 30/EGW
04-20- 23- 34

**நீரோகா**
சீட்டிழுப்பு இல: 339
டிசெம்பர் - 31
13- 39- 40- 50
விருச்சிகம்

**தெலக்ஷபதி**
சீட்டிழுப்பு இல: 85
ஜனவரி - 01
M-42- 48- 68



“தவறாகப் புரிந்து கொள்கிற உண்மையைக் காட்டிலும் பெரிய பொய் வேறு எதுவும் இல்லை”
– லின்டா தொம்சன்

“மனிதர்கள் சில சமயம் உண்மை மீது இடறி விழுவதுண்டு. ஆனால் பெரும்பாலானோர் எழுந்து நின்று ஏதும் நடவாதது போல அவசரமாகப் போய்விடுகிறார்கள்”
– ஹென்றி றொலின்ஸ்



# ஜனாதிபதியின் இன்றைய அறிவிப்பின் அவசியம்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்று முக்கிய அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார். மத்திய வங்கி பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் 1,400 பக்கங்களைக் கொண்ட இறுதி அறிக்கை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஆணைக்குழுவின் செயலாளர் உடுகம்சூரியவால் கடந்த 30ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விநியோகப் பிரச்சினை என்பது, நல்லாட்சிக்கான தேசிய அரசாங்கத்தின் முன்னகர்வுக்குப் பெரும் தடையாக அமைந்திருந்தது. ஊழலை அழிப்பதாகச் சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசால், இதுவரை எந்தவித ஊழலையும் அம்பலப்படுத்த முடியவுமில்லை, ஊழலைக் கட்டுப்படுத்த முடியவுமில்லை. இந்நிலையில்தான், மத்திய வங்கியின் பிணைமுறி விநியோகப் பிரச்சினை பூதாகரமாகியது. இப்பிரச்சினையிலிருந்து மீழ்வதற்குப் பெரும்பாடுபட்ட நல்லாட்சி அரசாங்கம், இறுதியாக ஆணைக்குழுவொன்றை நியமித்து, அதன் அறிக்கையையும் பெற்றிருக்கிறது.

இந்நிலையில் அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கையை எடுக்க வேண்டுமென, பலரும் வலியுறுத்தி வருகின்றனர். அத்துடன், அவ்வறிக்கையை, பொது நிறுவனங்கள் பற்றிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு (கோப்) கையளிக்குமாறு, அக்குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி கோரியுள்ளார். அதுமாத்திரமன்றி, விசாரணை அறிக்கையைத் தமது கட்சியிடம் கையளிக்கக் கோரி, மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளனர். ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த பண்டார மற்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் சுனில் வட்டகல உள்ளிட்ட உறுப்பினர்களால் ஜனாதிபதியின் மேலதிக செயலாளரிடம் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதியின் இன்றைய அறிவிப்பு மிகவும் முக்கியத்துவமானதாக அமையும் என்ற எதிர்பார்ப்பு அனைவர் மத்தியிலும் மேலோங்கியிருக்கிறது. ஏற்கெனவே, ஊழலுக்கு எதிராக, “நான் வாள் எடுப்பேன்” என்று ஜனாதிபதி கடுந்தொனியில் கூறியிருந்தார். ஆகையால், ஜனாதிபதியின் வாள், யாரையெல்லாம் தாக்கவுள்ளது என்பதை இன்றைய விசேட உரையின் சாராம்சமாக எதிர்பார்க்கலாம். ஆனாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில் நிலவும் பனிப்போரின் உச்சகட்டமாகவும் இன்றைய அறிவிப்பு இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் இருக்கிறது. அப்படியான அறிவிப்பொன்று வருமாக இருந்தால், அரசியலில் பாரிய மாற்றங்களையும் எதிர்பார்க்க முடியும்.

எது எப்படியிருப்பினும், சுயநலத்துக்காகப் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். முறைகேடாகப் பயன்படுத்திய நிதியை மீளவும் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாட்டினுடைய பொருளாதாரம் மேம்படும். ஆகையால், இன்றைய ஜனாதிபதியின் அறிவிப்பென்பது மிக முக்கியமானதாக அமையட்டும்.

தமிழ்Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 611, 077 3 219 766,
071 4 543 756
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உயிர்கள் வாழும் இல்லம் வீடு. இங்கு மனிதர்கள் மட்டும் வாழ்வதில்லை.

கிராமங்களில் ஆடு, மாடு, கோழி, பட்சிகள், பிராணிகள் என எத்தனையோ வீட்டைச் சுற்றியும் அருகே அமைந்த வீட்டு முற்றத்து மரம் செடிகளில் மிக மகிழ்ச்சியாகச் சப்தமிட்டபடி தங்கள் இருப்புகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும்.

வீடுகளில் முதியவர்கள் தங்களுக்கு மட்டும் உணவு தேடுவதில்லை. காக்கை, குருவி, ஈ, எறும்புகளுக்கும் உணவுகளை வழங்கி வருவதை நீங்கள் கண்டிருக்கலாம். பசு, ஆடு, கோழி எனப் பலவற்றுக்கும் புல், குழை, அரிசி, தானியம் என்பவற்றை அன்புடன் கொடுப்பதே மிக அழகான காட்சிதான். ஆனால், இவைகளை நாம் கிராமங்களில்த்தான் காணமுடியும்.

இல்லங்களில் எந்த நிகழ்வுக்கும் பிராணிகளைக் கவனிக்காமல் விடமாட்டார்கள். ஏழைகள் கூட, இந்த விடயத்தில் விலைவாசி குறித்துக் கவலைப்படுவதேயில்லை.

ஆனால், நகரில் ஒருவர் வீட்டுக்குச் சொல்லாமல் அறிவிப்பு இன்றிப் போக முடியாது; அநேகர் வீட்டுக்குள் இருப்பதுமில்லை. பலதரப்பட்ட கருமங்கள் அவர்களுக்குண்டு. உறவுகளை மறக்கும் காலம் இது.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# விக்னேஸ்வரனின் தடுமாற்றம்



புருஜோத்தமன் தங்கமயில்

கடந்த பத்து நாட்களுக்குள் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி உட்பட மூன்று ஊடக அறிக்கைகளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டிருக்கின்றார். இப்போதெல்லாம் ஊடகவியலாளர்களால் எழுப்பப்படும் சிக்கலான கேள்விகளுக்கு உடனடியாக (நேரடியாக) பதிலளிப்பதைக் குறிப்பிட்டளவில் தவிர்த்து வருகின்ற முதலமைச்சர், அந்தக் கேள்விகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து வாராந்தம் பதிலளித்து வருகின்றார். அது, கேள்வி- பதில் அறிக்கையாக வெளியாகி வருகின்றது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் கேள்வி- பதில் அறிக்கைகள் மிகவும் பிரபலமானவை. முதுமை காரணமாகக் கருணாநிதி செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கிய பின்னர், அவரின் கேள்வி- பதில் அறிக்கைகள் நின்று போனது.

அந்த இடத்தை இப்போது முதலைமைச்சர் விக்னேஸ்வரன் பிடித்துக் கொண்டிருக்கின்றார். ஊடகவியலாளர்களின் கேள்விகளை நேரடியாக எதிர்கொண்டு உடனே பதிலளிப்பதற்கு சமயோசிதம் அவசியமானது. குறிப்பாக, அரசியலில் சமயோசிதம் தவறும் இடங்கள் சிக்கல்களை ஏற்படுத்திச் சிக்க வைப்பன. விக்னேஸ்வரன், இவ்வாறான சிக்கல்களைப் பல தடவைகள் எதிர்கொண்டிருக்கின்றார்.

அதிலும் குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த பங்காளிக் கட்சிகளை ‘இரத்தக்கறை தோய்ந்தவர்கள்’ என்று அழைத்தது முதல், கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ‘போர்ப்பயிற்சி பெற்றவர்களால் குற்றச்செயல்கள் நிகழ்த்தப்படுகின்றன’என்று கூறியது வரை, அவர் தடுமாற்றமான பதில்களை வழங்கிச் சிக்கலுக்குள் மாட்டியிருக்கின்றார்.

அதன் பின்னர், தான் கூறியதிலிருந்து பின்வாங்கி, விளக்கமளிக்கும் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றார். இவ்வாறான நிலைமைகளை அடுத்தே அவர், கேள்வி- பதில் அறிக்கைகளை வெளியிடுவதற்கு தீர்மானித்திருக்கலாம்.

கடந்த 31ஆம் திகதி, தனது அரசியல் பிரவேசத்துக்கான அறிவிப்பை வெளியிட்டு உரையாற்றிய நடிகர் ரஜினிகாந்த், ஊடகங்களைக் கண்டால் பயமாக இருக்கின்றது என்றார். “...சடுதியாக ஒலிவாங்கிகளை முன்னால் நீட்டி கேள்விகளைக் கேட்கிறார்கள். அந்தக் கேள்விகளுக்கு உடனடியான பதிலளிக்க முடியவில்லை. உடனடியாக ஏதாவது கூறினாலும், அதை வைத்து விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதனாலேயே, பதில் கூறுவதில்லை...” எனும் தொனியில் பேசியிருந்தார்.

ரஜினிகாந்தின் இந்த நிலையை ஒத்த பதில்களைப் பல தருணங்களில் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ஊடகவியலாளர்களிடம் கூறியிருக்கின்றார். நிலைமைகளைச் சமாளிப்பதற்காக கேள்வி- பதில் அறிக்கை வடிவத்தை அவர் தெரிவு செய்த போதிலும், அவரின் ஒவ்வோர் அறிக்கைகளும் ஒன்றோடு ஒன்று முட்டியும் மோதியும் முரண்பட்டும் கொண்டுமிருக்கின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பேரவை அமைக்க நினைத்த தேர்தல் கூட்டணி, விக்னேஸ்வரனின் பின்வாங்கலால் சாத்தியமில்லாமல் போனது. அது தொடர்பில், தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்த புளொட் தவிர்ந்த கட்சிகளுக்கும், சிவில் அமைப்புகளுக்கும் பெரும் ஆதங்கம் உண்டு. அதையடுத்து, பேரவையில் அங்கம் வகித்த சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பை அமைத்து ‘சூரியன்’ சின்னத்துக்குள் சென்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, தமிழ்த் தேசியப் பேரவை என்கிற புதிய பெயரோடு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ‘சைக்கிள்’ சின்னத்துக்குள் கலந்தது. ஆனால், புதிய தேர்தல் கூட்டணிக்கான முயற்சிகள் தோல்வியடைந்ததும், தமிழ் மக்கள் பேரவையிடமிருந்து எந்தவிதமான உத்தியோகபூர்வ அறிக்கைகளும் வெளியாகியிருக்கவில்லை. கிட்டத்தட்ட உறங்குநிலை அமைதியொன்றை பேரவைக்காரர்கள் பேணிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில், பேரவையின் ‘எழுக தமிழ்’ அடையாளத்தையும் தீர்வுத் திட்ட யோசனைகளையும் யார் வைத்துக் கொள்வது என்கிற பிடுங்குப்பாடு, ‘சூரியன்’ சின்னத்தில் வரும் சுரேஷுக்கும் ‘சைக்கிள்’ சின்னத்தில் வரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணிக்கும் ஏற்பட்டிருக்கின்றது.

இன்னொரு பக்கம், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் ஆதரவு யாருக்கானது என்கிற விடயத்தைப் பங்கிடுவது சார்ந்தும் இந்த இரண்டு தரப்புகளுக்குள் மறைமுகமாக முட்டல் மோதல் நீடிக்கின்றது. தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையினரும் விக்னேஸ்வரனின் படத்தைப் பிரச்சாரங்களுக்கு பாவித்து வந்தார்கள்.

இந்த இடத்தில், கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் என்கிற அடையாளத்தை நேரடியாகப் பாவிப்பதிலிருந்து தவிர்த்து, புத்திசாதுரியமாகப் பேரவையின் தீர்வுத் திட்டமே எமது தேர்தல்கால முன்வைப்பு என்கிற கட்டத்துக்குள் நகர்ந்துவிட்டார்கள். இது, தமிழ் மக்கள் பேரவை என்கிற அடையாளத்தை ஒட்டுமொத்தமாகச் சுமப்பதற்கான யுத்தி.

ஆனால், சுரேஷ் அணியோ எப்போதும் அவசரப்படுவது போலவே, இப்போதும் விக்னேஸ்வரன் என்கிற நபரின் அடையாளத்தைத் தம்மோடு பொருத்திக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து தேர்தல் பிரசாரங்களில் பேசி வந்தது.

குறிப்பாக, அடுத்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் விக்னேஸ்வரன், சூரியன் சின்னத்தில் போட்டியிடவுள்ளார் என்று தெரிவித்து, விடயங்களைக் கோட்டை விட்டிருக்கின்றது. அதனால், சூரியன் சின்னத்தில் தான் போட்டியிடுவதற்கான எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று அறிவிப்பதற்காகவும் முதலமைச்சர் அறிக்கை வெளியிட வேண்டி வந்திருக்கின்றது.

கடந்த நத்தார் தினத்துக்கு மறுநாள், முதலமைச்சர் வெளியிட்ட கேள்வி- பதில் அறிக்கையில், தமிழரசுக் கட்சியையும் அதன் முடிவெடுக்கும் தலைமைகளையும் பெருமளவு விமர்சித்திருந்தார். அத்தோடு, தனது அரசியல்- தேர்தல் கால நிலைப்பாடு என்பது தமிழ் மக்கள் பேரவையின் கருத்துகளை- நிலைப்பாட்டை ஒத்தது என்றும் கூறியிருந்தார்.

குறித்த அறிக்கைக்கும், 2015 பொதுத் தேர்தல் காலத்தில் விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கைக்கும் பெருமளவு இணக்கம் உண்டு. ஆனால், அந்த அறிக்கையைச் சமூக ஊடகங்களும் புலம்பெயர் ஊடகங்களும் கருத்தில் எடுத்துக்கொண்ட அளவுக்குத் தாயக மக்கள் கருத்தில் எடுக்கவில்லை. அதனாலேயே, பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அவர் தன்னுடைய நிலைப்பாடுகளிலிருந்து குறிப்பிட்டளவு பின்வாங்கும் நிலையும் ஏற்பட்டது. ஆனால், இம்முறை வெளியான அந்தக் கேள்வி- பதில் அறிக்கையை சமூக ஊடகங்களும் பெரிதாகக் கொண்டு சுமக்கவில்லை.

> “கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணியொன்று பலமாக உருவாகும் போது, தமிழ்த் தேசிய அரசியல் பலப்படும்

ஆனால், அந்த அறிக்கையைக் கொண்டு விக்னேஸ்வரனின் கடந்த கால நிலைப்பாடுகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதைத் தமிழரசுக் கட்சி மிகத்திறம்படச் செய்திருக்கின்றது. கடந்த இரண்டு வருட தமிழ்த் தேசிய அரசியலில், எம்.ஏ.சுமந்திரன் எதிர் சுரேஷ்; சுமந்திரன் எதிர் கஜேந்திரகுமார்; சுமந்திரன் எதிர் விக்னேஸ்வரன் என்கிற நிலைப்பாடே நீடித்து வந்தது.

ஆனால், இம்முறை விக்னேஸ்வரனின் அறிக்கைக்குத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கத்தைக் கொண்டு, பதிலளிக்க வைத்திருக்கின்றார்கள். அது, தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ அறிக்கையாக மாத்திரமல்லாமல், சுமந்திரன் எதிர் விக்னேஸ்வரன் என்கிற அரசியல் அடையாளத்தைத் தவிர்ப்பதற்குமாகும்.

ஏனெனில், சுமந்திரன் எதிர் விக்னேஸ்வரன் என்கிற நிலையைப் பேணுவது என்பது, வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்த பின்னரும் விக்னேஸ்வரனை அரசியல் அரங்கில் மேல் நிலையில் வைத்துக் கொண்டிருக்கும். அதைத் தவிர்க்க வேண்டிய தேவை, தமிழரசுக் கட்சிக்கு உண்டு. அதன்போக்கிலேயே, குறித்த அறிக்கையில் சுமந்திரனின் பெயரைக் குறிப்பிட்டு விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியிருந்த போதிலும், சுமந்திரன் பதிலளிக்கவில்லை என்று தோன்றுகிறது.

அதிக தருணங்களில், தன்னுடைய கருத்துகள் விமர்சனங்களே இறுதியானது என்கிற தோரணையில் முதலமைச்சர் இருந்து வந்திருக்கின்றார். ஆனால், தன்னுடைய கருத்துகளுக்கான எதிர்வினையை எதிர்கொள்வது சார்ந்து அவர் அதிக பதற்றமான மனநிலையில் இருக்கின்றார்.

இதனாலேயே, அவருடைய நிலைப்பாடுகள் சார்ந்து உறுதியான நிலையொன்று உருவாகியிருக்கவில்லை. அதனை, மக்கள் நன்றாக உணர்ந்து வைத்திருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில், தன்னுடைய விமர்சனங்களுக்குத் தமிழரசுக் கட்சி பெரியளவில் பதிலளிக்கும் என்று விக்னேஸ்வரன் நினைத்திருக்க வாய்ப்புகள் இல்லை. அதுவும் துரைராஜசிங்கத்தை வைத்து, நிகழ்ந்தவைகள் என்ன என்று கடந்த காலத்துக் காட்சிகளைக் கிளறுவார்கள் என்றும் அவர் நினைத்திருக்க மாட்டார்.

எனினும், அவரின் எதிர்பார்ப்புப் பொய்த்துப்போன நிலையில், நிலைமைகளைச் சமாளிப்பதற்காக, புத்தாண்டு வாழ்த்துச் செய்தி தொடர்பிலான அறிக்கையில், ‘.... எமது அரசியல் தலைமைகள் தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு, தமது வேறுபட்ட கருத்துகளை வெளியிடுவதைத் தவிர்ப்பார்களாக. எமது மக்களின் சுகவாழ்வுக்கும் நிலைபேறான அரசியல் அந்தஸ்துக்குமாக, யாவரும் ஒன்றிணைந்து பாடுபட இப்புதிய புத்தாண்டு வழிவகுப்பதாக’ என்கிற விடயத்தை உள்ளடக்கியிருக்கின்றார்.

தமிழ்த் தேசிய அரசியலில் நீடிக்கும் ‘ஒரு கட்சி, ஓர் இயக்க அல்லது ஒரு கூட்டணி’ என்கிற ‘ஏக நிலை அரசியல்’ என்பது சில தருணங்களில் நன்மைகளைக் கொண்டு வந்து சேர்ந்தாலும் அதிக தருணங்களில் அதிகளவான பாதிப்புகளையும் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றது.

அப்படியான நிலையில், குறிப்பாகப் பெரும் அனுபவங்களையெல்லாம் பெற்றுக்கொண்டு விட்ட 2009க்குப் பின்னரான அரசியல் என்பது, இரு பலமான அணிகளின் அரசியலாக மாற வேண்டும். அதுதான், ஆரோக்கியமான அரசியலுக்கு வலுச்சேர்க்கும். கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணியொன்றுக்கான வாய்ப்புகளைக் கடந்த காலத்தில் பலரும் தோற்கடித்திருக்கின்றார்கள்.

அவ்வாறான வகிபாகத்தைத் தன்னுடைய தடுமாற்றங்களினால் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் எடுத்துக்கொள்ளும் போதுதான், அவர் மீதான விமர்சனமும் அதிகளவில் எழுகின்றது. கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணியொன்று பலமாக உருவாகும் போது, தமிழ்த் தேசிய அரசியல் பலப்படும். அது, கூட்டமைப்பையும் பலப்படுத்தும்.

## கடிதங்கள்

### வீதிப் போக்குவரத்து பொலிஸார் எதற்காக?

மட்டக்களப்பில் மாத்திரமல்ல நாடு பூராகவும் விபத்துகள் நடந்த வண்ணமே இருக்கின்றன. இதற்கு வீதிகள் சரியாக இல்லாமை, மாதமோ, வாரக்கணக்கிட்டோ அந்த வீதியில் சேரும் மண் அகற்றப்படாமையிலிருந்து குன்றும் குழியுமாக இருத்தல் என்று பலகாரணங்களைச் சொன்னாலும், இதற்கான ஒரு பொறிமுறை ஏற்படுத்தப்பட்டு விபத்துத் தணிப்பேதும் நடைபெறுகிறதா என்ற கேள்வியை மாத்திரமே கேட்க முடிகிறது.

மட்டக்களப்பின் பல வீதிகளிலும் நிறுத்தப்படும் வீதிப் போக்குவரத்து பொலிஸார் தங்களது விருப்பத்துக்கேற்ப நடந்து கொள்கின்றனர். வீதி விபத்தைக் குறைப்பது அவர்களின் முதலாவது கடமையாக இருந்த போதிலும், தண்டப்பணப் புத்தகத்திலேயே அவர்களது குறிக்கோள் முழுவதும் இருக்கிறது. பொலிஸார் மக்களின் நண்பன் என்று எழுதி ஒட்டிக்கொண்டு அவர்கள் செய்யும் கொடுமைகளோ ஏராளம்.

ஒன்று கைத்தொலைபேசியைக் காதுக்குள் வைத்துக்கொண்டு யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டே காலத்தை ஓட்டுகிறார்கள்.

இந்த நேரத்தில் விபத்துகள் நடைபெறுவதுமுண்டு; வாகன நெரிசல் ஏற்படுவதுமுண்டு. எல்லோருக்கும் தனிப்பட்ட விடயம், குடும்பப் பிரச்சினைகள் இருந்தாலும் சில நேரங்களில் அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு கடமையைச் செய்ய வேண்டும்.

ஒரு பொலிஸ் பிரிவுக்குள் 500 மீற்றருக்குள் பல போக்குவரத்துப் பொலிஸார் வாகனங்களை நிறுத்திப் பத்திரங்களைச் சோதனையிடுகின்றனர். ஆனால், விபத்து தொடர்ச்சியாக நடைபெறும் இடங்களில் வாகனங்களைச் சரியாக ஓட்டிச் செல்வதற்கு உதவி செய்ய அவர்கள் தயாரில்லை. எனவேதான் வீதிப்போக்குவரத்துப் பொலிஸார் எதற்காக என்ற கேள்வி எழுகின்றது.

– கே.எல்.ரி. யுதாஜித்



“பணத்தையும் அதிகாரத்தையும் செல்வாக்கையும் அடித்துவிடக் கூடிய சமாசாரம் ஒன்று உண்டு; அதுதான் உற்சாகம்”
– மார்க் ருவைன்

“எவ்வளவுதான் மறைத்து வைத்திருந்தாலும் எல்லோருடைய நெஞ்சிலும் புகழுக்கான ஆசை எப்போதும் ஆட்சி செய்து கொண்டுதான் இருக்கும்”
– டலாய் லாமா






எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக


ஸ்ரீமாவோ பண்டாரநாயக


சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க


மஹிந்த ராஜபக்ஷ


மைத்திரிபால சிறிசேன

## இரண்டு நபர்களின் அதிகாரப் போட்டிக்குப் பலியாகிய

# ஸ்ரீ ல.சு.க



எம்.எஸ்.எம். ஐயூப்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் அக்கட்சியின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அணிக்கும் இடையிலான உறவைப் போன்றதோர் உறவை வரலாற்றில் எப்போதும் நாம் கண்டதில்லை.

இரு அணிகளும் நண்பர்களா, எதிரிகளா என்று விளங்கிக் கொள்வது கடினமாக இருக்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில், அவை ஒன்றுக்கொன்று குழி பறிக்கின்றன; அடுத்த சந்தர்ப்பத்தில், ஒற்றுமைக்காகப் பேச்சுவார்த்தை நடத்துகின்றன.

இந்த அணிகளிரண்டும் ஒரே கட்சியைச் சேர்ந்தவையாயினும், மூன்றாண்டுகளாக இரண்டும் ஒன்றையொன்று எதிர்த்துச் செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

ஆனால், கட்சித் தலைவர் என்ற முறையில், ஜனாதிபதி மைத்திரிபாலவோ கட்சியின் மத்திய குழுவோ, மஹிந்த அணியினருக்கு எதிராக எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் எடுப்பதில்லை.

மஹிந்த அணியினரும் தமக்காக வேறு கட்சியொன்றையும் ஆரம்பித்துள்ளனர். ஸ்ரீ ல.சு.கவுக்கு எதிராகத் தேர்தலிலும் போட்டியிடுகின்றனர். ஆனால், ஸ்ரீ ல.சு.கவிலிருந்து விலகிப் போகும் எண்ணமும் அவர்களுக்கு இல்லை.

ஸ்ரீ ல.சு.கவில் இரண்டு அணிகள் இருந்த போதிலும், அவை வெவ்வேறாகத் தேர்தலில் போட்டியிட்டாலும் இரு அணிகளுக்கும் இடையே கொள்கைப் பிரச்சினை ஏதும் இல்லை.

அது, பிரதானமாக இரண்டு தலைவர்களுக்கிடையிலும் அவர்களுக்குச் சமீபத்திலுள்ள நண்பர்களுக்கு இடையிலுமான அதிகாரப் போட்டியேயன்றி, வேறொன்றுமல்ல. நாட்டின் பிரதான இரு கட்சிகளுக்கிடையிலும் கொள்கை வேறுபாடுகள் இல்லாதபோது, ஸ்ரீ ல.சு.கவின் இரண்டு அணிகளுக்கிடையே கொள்கைப் பிரச்சினைகள் இருக்க முடியாது.

ஸ்ரீ ல.சு.கட்சி 1951 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகவினால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவராகவே இருந்தார்.

ஐ.தே.கவிலிருந்து விலகும் போது, ஐ.தே. கவின் எந்தவொரு கொள்கையையும் அவர் விமர்சித்திருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், பிரிட்டிஷாருக்கு சார்பான முதலாளித்துவ வர்க்கம் ஒன்று அக்காலத்தில் உருவாகியிருந்தது. இந்தச் சக்தி ஐ.தே.கவின் பின்னணியில் இருந்தது. அவ்வர்க்கமே ஐ.தே.கவை வளர்த்தது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின் இறுதிக் காலத்தில் தோன்ற ஆரம்பித்து, சுதந்திரத்தின் பின்னர் தலைதூக்கிய ஒரு முதலாளித்துவ வர்க்கமும் இருந்தது. அது, ஸ்ரீ ல.சு.கவின் பின்புலத்தில் இருந்தது.

இந்த வர்க்கம் தமது இருப்புக்காகத் தேசியவாதத்தைப் பேசியது. அதன் தூண்டுதலாலேயோ அல்லது அதைத் திருப்திப் படுத்துவதற்காகவோ, பண்டாரநாயக்க 1956 ஆம் ஆண்டு, தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தார். தேசியவாதம் தொடர்பான இது போன்றதொரு கொள்கை வித்தியாசம், அக்காலத்தில் ஐ.தே.கவுக்கும் ஸ்ரீ ல.சு.கவுக்கும் இடையில் நிலவியது.

அதற்கு அமைய, அக்கட்சிகள் தத்தமது சுலோகங்களையும் அமைத்துக் கொண்டன. ஆனால், காலப்போக்கில் இரு கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வரவே, இரு கட்சிகளும் இந்த இரு முதலாளித்துவ பிரிவினரையும் ஆதரிக்கத் தொடங்கினர். அல்லது இரு முதலாளித்துவ பிரிவினரும் இரு கட்சிகளுக்கும் தமது ஆதரவை வழங்கினர். எனவே, காலப்போக்கில் இரு கட்சிகளுக்கும் இடையிலான தேசியவாதம் பற்றிய கொள்கை, வித்தியாசம் இல்லாமல் போய்விட்டது.

ஆனால், 1970 ஆம் ஆண்டு, உலகின் முதலாவது பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபோது, அந்த அரசாங்கம் கடுமையான முறையில் மூடிய பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க முற்பட்டது.

வெளிநாட்டு இறக்குமதிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்து மிளகாய் போன்றவற்றுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்ட

> **“மஹிந்த பிரதமராவதைத் தடுப்பதற்காக மைத்திரி, அந்தத் தேர்தலின்போது, தாமே தலைமை தாங்கிய ஸ்ரீ ல.சு.கவைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுத்தார்**

போதிலும், நாட்டில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அதன் காரணமாகவே, 1977 ஆம் பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் படுதோல்வியடைந்தது. ஜே.ஆர். ஜெயவர்தனவின் தலைமையிலான ஐ.தே.க, அக்காலத்தில் தாராள பொருளாதாரக் கொள்கையைப் பரப்பி வந்தது. அந்தநிலையில் அந்தத் தேர்தலில் ஐ.தே.க ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்தது. பிரதமராகப் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்தன தாராள பொருளாதார கொள்கையை அமுலாக்கி, சுதந்திர வர்த்தக வலயங்களையும் ஆரம்பித்து, அந்தப் பொருளாதார முறையின் பாதுகாப்புக்காகத் தனியொருவரின் கையில், அதிகாரம் குவியும் நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் அறிமுகப்படுத்தினார்.

ஐ.தே.கவே தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும் என நினைத்து, விகிதாசாரத் தேர்தல் முறையையும் கொண்டு வந்தார். இவற்றை ஸ்ரீ ல.சு.க எதிர்த்தது. அதுதான் அக்காலத்தில் இரு கட்சிகளுக்கும் இடையிலான கொள்கை வித்தியாசமாக இருந்தது. பின்னர், இந்த வித்தியாசமும் மறையத் தொடங்கியது. தாராள பொருளாதாரக் கொள்கையைத் திட்டித் தீர்த்த ஸ்ரீ ல.சு.க, 1994 ஆம் ஆண்டு, மீண்டும் பதவிக்கு வந்தபோது, தாமும் தாராளப் பொருளாதாரக் கொள்கையை ஐ.தே.கவை விடச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தியது.

அதற்காகத் தாமும் தனியார் மயப்படுத்தலைத் தொடர்ந்தது. Build Operate and Own (BOO) மற்றும் Build Operate and Transfer (BOT) எனப்படும் தாராள பொருளாதாரக் கொள்கையின் கீழான, தனியார்மயப்படுத்தல் முறைமைகளை 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகாவின் அரசாங்கமே, முதன்முறையாக அமுலாக்கியது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையைத் தொடர்ந்து திட்டித் தீர்த்துக் கொண்டு இருந்தாலும், அதை ஒழிக்கவும் அக்கட்சி முயற்சிக்கவில்லை. ஸ்ரீ ல.சு.கயின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னர், தாராள பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்தது மட்டுமல்லாது, 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம், நிறைவேற்று ஜனாதிபதி முறையை மேலும் பலப்படுத்தினார். பொதுவாகக் கூறுவதாயின், மக்கள் விடுதலை முன்னணி, முன்னணி சோஷலிசக் கட்சி மற்றும் நவ சமசமாஜக் கட்சி போன்ற சில சிறிய இடதுசாரி கட்சிகளைத் தவிர்ந்த, நாட்டில் ஏனைய கட்சிகளிடையே எந்தவொரு கொள்கை வேறுபாடும் இல்லை. வேறுபாடுகள் இருப்பின், அக்கட்சிகள் அந்தப் பொதுக் கொள்கைகளைச் செயற்படுத்தும்போது கையாளும் தந்திரோபாயங்களில் மட்டுமேதான் வெளிப்படும்.

எனவே, தற்போது ஐதே.கவுக்கும் ஸ்ரீ ல.சு.கவுக்கும் இடையே எந்தவித கொள்கை முரண்பாடும் இல்லை. அவ்வாறு இருக்க, அதிகாரப் போட்டி காரணமாகப் பிரிந்த, ஸ்ரீ ல.சு.கவின் இரண்டு பிரிவுகளுக்கிடையில் கொள்கை வேறுபாடுகள் இருக்க நியாயமே இல்லை. அவ்வாறான வேறுபாடுகள் அறவே இல்லை.ஆனால், அவ்வணிகள் பிரிந்து செயற்படுகின்றன. 2014 ஆம் ஆண்டிலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில், பிரதமர் பதவியை எதிர்பார்த்து இருந்த மைத்திரிபால சிறிசேன, தமக்கு அந்தப் பதவி ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை என்பது உறுதியாகிவிட்ட போது, விரக்தியடைந்து மஹிந்தவின் அரசாங்கத்திலிருந்து விலகியதே அந்தநிலைமையின் ஆரம்பத்தைக் குறித்தது.

ஆனால், மைத்திரிபால தமது பிரச்சினையை மூடி மறைத்து, மஹிந்தவுக்கு எதிரான தமது போராட்டத்தை, மக்களின் போராட்டமாக, மிகச் சாதுரியமாக, மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றார்.

அவர், தமது போராட்டத்தை ஜனநாயகத்துக்கான போராட்டமாகச் சித்திரித்தார். ஐ.தே.கவும் மக்கள் விடுதலை முன்னணியும் சிவில் சமூக அமைப்புகளும் சேர்ந்து, அவரது போராட்டத்துக்கு ‘நல்லாட்சி’ போன்ற சுலோகங்களையும் வழங்கின.

ஊழல் மோசடிக்காரர்களின் ஆட்சி என்பதற்குப் புறம்பாக ‘கொடுங்கோல்’ ஆட்சியாகவும் இருந்த மஹிந்தவின் ஆட்சியே, மைத்திரியின் போராட்டத்துக்கு அவசியமான ஆயுதங்களை

> **“தேர்தல் முடிவு எதுவானாலும் ஸ்ரீ ல.சு.கவின் பிளவு நிரந்தரமாகிவிட்டது என்றே தெரிகிறது. இது கொள்கைப் பிரச்சினையல்ல என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது**

வழங்கி இருந்தது.

தாம் தனித்து, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவைத் தோற்கடிக்க முடியாது என்றறிந்திருந்த ஐ.தே.கவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், மைத்திரியை ஜனாதிபதித் தேர்தலில், மஹிந்தவுக்கு எதிராக நிறுத்தினர். அபாயகரமான அந்தத் தேர்தலில் மைத்திரி வெற்றி பெற்றார். மஹிந்த உள்ளிட்ட ஸ்ரீ ல.சு.க தலைவர்களுக்கு, ஸ்ரீ ல.சு.க மத்திய குழுவில் பெரும்பான்மை பலமிருந்தும், அவர்கள் மைத்திரியைக் கட்சியிலிருந்து நீக்கிவிடாது, அவருக்குக் கட்சியின் தலைவர் பதவியையும் வழங்கினர். ஆனால், அப்போதும் கட்சியின் பெரும்பான்மையினர் மஹிந்தவையே தலைவராக ஏற்றுக் கொண்டு இருந்தனர்.

இது, இதற்கு முன்னர் காணப்படாத ஒரு நிலைமையாகும். சந்திரிகாவுக்கும் மஹிந்தவுக்கும் இடையில் பனிப்போர் நடைபெற்ற காலத்தில், சந்திரிகாவை ஆதரித்த ஸ்ரீ ல.சு.கவின் பெரும்பான்மையினர், மஹிந்த ஜனாதிபதியாகிய பின்னர், சந்திரிகாவை ஒதுக்கித் தள்ளிவிட்டு, மஹிந்தவை ஆதரிக்கத் தொடங்கினர்.

ஆனால், மஹிந்தவுக்கும் மைத்திரிக்கும் இடையில் பனிப்போர் நடைபெற்ற காலத்தில், மஹிந்தவை ஆதரித்தவர்கள், மைத்திரி ஜனாதிபதியாகிய பின், மைத்திரியை ஆதரிக்க முன்வரவில்லை. இவ்வாறு, மஹிந்தவின் பின்னால் அணிதிரண்டு இருந்தவர்கள், ஸ்ரீ ல.சு.கவின் தலைவர் பதவியை மைத்திரிக்கு வழங்கியதை அடுத்தே, அக்கட்சி உண்மையிலேயே பிளவுபடத் தொடங்கியது.

அதற்கு முன்னர், மைத்திரியோடு ஸ்ரீ ல.சு.ககாரர்கள் சிலர் இருந்த போதிலும், அவர்களின் எண்ணிக்கை மிகச் சிறியதாக இருந்ததனாலும், மைத்திரிக்குக் கட்சியில் எவ்வித அதிகாரமும் இல்லாதிருந்ததனாலும் அது ஒரு பிளவாகக் கருத முடியாது. எனவே, கட்சியின் தலைமையை ஒப்படைத்து, மஹிந்தவும் அவரது நெருங்கிய சகாக்களுமே, ஸ்ரீ ல.சு.கவின் பிளவுக்கு வித்திட்டனர். இவர்கள் விரும்பியிருந்தால் ஒட்டுமொத்த மத்திய குழு, தம்வசம் இருந்த அதிகாரத்தைப் பாவித்து, மைத்திரியைக் கட்சியிலிருந்து நீக்கியிருக்கலாம். அல்லது, கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியானால், அவரே கட்சியின் தலைவராகவும் இருப்பார் என்ற கட்சி யாப்பிலுள்ள குறித்த வாசகத்தைத் திருத்தியிருக்கலாம்.

ஸ்ரீ ல.சு.கவின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டாலும், மஹிந்தவை வணங்கிக் கொண்டு இருந்த கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதில் மைத்திரி பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கினார்.

இதனைப் பார்த்த, சிவில் சமூகத்தைச் சேர்ந்த அவரது ஆதரவாளர்கள், அவர் ஸ்ரீ ல.சு.க தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது என்று வாதிட்டனர். ஆனால், பழுத்த அரசியல்வாதியான மைத்திரி, அந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவரது கண்ணோட்டத்தில், உண்மையிலேயே அவரது நிலைப்பாடு சரியானதே.

அவர், ஸ்ரீ ல.சு.க தலைவராக இருக்காவிட்டால், 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பெறுபேறு சிலவேளை மாறியிருக்கும். சிலவேளை, இன்று நாட்டின் நிலைமையும் மாறியிருக்கலாம்.

உண்மையைக் கூறுவதாக இருந்தால், மஹிந்த பிரதமராவதைத் தடுப்பதற்காக மைத்திரி, அந்தத் தேர்தலின்போது, தாமே தலைமை தாங்கிய ஸ்ரீ ல.சு.கவைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுத்தார்.

அதற்காக அவர், தேர்தல் நெருங்கி வரும் போது, மஹிந்தவுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவந்த, ஸ்ரீ ல.சு.க பொதுச் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பாவையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவையும் அப் பதவிகளில் இருந்து நீக்கினார். “ஸ்ரீ ல.சு.க தேர்தலில் வெற்றி பெற்றாலும், மஹிந்தவைப் பிரதமராக நியமிப்பதில்லை” எனப் பகிரங்கமாகக் கூறி, ஸ்ரீ ல.சு.ககாரர்களை மனமுடையச் செய்தார்.

மைத்திரி என்னதான் கூறினாலும், அத்தேர்தலில் ஸ்ரீ ல.சு.க வெற்றி பெற்றிருந்தால் அவர், மஹிந்தவை பிரதமராக நியமித்துத்தான் ஆக வேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையை வென்றவரைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்பதுதான் சட்டம்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டு இருந்தால், மஹிந்த முன்னர் போலவே ஐ.தே.க எம்பிகளை விலைகொடுத்து வாங்கி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைத் தேடிக்கொண்டு, மைத்திரியைக் குற்றப் பிரேரணை மூலம், பதவி நீக்கம் செய்து, ஜனாதிபதி பதவியை மீண்டும கைப்பற்றிக் கொண்டு இருப்பார். பொன்சேகாவைப் பழி வாங்கியதைப் போல், அல்லது அதையும் விட மோசமாக மைத்திரியையும் பழி வாங்கியிருப்பார்.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்து மைத்திரிபால ஸ்ரீ ல.சு.கவின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டதன் பின்னர், நாட்டில் ஒரு விசித்திரமான அரசியல் நிலைமை உருவாகியது. ஸ்ரீ ல.சு.கவின் தலைவர் அக்கட்சிக்கு எதிராகச் செயற்படும் ஐ.தே.கவுடன் சேர்ந்து அரசாங்கத்தை நடத்துகிறார். மைத்திரியின் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள், அவரது தலைமையிலான அரசாங்கத்தை எதிர்த்துச் செயற்படுகிறார்கள். அதற்கு, அவரது பரம எதிரியான மஹிந்த ராஜபக்ஷ முதலில் மறைமுகமாகவும் பின்னர் பகிரங்கமாகவும் அவர்களுக்கு உதவுகிறார்.

நிலைமை எவ்வளவு கேலிக்கூத்தாகியது என்றால், 2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது, ஸ்ரீ ல.சு.க தலைவர் மைத்திரிபால, கட்சியின் செயலாளரையும் ஐ.ம.சு.முவின் செயலாளரையும் பதவிநீக்கம் செய்தும் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டும் தாம் தலைமை தாங்கும் கட்சியையே தோற்கடிக்கும் வகையில் நடந்து கொள்கிறார்.

இப்போது, ஸ்ரீ ல.சு.க தெளிவாகவே இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. ஓர் அணியை மைத்திரிபால தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, கட்சியில் இருக்கும் மஹிந்தவின் ஆதரவாளர்களைப் படிப்படியாகத் தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து நீக்கி வருகிறார்.

கட்சிக்குள் அதிகாரத்தைச் செலுத்த முடியாததால், இரவல் வாங்கிய கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியை மஹிந்த வளர்த்து, நடவடிக்கை எடுத்து வருகிறார். இம் முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் மஹிந்த அணி அந்தக் கட்சியின் சின்னத்திலேயே தமது வேட்பாளர்களைப் போட்டியில் நிறுத்தியுள்ளது.

தெளிவாக ஸ்ரீ ல.சு.க பிளவுபட்டதன் பின்னர், நடைபெறும் முதலாவது தேர்தல் என்பதால் இந்தத் தேர்தல் ஸ்ரீல.சு.க, பொதுஜன முன்னணி மற்றும் ஐ.தே.க ஆகிய மூன்று கட்சிகளுக்கும் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இந்தத் தேர்தல் முடிவுகளைப் பார்த்து, மக்கள் 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போதும் ஜனாதிபதித் தேர்தலின் போதும் தாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பார்கள். எந்தக் கட்சி முன்னணியில் இருக்கிறதோ, அந்தக் கட்சியின் பக்கமே மக்கள் மென்மேலும் சாய்வார்கள். ஏனெனில், இந்தக் கட்சிகளுக்கிடையே கொள்கை வேறுபாடுகள் இல்லை. இருந்தாலும், மக்களுக்கு கொள்கை என்பது முக்கியமல்ல; அவர்கள் வெற்றி பெறும் அணியில் இருக்கவே விரும்புவார்கள். எனவே, இந்தத் தேர்தல் தேசிய மட்டத்திலான தேர்தல் ஒன்றைப் போல், பிரதான மூன்று அணிகளுக்கும் முக்கியமாக உள்ளது. ஸ்ரீல.சு.க அடிமட்டத் தொண்டர்கள், மஹிந்தவுடனேயே இருக்கிறார்கள் என்று மஹிந்த அணி நம்புகிறது. ஆனால், மைத்திரி இறுதி நேரத்தில் என்ன தந்திரத்தைக் கையாள்வார் என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. அதேவேளை, தாம் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுவிடுவோமோ என்ற அச்சம் மைத்திரி அணிக்கு இருக்கிறது. எனவே, மைத்திரி ஏனைய பல கட்சிகளிலிருந்து, அவற்றின் முக்கியஸ்தர்களை வளைத்தெடுத்து, பொது வாக்காளர்களுக்கு மானசிகமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறார்.

அதன் பிரகாரமே அவர், விமல் வீரவன்சவின் கட்சியிலிருந்து அதன் நான்கு முக்கிய தலைவர்களைக் கழற்றி எடுத்தார். மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் சோமவீர சந்திரசிறி மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறியானி விஜேவிக்கிரமவைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டார். தேர்தல் மேலும் நெருங்கும் போது, அவர் மேலும் பலருக்கு வலை வீசலாம்.

தேர்தல் முடிவு எதுவானாலும் ஸ்ரீ ல.சு.கவின் பிளவு நிரந்தரமாகிவிட்டது என்றே தெரிகிறது. இது கொள்கைப் பிரச்சினையல்ல என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது. இரண்டு மனிதர்களுக்கிடையே பட்டம் பதவிகளுக்காகவென ஆரம்பிக்கப்பட்ட அதிகாரப் போட்டி இப்போது அவ்விருவரின் இருப்புக்காக கட்சியை இரண்டாக பிளந்துவிட்டது. தெளிவான கொள்கை அடிப்படையிலன்றி தனி நபர் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு கட்சிக்கும் இது நடக்கலாம்.



2015 முதல் 2017 வரையான காலத்தில், மரண தண்டனைக் கைதிகளாக இருந்த 274பேர், ஆயுள் தண்டனைக் கைதிகளாக, மாற்றப்பட்டுள்ளனர்.

1,040 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சாவுடன், 63 வயதுடைய பெண்ணொருவர், மிரிஹான –கல்வல வீதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.





"தேர்தல் சட்டம் அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்தப் படுகிறது. சில அரசியல்வாதிகள், தேர்தல் சட்டத்தை மீறுவதாகக் கருத்துகள் வெளியான போதிலும், அதிகாரிகள் அமைதிகாத்து வருகின்றனர்.



– நாடாளுமன்ற உறுப்பினர் – நாமல் ராஜபக்ஷ

தரம் குறைந்த பால்மா இறக்குமதி செய்தால்

# கடும் நடவடிக்கை



தரமற்ற பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு எதிராக, ஒரு வாரத்துக்குள் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென, கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

அம்பேவலயில் அமைந்துள்ள ஹைலண்ட் பால்மா உற்பத்தி நிறுவனத்துக்குச் சென்று, அங்கு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்பார்வைச் செய்த அமைச்சர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் தேசிய பால்மா உற்பத்தித் துறைக்கு முன்னுரிமை கொடுத்து, தேவையான பட்சத்தில் மாத்திரமே பால்மா இறக்குமதிக்கு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஐஸ்கிரீம், யோகட் ஆகியவற்றுக்கும் தரநிலையொன்று அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தற்போதை அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது, இந்நாட்டில் பசும்பால் பயன்பாடு 20 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும் அது தற்போது, 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

பசும்பால் மற்றும் தேசிய பால்மா உற்பத்திகளை மேம்படுத்தும் வகையில், பாடசாலை மாணவர்களைப் போன்று, முன்பள்ளி மாணவர்களுக்கு பசும்பால் கொடுக்கப்படல் வேண்டுமெனவும் அமைச்சர் ஹரிசன் குறிப்பிட்டார்.

உள்நாட்டில், பால்மாவுக்குப் பதிலாக, பசும்பால் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ளப்படுமென, அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## வர்த்தக நிலையம் தீக்கிரை

பம்பலப்பிட்டி - டுப்பளிகேஷன் வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்று, தீக்கிரையான சம்பவமொன்று, நேற்று முன்தினம் (01) இரவு இடம்பெற்றுள்ளது.

பம்பலபிட்டி பொலிஸார், கொழும்பு நகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து, தீயைப் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

எது எவ்வாறாயினும், தீயினால் உயிராபத்துகள் எதுவும் ஏற்படவில்லையென, பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வரட்சி தொடரும்

நாட்டில் தற்போது நிலவும் வரட்சியான வானிலை, எதிர்வரும் பெப்பரவரி மாதம் வரையில் தொடருமென, காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவப்பெயர்ச்சியின் போது, மழை குறைவடைவதே இதற்கான காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளதாக, காலநிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் அத்துல கருணாநாயக்க தெரிவித்தார்.

இதன்போது, நாட்டுக்கு 14 சதவீதமான மழைவீழ்ச்சியே கிடைக்கும் எனவும், அவர் குறிப்பிட்டார்.

## நாளாந்தம் 4 கிலோகிராம் ஹெரோயின் நுகர்வு

இலங்கையில் 45 ஆயிரம் பேர் ஹெரோயின் போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகையவர்களால், நாளாந்தம் 4 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் நுகரப்படுவதாக, அபாயகர போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ரவிந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, வருடாந்தம் அண்ணளவாக 1,478 கிலோகிராம் ஹெரோயின் நுகரப்படுகின்றது. இந்தப் போதைப்பொருட்கள், இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து மீன்பிடிப் படகுகள் ஊடாக, இலங்கைக்குள் கொண்டுவரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கையின் கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களில், சட்டவிரோதமான முறையில் 500 ஹெக்டேயர் நிலப்பரப்பில் கஞ்சா பயிரிடப்படுவதாகவும், அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவிக்கின்றது.

## வாகன விபத்துகளில் நால்வர் பலி

நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் இடம்பெற்ற வாகன விபத்துகளில், நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

பல்லேவல, மீரிகம - திவுலுபிட்டிய வீதியில், பாரவூர்தியொன்றும் சைக்கிளொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில், சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, நுகேகொடை - பெப்பிலியான வீதியில், மோட்டார் சைக்கிளொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், அதைச் செலுத்தியவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், வென்னப்புவ, தும்மலதெனிய, கினிபொல வீதியில், மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானதில், ஒருவர் உயிரிந்துள்ள அதேவேளை, கொட்டதெனியாவ, கிரிவுல்ல பிரதேசத்தில் மேலுமொரு மோட்டார் சைக்கிள் விபத்தில், ஒருவர் உயிரிழந்துள்ளாரென, பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## புத்தாண்டு கொண்டாட்டம்...



எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அலுவலகத்தில், புத்தாண்டுக் கடமைகள், நேற்று (02) உத்தியோகபரேர்வமாகப் பொறுப்பேற்கப்பட்டன. இதன்போது, எதிர்க்கட்சித் தலைவர் குத்துவிளக்கேற்றி, கடமைகளை ஆரம்பித்து வைப்பதை, படங்களில் காணலாம்.

சிற்றுண்டிச்சாலை உணவுப் பொதியில்

## பச்சை நிறக் கோழியிறைச்சி



தம்புளை பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றில் வழங்கப்பட்ட உணவுப் பொதிகளில் இருந்த கோழி இறைச்சியின் நிறம், பச்சையாகக் காணப்பட்ட சம்பவமொன்று, புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் (01) இடம்பெற்றுள்ளது.

இதனால், மக்கள் பெரும் குழப்பத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம், பௌர்ணமி மற்றும் புதுவருடம் என்பதால், தம்புளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அலுவலக அதிகாரிகள் விடுமுறையில் இருந்துள்ளனர். இதனால், மேற்படி விவகாரம் தொடர்பில் முறையிடுவதில், பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர்.

இது தொடர்பில், குறித்த சிற்றுண்டிச்சாலை உரிமையாளரிடம் வினவிய போது, சிற்றுண்டிச்சாலையில் இடம்பெற்ற தவறு காரணமாக, கோழியின் நிறம் பச்சையாக மாறியுள்ளதென, அவர் குறிப்பிட்டார்.

பச்சை நிற மரக்கறிகளுக்கு ஒரு சுவையூட்டியும், இறைச்சி போன்றவற்றுக்கு பிறிதொரு சுவையூட்டியும் பயன்படுத்தப்படுகின்ற நிலையில், மரக்கறிகளுக்கு பயப்படுத்தப்படும் சுவையூட்டி, தவறுதாலக குறித்த இறைச்சியில் போடப்பட்டமையே இந்த நிறமாற்றத்துக்கு காரணம் எனவும், அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற செயற்கைச் சுவையூட்டிகள், வர்த்தக நிலையங்களில் கிடைப்பதாகவும் அனைத்து ஹோட்டல்கள் மற்றும் சிற்றூண்டிசாலைகளிலும் இவை பயன்படுத்தப் படுவதாகவும் குறிப்பிட்ட சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளர், இது மனித உடலுக்குத் தீங்கு ஏற்படுத்துவது அல்ல எனவும் குறிப்பிட்டார்.

## அரச ஊழியர்களுக்கு உத்தியோகபூர்வ வீடு



அரச ஊழியர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணித்துக் கொடுக்கவுள்ளதாகவும் அவற்றை, "நில செவன" வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கவுள்ளதாகவும், அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, நேற்று (02) தெரிவித்தார்.

2018 புது வருடத்துக்கான பொதுச் சேவைக்கான உறுதிமொழியை வழங்கி, புது வருடத்தின் கடமை களை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர் கூறியதாவது,

"2018ஆம் ஆண்டு, ஊழல் மோசடியற்ற பொதுச் சேவை ஆண்டாக அமைய வேண்டும்

"அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் கௌரவத்தைக் காக்கும் வகையில், அவர்களுக்கான சம்பள அதிகரிப்புகள், கடந்த மூன்று வருடங்களின் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

"இந்நிலையில், 2018ஆம் ஆண்டு, ஊழல் மோசடியற்ற பொதுச் சேவை ஆண்டாக அமையப்பெற வேண்டும்" என, அமைச்சர் மேலும் கூறினார்.

வடமேல் மாகாண

## கலால் அதிகாரி வீட்டில் கைக்குண்டுத் தாக்குதல்

வடமேல் மாகாண கலால் உதவி ஆணையாளரின் மாகந்துர பகுதியிலுள்ள வீட்டின் மீது, கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1 மணியளவில், இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பன்னல பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், தாக்குதல் இடம்பெற்றவேளை, உதவி ஆணையாளர் லெஸ்லி ஜயரத்ன வீட்டிலேயே இருந்ததாகவும், தாக்குதலால், அவருக்கோ அல்லது அவருடைய குடும்பத்தினருக்கோ எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை எனவும், பொலிஸார் கூறினர்.

இதேவேளை, வீட்டு வளாகத்திலுள்ள கராஜ் மீதே, இந்தக் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளதாகவும் இதனால், மூன்று வாகங்கள் சேதமடைந்துள்ளனவெனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், தாக்குதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் கூறினர்.

பன்னல பொலிஸார், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டவிரோதப் பிரசாரங்களைத் தடுப்பதற்காக

## நடமாடும் பொலிஸ் சேவை



சட்டவிரோத தேர்தல் பிரசாரங்களைத் தடுப்பதற்காக, 24 மணிநேரமும் இயங்கக்கூடிய நடமாடும் பொலிஸ் சேவை ஒன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தேவையேற்படின், பொலிஸ் விசேட படையணியின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் தயாராகவிருப்பதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (2) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த மாதம் 9ஆம் திகதி தொடக்கம் இன்று வரை, தேர்தல் சட்டதிட்டங்கள் மீறல் தொடர்பில் 94 முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவென, அவர் மேலும் குறிப்பிட்டார்.

தேர்தல் இலஞ்சமாக

## விலங்குகள் விநியோகம்



தேர்தல் சட்டங்களை மீறும் வகையில், கோழிகள், கன்றுகள் மற்றும் பல்வேறு வகையான உபகரங்களைக் கையளிக்கும் நடவடிக்கைகள், நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று, கஃபே அமைப்பு, குற்றஞ்சாட்டியது.

இவ்வாறான 93 சம்பவங்கள், இதுவரை பதிவாகியுள்ளனவென, அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி, கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி, இந்த விலங்குகள் மற்றும் உபகரணங்கள் விநியோகம், மிகவும் வெற்றிக ரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக, தென்னகோன் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில், உபகரண விநியோகம் தொடர்பில், 17 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவெனக் கூறிய தென்னகோன், மேலும் பல மாகாணங்களில், பதாதைகள் சுவரொட்டிகள் போன்றன ஒட்டப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

## பிரதமரிடம் தினேஷின் கோரிக்கை சமர்ப்பிப்பு



நாட்டிலுள்ள பல்வேறு துறைகள், பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளதாகவும் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக, நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுமாறும், ஒன்றிணைந்த எதிரணியினர் விடுத்திருந்த கோரிக்கையை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், சபாநாயகர் கரு ஜயசூரிய சமர்ப்பித்துள்ளார்.

அவை ஒத்திவைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், இடைநடுவில் அவையைக் கூட்ட வேண்டுமாயின், அது தொடர்பில், ஜனாதிபதி அல்லது பிரதமரே தீர்மானம் எடுக்க வேண்டும். அதனாலேயே, சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை, பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பிரதமரின் அனுமதி கிடைக்கப்பெறும் பட்சத்திலேயே, நாடாளுமன்றம் அவசரமாகக் கூட்டப்படும் எனவும், இல்லையாயின், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பிரகாரம், எதிர்வரும் 23ஆம் திகதியன்றே, அவை கூடும் எனவும், சபாநாயகர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒன்றிணைந்த எதிரணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன, நாடு எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக, அவசரமாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு, சபாநாயகரிடம், எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவ்வாறு அவை கூடி கலந்துரையாடி, உரிய நடவடிக்கை எடுக்கவில்லையாயின், நாடு பாரிய பிரச்சினையை எதிர்கொள்ளும் எனவும், இதற்காக, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுகூடி கலந்துரையாட வேண்டுமென்றும், அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தினேஷ் குணவர்தன எம்.பி, இவ்விவகாரம் குறித்து, சபாநாயகருடன் கடந்த திங்கட்கிழமை (01) கலந்துரையாடியதாகக் கூறினார்.




தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், தஞ்சாவூரில் ஆய்வு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தி.மு.கவினர், கறுப்புக்கொடி காட்டி, போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவத்தின் மாண்புகளைப் பாதுகாத்திட வேண்டும் என்று, அனைத்து இராணுவ வீரர்களுக்கும் இராணுவத் தலைமைத் தளபதி விபின் ராவத் வலியுறுத்தியுள்ளார்.




“

**தேசிய மருத்துவ ஆணையக சட்டமூலத்தை, மத்திய அரசாங்கம் திரும்பப்பெற வேண்டும். சமூக நீதியின் குரல்வளையை நெரிக்கும் சட்டமூலங்களை, மத்திய அரசாங்கம் கொண்டுவரக்கூடாது.**


–மு.க ஸ்டாலின் (தி.மு.க செயல்தலைவர்)

தமிழ்நாடு

### ஆறுமுகசாமி ஆணைக்குழுவில்

# ‘சசிகலா ஆஜராக மாட்டார்’

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரித்துவரும் ஆறுமுகசாமி ஆணைக்குழுவில், அவரின் தோழி சசிகலா ஆஜராக மாட்டார் என்றும், அவரிடம் உள்ள ஆதாரங்களை அவருக்குப் பதில் அவரது வழக்குரைஞர் செந்தூர்பாண்டியன் ஆஜராகி விளக்கம் அளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, டி.டி.வி. தினகரன் கூறியுள்ளதாவது, “ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஆறுமுகசாமி ஆணைக்குழுவிடமிருந்து, சசிகலாவுக்கு அழைப்பாணை வந்துள்ளது. தன்னிடம் இருக்கும் ஆதாரங்களுடன், தனது வாக்குமூலத்தை சசிகலா, எழுத்துமூலமாகத் தாக்கல் செய்வார்.

“ஒருவேளை நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டால், சசிகலா ஆஜராவார். அதேபோல, எனக்கும் அழைப்பாணை வந்துள்ளது. எனது வாக்குமூலத்தையும், ஆதாரங்களுடன் எழுத்துமூலமாகத் தாக்கல் செய்வேன். ஆறுமுகசாமி ஆணைக்குழுவுக்கு முழு ஆதரவு அளிப்பேன்.

“ஜெயலலிதா தொடர்பான காணொளிக் காட்சியை, சசிகலாதான் பதிவு செய்திருந்தார். அதை சசிகலா என்னிடம் கொடுத்திருந்தார். அந்த காணொளிக் காட்சியை, வெற்றிவேலிடம் அளித்திருந்தேன். எங்களையும் மீறி வெற்றிவேல், ஊடகங்களுக்கு வெளியிட்டுவிட்டாரே தவிர, அதை நான் வெளியிடவில்லை.

“ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான விவகாரத்தில், நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை” என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், விசாரணை ஆணைக்குழுவில், சசிகலாவின் உறவினரும் இளவரசியின் மகளுமான கிருஷ்ணபிரியா,நேற்று (02) ஆஜரானார். ஜெயலலிதா சிகிச்சை பெறும் காணொளி பற்றி விளக்கம் அளித்தார்.

விரைவில் சசிகலாவும் விசாரணை ஆணைக்குழு முன்பு ஆஜராவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவருக்கு பதில் அவரது வழக்குரைஞர் ராஜா செந்தூர்பாண்டியன், எதிர்வரும் 8ஆம் திகதிக்குள் விசாரணை ஆணையத்தில் ஆஜராகி விளக்கம் அளிப்பார் என்றும் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

பரப்பன அக்ரஹார சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள் சசிகலா, மௌன விரதம் இருந்து வருகின்றார் எனக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு

### பென் ட்ரைவ் ஒப்படைக்கப்பட்டது



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான ஆதாரங்கள் அடங்கிய பென் ட்ரைவ், டி.டி.வி. தினகரன் சார்பில் நீதிபதி ஆறுமுகசாமி விசாரணை ஆணைக்குழுவில், நேற்று (02) ஒப்படைக்கப்பட்டது.

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரிக்க, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில், தனிநபர் விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த விசாரணை ஆணைக்குழுவானது, வைத்தியர் பாலாஜி, மற்றும் தீபா உள்ளிட்ட பலருக்கும் அழைப்பாணை அனுப்பி, தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது.

முன்னதாக விசாரணை ஆணைக்குழு சார்பில், நேரில் ஆஜராகி தன் வசமுள்ள ஆதாரங்களை அளிக்குமாறு டி.டி.வி தினகரனுக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

அதன் பொருட்டு டி.டி.வி தினகரன் வசம் உள்ள காணொளி ஆதாரங்கள் உள்ளிட்டவற்றைக் கொண்ட பென் ட்ரைவ் ஒன்றை, அவரது சார்பில் வழக்கறிஞர் ராஜா செந்தூர்பாண்டியன், ஆணைக்குழுவில் நேற்று (02) நேரில் ஆஜராகி சமர்ப்பித்தார்.

## கார்த்தி சிதம்பரத்துக்கு அழைப்பாணை

எதிர்வரும் 11ஆம் திகதி, நேரில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு, கார்த்தி சிதம்பரத்துக்கு, அமுலாக்கத்துறை அதிகாரிகள் அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

தனியார் நிறுவனமொன்றுக்கு, அந்நிய முதலீட்டு மேம்பாட்டு வாரியத்தின், தடையில்லாச் சான்று பெற்றுத் தருவதற்காக, வெளிநாட்டிலிருந்து, சட்டவிரோதமாக பணம் பெற்றாரென, கார்த்தி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில், அவருக்கு எதிராக, தேடல் அறிவிப்புப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, தற்போது அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

## அரச சின்னத்தை பயன்படுத்தத் தடை

உத்தரப் பிரதேச சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள், சட்டமேலவை முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோர், அரச சின்னத்தைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட முன்னாள் உறுப்பினர்கள், அரச சின்னத்தைப் பயன்படுத்துகின்றனர் என, ஆளுநருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இதையடுத்தே, இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முன்னாள் எம்.எல்.ஏக்களும் முன்னாள் எம்.எல்.சிக்களும், அரச சின்னத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று தடை விதிக்கப்படுவது, உத்தரப் பிரதேசத்தில் இதுவே முதல் தடவையாகும்.

## அழகிரி தலைமையேற்குமாறு சுவரொட்டி

முன்னாள் மத்திய அமைச்சரும் தி.மு.க தலைவர் கருணாநிதியின் மகனுமான மு.க.அழகிரிக்கு, “தலைமை ஏற்று தி.மு.கவை காப்பாற்று” என்று அழைப்பு விடுக்கும் சுவரொட்டிகள், தமிழ்நாடு, நெல்லை அருகே ஒட்டப்பட்டமையால், தி.மு.கவினரிடையே, பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மு.க.ஸ்டாலின், கட்சிக்கு தலைமை தாங்கும் வரை, தேர்தலில் தி.மு.க தோல்விதான் அடையும் என்று, கடந்த வாரம் அழகிரி கூறியதையடுத்து, அவருக்கு, தொண்டர்கள் மத்தியில் ஆதரவு பெருகத் தொடங்கியது. எனினும் அழகிரியின் இந்தக் கருத்தையடுத்து, மத்திய அமைச்சர்கள் பலர், அவருக்கு எதிரான கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், தி.மு.க தலைமையகத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், பத்துக்கும் மேற்பட்ட மூத்த நிர்வாகிகள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். இந்நிலையிலேயே, தற்போது, அழகிரிக்கு ஆதரவாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

## தீ விபத்துத் தொடர்பில் முகாமையாளர்கள் கைது

மும்பையிலுள்ள பிரபல இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக, 14 பேர் உயிரிழந்த சம்பவத்தையடுத்து, குறித்த நிலையத்தின் முகாமையாளர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த விடுதியில், பிறந்த நாள் கொண்டாட்டத்துக்காக வந்திருந்த 14 பேர், அங்கு, மேல் மாடியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்துக் காரணமாக உயிரிழந்தனர். தீப்பிடித்த கட்டடத்திலிருந்து தப்பிப்பதற்கு முயன்ற போதே, அங்கு வந்திருந்தவர்கள் மூச்சுத்திணறி உயரிழந்தனர்.

குறித்த நிலையத்தில், தீ விபத்தின் போதான பாதுகாப்பு வசதிகள் எவையும் செய்து வைக்கப்பட்டிருக்கவில்லை என்றும், இதனாலேயே முகாமையாளர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹரியானா

## கம்பியால் தாக்கி அறுவர் படுகொலை



சுமார் ஒரு மணிநேரத்தில், ஆறு பேரை, இரும்புக் கம்பிகளால் அடித்துக் கொலை செய்த, மனநலம் பாதிக்கப்பட்ட நபரொருவரை, பல்வால் நகர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று (02) காலை, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொலிஸ் நிலையத்திலிருந்து, சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ள இந்தத் தாக்குதல் சம்பவம், அங்கிருந்த சி.சி.டி.வி கமெராக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதையடுத்தே பொலிஸார், அந்நபரைக் கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நரேஷ் என்ற, பொலிஸ் முன்னாள் சேவகர் ஒருவரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களில், 1 பெண்ணும் மூன்று காவலாளிகளும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரியவருகின்றது. எனினும், இவர், எதற்காக இந்தக் கொலைகளைச் செய்தார் என்பது தொடர்பான விவரங்கள் இன்னும் கண்டறியப்படவில்லை.

“ **40 – 45 வயதுக்கிடைப்பட்ட இவர், மனநலம் பாதிக்கப்பட்டவர் ஆவார்**

பதிவாகியுள்ள காணொளிகளில், இரும்புக் கம்பியொன்றை எடுத்துக்கொண்டு, அவ்வழியே வலம் வந்த அவர், தாக்குதலை மேற்கொண்டு, கொலைகளைப் புரிந்துள்ளார்.

குறித்த நபருக்கும் இதனால் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார், அவரைக் கைது செய்வதற்கு முயன்ற போது, பொலிஸாரையும் அவர் தாக்கினாரெனவும் கூறப்படுகின்றது.

40 - 45 வயதுக்கிடைப்பட்ட இவர், மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரியவந்துள்ளது. இதனால், ஹரியானா, பல்வால் நகரில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.



தமிழ்நாடு

### தினகரனின் 9 ஆதரவாளர்கள்

## அ.தி.மு.க பொறுப்பிலிருந்து நீக்கம்

தினகரன் ஆதரவாளர்கள் 9 பேர், அ.தி.மு.கவின் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஆர்.கே நகர் இடைத்தேர்தலில் சுயேட்சை வேட்பாளர் தினகரனிடம், அ.தி.மு.க தோல்வி அடைந்ததை அடுத்து, அ.தி.மு.கவில், தினகரன் ஆதரவாளர்கள் பலர் நீக்கப்பட்டுள்ளனர். பலரின் பொறுப்புகள் பறிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் முதலமைச்சர் பழனிசாமி ஆகியோர், நேற்று (02) வெளியிட்ட அறிக்கையில், “தகுதி நீக்கம் செய்யப்பட்ட அ.தி.மு.க எம்.எல்.எல்.ஏ.க்களான கோதண்டபாணி, ஜெயந்தி பத்மநாபன், கலைச்செல்வன், கதிர்காமு, எஸ்ஜி சுப்ரமணியன், முத்தையா, சுந்தர்ராஜ், மாரியப்பன் கென்னடி, உமா மகேஸ்வரி உள்ளிட்டோர், அ.தி.மு.கவில் வகித்து வந்த பொறுப்புகளில் இருந்து, இன்று முதல் விடுவிக்கப்பட்டுள்ளனர்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 200க்கும் மேற்பட்ட, தினகரன் ஆதரவாளர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு

## கடையடைப்புப் போராட்டம்

சிவகாசியில், பட்டாசு உற்பத்தியாளர்களுக்கு ஆதரவாக, அனைத்து கட்சிகளின் சார்பாக கடையடைப்புப் போராட்டம் இன்று (03) நடைபெறவுள்ளது.

நாடு முழுவதும், பட்டாசு வெடிக்கத் தடை விதிக்ககோரி, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், இதற்கு விளக்கமளிக்குமாறு, மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு, உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது. பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க வலியுறுத்தி, கடந்த ஒரு வார காலமாக, உற்பத்தியாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டும் வருகின்றனர். இந்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே, மாவட்டம் முழுவதும் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.




தமிழ்நாடு

### தேசிய மருத்துவ ஆணைக்குழு சட்டமூலம்:

## எதிர்ப்புத் தெரிவித்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு

தேசிய மருத்துவ ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிராக, நாடு முழுவதும், தனியார் வைத்தியர்கள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவாக, தமிழகத்தில் அரச வைத்தியர்களும் ஒரு மணி நேரப் போராட்டத்தை, நேற்று (02) முன்னெடுத்தனர்.

இந்திய மருத்துவ ஆணைக்குழுவுக்கு மாற்றாக, 25 பேர் கொண்ட தேசிய மருத்துவ ஆணைக்குழு அமைக்கும் சட்டமூலம், லோக்சபாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், ஆயுர்வேதம், ஹோமியோபதி போன்ற இந்திய மருத்துவ முறை வைத்தியர்கள், நவீன மருத்துவ முறையான, அலோபதி வைத்தியர்களாவதற்கு வாய்ப்பு அளிப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு நாடு முழுவதும் கடும் கண்டனம் எழுந்துள்ளது.

மத்திய அரசாங்கத்தின் இந்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாடு முழுவதும், காலை 6:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை, புறநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்காமல், போராட்டத்தில் ஈடுபடப் போவதாக, இந்திய வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது. நாடாளுமன்றக் குளிர்கால கூட்டத்தொடரில், இந்தச் சட்டமூலம் தொடர்பில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

“ **திருச்சி மாநகரில் 150க்கும் மேற்பட்ட தனியார் வைத்தியசாலைகள் உள்ளன**

இந்நிலையில், வைத்தியர்களின் போராட்டம் ஆரம்பித்துள்ளது. இதனால், வெளிநோயாளிகளுக்கான மருத்துவ சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு நோயாளர்களும் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், தமிழகத்தின் திருவள்ளூர், வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, நெல்லை, கோவை, சென்னை மற்றும் பல மாவட்டங்களிலும், அரச வைத்தியசாலை வைத்தியர்களும் பணியை ஒரு மணிநேரம் புறக்கணித்து, போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி மாநகரில் 150க்கும் மேற்பட்ட தனியார் வைத்தியசாலைகள் உள்ளன. அவற்றில், “சட்டமூலத்தை எதிர்த்து வேலைநிறுத்தம்” என்ற சுவரொட்டி ஒட்டப்பட்ட போதிலும், பணிகள் நடைபெற்றுள்ளன.

ஜம்மு – காஷ்மீர்

## சிறைக்கைதிகள் குறித்து சுஷ்மாவுக்கு கடிதம்



இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரி குல்பூஷண் ஜாதவ் உட்பட பாகிஸ்தான் சிறைகளிலுள்ள இந்தியர்கள் தொடர்பாக, வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கு, ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசின் மாலிக், வெளிப்படையான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“குல்பூஷண் ஜாதவின் குடும்பத்தார், பாகிஸ்தானில் நடத்தப்பட்ட விதம் தொடர்பாக, தாங்கள் நாடாளுமன்றத்தில், கடந்த 28ஆம் திகதி உரையாடியது, என்னை நெகிழச் செய்தது. சிறை வாழ்க்கையின் துயரங்களைக் கண்டுள்ள என்னால், இந்த விவகாரத்தில், குல்பூஷணின் மனைவியும் தாயாரும் அனுபவித்த துன்பத்தை உணர முடிக்கிறது.

“குல்பூஷண் உட்பட, பாகிஸ்தான் நாட்டுச் சிறைகளிலுள்ள கைதிகளின் உரிமை விவகாரத்தில், பாகிஸ்தான் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். அதேவேளையில், நம் நாட்டிலுள்ள சிறைகளில் இருக்கும் பாகிஸ்தான் கைதிகளை, இந்தியா நடத்தும் விதமும் மெச்சத்தக்கதாக இல்லை” என்று யாசின் மாலிக், தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பாகிஸ்தான் அதிகாரிகளால் கடந்த ஆண்டு மார்ச் மாதம் கைது செய்யப்பட்ட குல்பூஷண் ஜாதவுக்கு, அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கியது. குல்பூஷண் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை, இந்தியா திட்டவட்டமாக மறுத்தே வருகின்றது.

ஜாதவ், ஈரானில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு, பாகிஸ்தானுக்குக் கொண்டு செல்லப்பட்டதாக இந்தியா கூறுகிறது. அவரைக் காப்பாற்றுவதற்காக சர்வதேச நீதிமன்றத்தில் மத்திய அரசாங்கம் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதை விசாரித்த சர்வதேச நீதிமன்றம், குல்பூஷணின் மரணதண்டனைத் தீர்ப்புக்கு, இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்தது.

இதனிடையே, பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள குல்பூஷணைச் சந்திக்க அவரது தாயாரும் மனைவியும் சென்றபோது, அவர்களது மனித உரிமைகளை மீறும் வகையில் பாகிஸ்தான் அரசாங்கம் நடந்து கொண்டதாக இந்தியா தற்போது குற்றஞ்சாட்டியுள்ளது.



கெய்ரோவிலுள்ள மதுபான நிலையமொன்றில், முகமூடி அணிந்த ஆயுததாரியொருவர், இரண்டு கிறிஸ்தவர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளார். தேவாலயம், கிறிஸ்தவர்களால் உரிமைப்படுத்தப்பட்டுள்ள கடை ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, 10 பேர் கொல்லப்பட்ட பின்னணியில், இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நைஜீரியாவில், தேவாலயம் ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில், குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டனர்.





“போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்டுள்ள கோரிக்கைகள், உண்மையானவை என்பதோடு, முக்கியமானவை. அவை தொடர்பான பயன்தரக்கூடிய கலந்துரையாடலில், ஈரான் அரசாங்கம் ஈடுபட வேண்டும். அங்கு நடக்கும் விடயங்களை, உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.



– பொறிஸ் ஜோன்சன் (ஐ.இராச்சிய வெளிநாட்டுச் செயலாளர்)

## காணொளியில் தோன்றிய சிறுமி மீது வழக்கு

தாக்குதல் உட்பட 12 குற்றச்சாட்டுகளை முன்வைத்து, பலஸ்தீனச் சிறுமி ஒருத்தி மீது, இஸ்ரேலால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இஸ்ரேலிய இராணுவத்தைச் சேர்ந்த இருவரை, கன்னத்தில் அறைவதாகவும் உதைப்பதாகவும் காண்பிக்கும் காணொளியொன்று வெளியாகிப் பிரபலமாகியிருந்த நிலையில், அதில் தோன்றிய சிறுமியே, இவ்வாறு வழக்குத் தாக்கலுக்கு உள்ளாகியுள்ளார்.

16 வயதான அஹெட் தமிமி என்ற இச்சிறுமி, பலஸ்தீனர்களால் போற்றப்படுகிறார். மேற்குக் கரையை ஆக்கிரமித்துள்ளார்கள் என அவர்கள் கருதும் இஸ்ரேலிய இராணுவத்தினரை எதிர்க்கும் கதாநாயகி என, பலஸ்தீனர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், சிறுமியைப் பயன்படுத்தி, ஆத்திரமூட்டலில் அவரது குடும்பத்தினர் ஈடுபடுகின்றனர் என, இஸ்ரேலியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவ நீதிமன்றமொன்றிலேயே அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், காணொளியில் காணப்பட்ட விடயங்கள் தவிர, கல்லெறிந்தமை, வன்முறையை ஊக்குவித்தமை, அச்சுறுத்தல் விடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளும், அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

## சிரிய பாதுகாப்பு அமைச்சர் நீக்கம்

சிரிய பாதுகாப்பு அமைச்சரை மாற்றுவதாக, அந்நாட்டு ஜனாதிபதி பஷார் அல்-அசாட் அறிவித்துள்ளார். அமைச்சரவை மாற்றத்தின் ஓர் அங்கமாகவே இம்மாற்றம் இடம்பெறுவதாக, அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, 2012ஆம் ஆண்டு முதல், பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகித்து வந்த ஃபஹ்ட் ஜாசீம் அல்-ஃபிரெஜியை மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட இம்முடிவு, ஆச்சரியமானதாகப் பார்க்கப்படுகிறது. குறிப்பாக, சிரிய அரசாங்கப் படைகளுக்கு, அண்மைக்காலத்தில் கிடைத்த வெற்றிகளின் பின்னணியில், இம்மாற்றம் இடம்பெறுகிறது.

புதிய அமைச்சராக, ஜெனரல் அலி அப்துல்லா அயூப் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், பாதுகாப்புப் படைகளின் பணியாட்தொகுதிப் பிரதானியாக இதுவரை பதவி வகித்து வந்தார்.

## பங்களாதேஷில் மரண தண்டனைக்கு கோரிக்கை

பங்களாதேஷின் எதிர்க்கட்சித் தலைவரான காலிடா ஸியாவின் மகனுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென, அந்நாட்டு அரச வழக்குத் தொடுநர்கள் கோரியுள்ளனர். தற்போதைய பிரதமர் ஷேக் ஹஸினாவின் மீது, 2004ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதல் முயற்சியில் இவரது பங்கு காணப்படுகிறது எனத் தெரிவித்தே, இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக ஹஸினா இருந்ததோடு, அந்நாட்டின் அதிகாரத்தில், ஸியா காணப்பட்டார். ஹஸினா பங்குபற்றிய பேரணியிலேயே தாக்குதல் நடத்தப்பட்டது.

ஸியாவின் மகனான தாரிக் ரஹ்மான், இத்தாக்குதலை வழிநடத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அவருக்கும் இன்னும் 48 பேருக்கும், மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமென, நீதிமன்றத்தில் கோரப்பட்டுள்ளது. அந்த 48 பேரில், அப்போதைய உள்துறை அமைச்சரும் அப்போதைய புலனாய்வுத் துறைத் தலைவர்களும் உள்ளடங்குகின்றனர்.

தற்போது இலண்டனில் வசிக்கும் தாரிக் ரஹ்மான், இது அரசியல் சூழ்ச்சியெனக் கூறுகிறார்.

ஈரான்

# ஈரானில் உயிரிழப்புகள் தொடர்கின்றன

- இதுவரை 21 பேர் உயிரிழப்பு
- 450க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர்
- பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன எனத் தெரிவிப்பு



ஈரானில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இடம்பெற்றுவரும் அரச எதிர்ப்புப் பேரணிகளும் போராட்டங்களும், 6ஆவது நாளாகவும் தொடர்கின்றன. தொடர்பாடல் சேவைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தகவல்களை உடனடியாக உறுதிப்படுத்திப் பெற முடியாத நிலை நிலவுகிறது.

ஆனால், ஊடகங்களாலும் அதிகாரிகளாலும் இதுவரை உறுதிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின்படி, ஞாயிற்றுக்கிழமை மாத்திரம், 13 பேர் கொல்லப்பட்டனர். அத்தோடு, நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இதுவரை 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈரானிய செய்தி ஊடகங்களினதும் சமூக ஊடக இணையத்தளங்களும் வெளியிடும் தகவல்களின்படி, நேற்று முன்தினம் இரவு நேரத்தில், பொலிஸ் நிலையங்கள் பல, ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வோர், தொடர்ந்தும் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். இதுவரை, 450க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என, அங்கிருந்துவரும் தகவல்கள் குறிப்பிடுகின்றனர்.

ஈரானின் இரண்டாவது மிகப்பெரிய நகரான மஷ்ஹாட்டில், கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த போராட்டங்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராகவும் ஊழல்கள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்தும், போராட்டங்கள் ஆரம்பித்தன. ஆனால் அதன் பின்னர், அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாடாக அது மாறியது.

குறிப்பாக, நாட்டின் உச்சநிலைத் தலைவரான அயோதுல்லா அலி காமேனிக்கு எதிராக, ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவரை, சர்வாதிகாரி என்றழைக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள், “சர்வாதிகாரிக்கு மரணம்” எனச் சத்தமிட்டிருந்தனர்.

நாட்டின் உச்சநிலை மதத்தலைவராகக் காணப்படும் அலி காமெனிக்கு எதிராக, இவ்வாறான எதிர்ப்பு வெளியிடப்படுவது, இது அரிதானதாகும். இவர், 1989ஆம் ஆண்டு முதல், இவ்வுயர் பதவியில் காணப்படுகிறார்.

இதேவேளை, இப்போராட்டங்கள் தொடர்பாக, அறிவிப்பொன்றை நேற்று வெளியிட்ட உச்சநிலைத் தலைவர் காமேனி, தமது நாட்டின் எதிரிகள், இவ்வாறு போராட்டங்களை நடத்தத் தூண்டுகின்றனர் என்று குற்றஞ்சாட்டினார். “பணம், ஆயுதங்கள், அரசியல், புலனாய்வுத் தகவல்கள் ஆகியவற்றை, கடந்த சில நாட்களில் பயன்படுத்திய ஈரானின் எதிரிகள், இந்த இஸ்லாமியக் குடியரசுப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளனர்” என, அவ்வறிவிப்புத் தெரிவித்தது.

எதிரிகள் என யாரைக் குறிப்பிடுகிறார் என்பது வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத போதிலும், ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளே, இம்முரண்பாடுகளின் பின்னால் உள்ளன என, உயர்நிலை தேசிய பாதுகாப்புச் சபையின் செயலாளர் அலி ஷம்கானி தெரிவித்தார்.

கொங்கோ

## ‘ஜனாதிபதி கபிலா விலக வேண்டும்’



ஜனாதிபதி கபிலா

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி ஜோசப் கபிலா, ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில், தன்னுடைய பதவியிலிருந்து விலக வேண்டும் என, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரெஸ் கோரியுள்ளார்.

கொங்கோ ஜனாதிபதியின் ஆட்சிக்கு எதிராக, அந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் காரணமாக, 8 பேர் கொல்லப்பட்டுள்ள பின்னணியிலேயே, ஐ.நா செயலாளர் நாயகத்தின் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு முதல் பதவியிலிருக்கும் ஜனாதிபதி கபிலா, ஓராண்டுக்கு முன்னர், எதிர்க்கட்சிக் குழுக்களுடன் உடன்பாடொன்றில் கைச்சாத்திட்டிருந்தார். அதன்படி, தனது பதவிக்காலம் முடிவடையும் போது அவர் பதவி விலகுவதாகவும், உடனடியாகத் தேர்தல் நடத்தப்படும் எனவும் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது அவர், தேர்தலை நடத்தப் பின்னடித்து வருவதோடு, தனது பதவிக் காலத்தை நீட்டித்துக் கொள்ள முயல்கிறார் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்நிலையிலேயே, 2016ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில், ஜனாதிபதி கபிலா செயற்பட வேண்டுமெனவும், தேர்தலை நடத்துவதற்கும், அதிகாரத்தைச் சமாதானமாக மாற்றுவதற்கும் காணப்படுகின்ற, ஒரேயொரு சாத்தியமான வழியாகவே, அவ்வுடன்படிக்கையே காணப்படுகிறது எனவும், செயலாளர் நாயகத்தின் அலுவலகம் தெரிவித்தது. அத்தோடு, அவ்வுடன்படிக்கை அமுல்படுத்தப்படுதல், நாட்டின் அமைதிக்கான ஒரே வழி எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கபிலா, தனது பதவியிலிருந்து விலகுவதற்குத் தாமதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேவாலய ஆராதனைகளைத் தொடர்ந்து, தேவாலயமொன்றுக்கு முன்னால், ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது. அதில், பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதலில், 8 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்து, கவனமாகச் செயற்படுமாறு, அரசாங்கத்தையும் பாதுகாப்புப் படையினரையும் கோருவதாக, மேலும் கோரப்பட்டுள்ளது.




சயீட், தொடர்ச்சியாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அதிலிருந்து அவருக்கு அண்மையில் நீதிமன்றமொன்றால் விடுதலை வழங்கப்பட்டபோது.

பாகிஸ்தான்

## ‘பயங்கரவாதி’ சயீட்டின் சொத்துகள் முடக்கப்படுகின்றன

### வொஷிங்டனால் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்டவர்

இஸ்லாமியத் தலைவரான ஹபீஸ் சயீட்டின் அறக்கட்டளைகளையும் நிதியியல் சொத்துகளையும் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்வதற்கு, பாகிஸ்தான் தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகிறது. அதிகாரிகளையும் உத்தியோகபூர்வ ஆவணங்களையும் மேற்கோள்காட்டி, இச்செய்தியை, றொய்ட்டர்ஸ் செய்திச் சேவை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான பல உயர்மட்டக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன எனவும், அது தொடர்பான இரகசியப் பணிப்புரைகள், டிசெம்பர் 19ஆம் திகதி அனுப்பப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, நிதியமைச்சால், நாட்டின் 5 மாகாண அரசாங்கங்களுக்கும் சட்ட அமுலாக்கப் பிரிவினருக்கும் அனுப்பப்பட்ட பணிப்புரையொன்றின்படி, சயீட்டால் நிறுவப்பட்ட ஜாமாட்-உட்-டவா, ஃபலா-ஈ-இன்சாயிட் ஆகிய அறக்கட்டளைகளைக் கையகப்படுத்துவதற்கான திட்டங்களை, டிசெம்பர் 28ஆம் திகதிக்குள் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

குறித்த இரு அமைப்புகளையும், லக்ஷர்-ஈ-தொய்பா குழுவுக்கு உதவும் “பயங்கரவாதத்துக்கான அமைப்புகள்” என, ஐக்கிய அமெரிக்கா வகைப்படுத்தியுள்ளது. இக்குழுக்கள், சயீட்டால் 1987ஆம் ஆண்டு நிறுவப்பட்டனவாகும்.

2008ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மும்பைக் குண்டுத் தாக்குதலில், சயீட்டே பிரதான சூத்திரதாரி என, ஐக்கிய அமெரிக்காவும் இந்தியாவும் குற்றஞ்சாட்டுகின்றன. அத்தாக்குதலில், 166 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

சயீட்டுக்கான ஆதரவை, பாகிஸ்தான் வழங்கிவருகிறது என்பது, தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளாகும். இந்நிலையில், சயீட்டின் சொத்துகளை முடக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சி, முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக, பாகிஸ்தான் உள்துறை அமைச்சரிடம் வினவிய போது, “பட்டியலிடப்பட்ட அமைப்புகளின் சொத்துகளை முடங்கச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன” என்று தெரிவித்தார். இவ்வாறான கூட்டங்களில் ஒன்றில், இவரே தலைமை தாங்கினார் என்று கூறப்படுகிறது.

ஆனால், ஐக்கிய அமெரிக்காவின் அழுத்தத்தில் பேரில், எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என, அவர் மேலும் கூறினார்.

பிரேஸில்

## பிரேஸில் சிறையுடைப்பில் 9 பேர் பலி

### 14 பேர் காயம்; 106 பேர் தப்பியோட்டம்



பிரேஸில் சிறைச்சாலையில் ஏற்பட்ட கிளர்ச்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சிறையுடைப்பில், 9 சிறைக்கைதிகள் கொல்லப்பட்டனர் எனவும், 14 பேர் காயமடைந்தனர் எனவும், அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இச்சிறையுடைப்பில், 106 பேர் சிறையிலிருந்து தப்பித்துச் சென்றனர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

பிரேஸில் சிறைச்சாலைகளில், சிறையுடைப்பு என்பது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் ஒன்று என்ற அடிப்படையில், சிறைச்சாலைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கும், அதிகாரிகளும் பொலிஸாரும் தடுமாறுவதையே இது காட்டுகிறது.

கொய்னியா என்ற நகரத்தில் உள்ள சிறைச்சாலையே உடைக்கப்பட்டு, சிறைக்கைதிகள் தப்பியோடியிருந்தனர். தப்பியோடிய கைதிகளில் 27 பேர், மீண்டும் கைதுசெய்யப்பட்டனர் என்ற போதிலும், ஏனையோரைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

கொல்லப்பட்ட ஒன்பது பேரில் ஒருவர், தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று, ஊடக அறிக்கைகள் தெரிவித்தன.

சிறைச்சாலைக்குள் உள்ள குழுக்களுக்கிடையில், நீண்டகாலமாகக் காணப்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்தே, இங்கு மோதல் ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே இதே முரண்பாடு காரணமாக, கடந்தாண்டின் ஆரம்பத்தில் உள்ள 20 நாட்களில், 130 சிறைக்கைதிகள் கொல்லப்பட்டிருந்தனர். இவ்வாண்டின் தொடக்கமும், இவ்வாறு வன்முறைகளுடன் ஆரம்பித்துள்ளது.

இவ்வன்முறைகள் தொடர்பாக அதிக கவனம் ஏற்பட்டுள்ள நிலையில், சிறைச்சாலையில் போதிய பாதுகாப்புக் காணப்பட்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பிரேஸில் சிறைச்சாலைக் காவலர்களின் ஒன்றியத்தின் தலைவர் வெளியிட்ட கருத்தின்படி, 900 சிறைக்கைதிகளைக் கொண்ட இச்சிறைச்சாலையில், அவர்களைப் பார்த்துக் கொள்ள, 5 சிறைக்காவலர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

தென்கொரியாவுக்கும் வடகொரியாவுக்கும் இடையிலான உறவுக்கு

## ‘வடகொரியாவின் அணுவாயுத பிரச்சினையை தீர்க்க வேண்டும்’



ஜனாதிபதி மூன்

தென்கொரியாவுக்கும் வடகொரியாவுக்கும் இடையிலான உறவுகள் மேம்படுதல், வடகொரியாவின் அணுவாயுத நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தங்கியுள்ளது என, தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் தெரிவித்துள்ளார். தென்கொரியாவுடனான உறவுகளை மேம்படுத்துவது குறித்து, வடகொரியத் தலைவர் கிம் ஜொங்-உன்னால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்குப் பதிலளிக்கும் போதே, ஜனாதிபதி மூன், இவ்வாறு தெரிவித்தார்.

புத்தாண்டு உரையில் கிம் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, அமைச்சரவையில் நேற்று (02) பதிலளித்த ஜனாதிபதி மூன், “வட, தென் கொரியாக்களுக்கு இடையிலான உறவுகள் மேம்படுதல், வடகொரியாவின் அணுக்குண்டு நிகழ்ச்சித் திட்டத்தை விடுத்துத் தனியாகப் பயணிக்க முடியாது. ஆகவே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, தோழமை நாடுகளுடனும் சர்வதேச சமூகத்துடனும், இது தொடர்பில் இணைந்து செயற்பட வேண்டும்” என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி மூனின் இக்கருத்து, வடகொரியத் தலைவர் விடுத்த கோரிக்கைக்கு எதிரானதாக இருந்தது. இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் மேம்படுவதற்கு, சர்வதேச சமூகம் சொல்வதைக் கேட்பதை விடுத்து, இரு நாடுகளும் இவ்விடயத்தில் கவனஞ்செலுத்த வேண்டுமென்பது, கிம்மின் கருத்தாக இருந்தது.

எனினும், வடகொரியத் தலைவர் கூறிய இன்னொரு விடயத்தை, தென்கொரிய ஜனாதிபதி, சாதகமாகப் பரிசீலித்துள்ளார். பெப்ரவரியில், தென்கொரியாவில் இடம்பெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவது குறித்து ஆராயுமாறு, தனது அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுப்பதாக, கிம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பாக ஆராயுமாறு, தனது நாட்டின் ஒற்றுமைப்படுத்தலுக்கான அமைச்சுக்கும் விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் பணிப்புரை விடுப்பதாக, ஜனாதிபதி மூன் குறிப்பிட்டார்.



“சில நேரங்களில், உங்களது அம்மா சொல்லுவது போன்று, தவறான நேரத்தில், தவறான இடத்தில் நீங்கள் இருந்தால், தவறான விடயங்கள் நடக்கும்” – டுவைட் ஹோவார்ட்

“எனது வாய்ப்பை நான் பெற்றபோது, அதன் சாதகங்களை நான் எடுத்துக் கொண்டேன்” – மொன்டா எலிஸ்







## வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் வி.க தொடர்:

# சம்பியனாக முடிசூடியது அளவெட்டி மத்தி

■ கே. கண்ணன்

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் நடாத்தி, அணிக்கு 5 பேர் கொண்ட, ஆறு ஓவர்கள் கிரிக்கெட் தொடரில், அளவெட்டி மத்தி அணி சம்பியனாக முடிசூடிக் கொண்டது.

குறித்த தொடரின் இறுதிப் போட்டி, நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில், அளவெட்டி மத்தி அணியை எதிர்த்து கொக்குவில் காமாட்சி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் காமாட்சி அணி, நான்கு ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், தீசன் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், தயாளன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு, 50 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி அணி, 3.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், சுயந்தன் 28, அஜித் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

## கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க கூடைப்பந்தாட்டம்:

# சம்பியனானது திருக்குடும்ப கன்னியர்மடம்

■ குணசேகரன் சுரேன்

யாழ். கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில், திருக்குடும்பக் கன்னியர்மடம் விளையாட்டுக் கழக அணி சம்பியனாகியது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் மறைந்த முன்னாள் கூடைப்பந்தாட்ட வீரன் பாலசிங்கம் மயூரதனின் குடும்பத்தினரின் அனுசரணையில், இத்தொடர் நடத்தப்பட்டிருந்தது.

நான்காவது ஆண்டாக இம்முறையும் நடத்தப்பட்ட இத்தொடரின் பெண்களுக்கான போட்டிகளில், இரண்டு அணிகள் மாத்திரம் பங்குபற்றின. பங்குபற்றிய இரண்டு அணிகளும் முதற்சுற்றுப் போட்டிகளில் விளையாடி, இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இந்நிலையில், இறுதிப் போட்டி, கொக்குவில் மத்திய சனசமூக நிலைய கூடைப்பந்தாட்டத் திடலில் அண்மையில் நடைபெற்றது. இதில், திருக்குடும்பக் கன்னியர்மடம் அணி, 57-47 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இறுதிப் போட்டியின் நாயகியாக, திருக்குடும்பக் கன்னியர்மடம் அணியின் டபிள்யூ. எக்ஸிகாவும், தொடரின் நாயகியாக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியின் கமலதாஸ் தமிழரசியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத் தொடர்களில் அணிகள் பங்குபற்றுவது அண்மைக்காலமாக குறைவடைந்து வருகின்றது. முன்னைய காலங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த வலிகாமம் பிரதேச அணிகள், தற்போது போட்டிகளில் பங்குபற்றுவது குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## யாழ். உரும்பிராய் திருக்குமரன் வி.க கால்பந்தாட்டத் தொடர்:

# லீக் சுற்றுப் போட்டி முடிவுகள்

■ குணசேகரன் சுரேன்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில், யாழ். உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம், அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரொன்றை, தமது மைதானத்தில் நடத்தி வருகின்றது.

48 அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் முதற்சுற்றுப் போட்டிகள், விலகல் முறையில் இடம்பெற்றன. அதிலிருந்து எட்டு அணிகள், லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

அந்தவகையில் ஊரெழு றோயல், நாவாந்துறை சென். நீக்கிலஸ், இளவாலை யங்ஹென்றிஸ், திக்கம் இளைஞர், குருநகர் சென். றொக்ஸ், இளவாலை சென். லூட்ஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் ஆகிய எட்டு அணிகளே, லீக் சுற்றுக்குத் தகுதிபெற்றிருந்தன.

இந்நிலையில், இடம்பெற்ற லீக் சுற்றுப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில், சென். றொக்ஸ் அணியை எதிர்த்து சென். லூட்ஸ் அணி மோதியது. இதில் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகம், 4-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

அன்றைய தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

28ஆம் திகதி நடைபெற்ற போட்டியில், பலாலி விண்மீன் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதியது. இப்போட்டியும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

29ஆம் திகதி நடைபெற்ற போட்டியில், ஊரெழு றோயல் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. இப்போட்டியும் 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

அன்றைய தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில், இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதியது. இதில், சென். நீக்கிலஸ் அணி, 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

30ஆம் திகதி நடைபெற்ற போட்டியில், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி, 6-1 என்ற கோல் கணக்கில் வென்றது.







## யாழ். மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்க

# புதிய நிர்வாகத் தெரிவு

■ கே. கண்ணன்

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலகர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில், தலைவராக மா. இளம்பிறையன், செயலாளராக சிவச்செல்வன், பொருளாளராக கஜேந்திரன், உப தலைவர்களாக வசந்தகுமார், சதீஷ்குமார், சுதாகரன் ஆகியோரும், உப செயலாளராக ஜி.ஏ. கிறேஸியன், நிர்வாக உறுப்பினர்களாக சுரேந்திரா, ஜெயந்தன், கணநாதன், ஸ்ரீரமணன், எஸ். கரன் ஆகியோரும், உள்ளகக் கணக்காளராக முருகவேள் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## தசோபன் – ஜெயதர்சனின் தனித்துவமான ஆட்டத்தால்

# யாழ். மத்திக்கு இனிங்ஸ் வெற்றி

■ குணசேகரன் சுரேன்

சிவலிங்கம் தசோபனின் அதிரடியான சதம் மற்றும் துல்லியமான பந்துவீச்சும், எஸ். ஜெயதர்சனின் சதம் ஆகியன பலம் சேர்க்க, கண்டி அஸார் கல்லூரி அணியை அதன் சொந்த மைதானத்தில் வைத்து, இனிங்ஸ் மற்றும் 172 ஓட்டங்களால், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வீழ்த்தியது.

பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு, பிரிவு மூன்று கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான இரண்டு நாட்கள் கொண்ட மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இச்சுற்றுப்போட்டியின் போட்டியொன்று, கண்டி அக்குரண அஸார் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில், யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து அஸார் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அஸார் அணி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. சகல விக்கெட்டுகளையும் இழந்து 69 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட்டத்தில் எவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை அடையவில்லை.

பந்துவீச்சில் துசாந்தன் 7, சிவலிங்கம் தசோபன், செல்வராசா மதுசன், எம்.சுஜன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 5 விக்கெட்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றபோது, தமது இனிங்ஸை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில், தசோபன் ஆட்டமிழக்காமல் 114, ஜெயதர்சன் 112, சிறிஸ்கந்தராசா கௌதமன் 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில், எம்.என். ஜாபர் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

245 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அஸார் அணி, 73 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இரண்டாவது இனிங்ஸிலும், எந்த வீரரும் சொல்லிக்கொள்ளும்படியான ஓட்டங்களைப் பெறவில்லை.

பந்துவீச்சில், தசோபன் 8, துசாந்தன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.



### தமிழ்மிரரில் உங்கள் செய்திகள் இடம்பெற...

தமிழ்மிரரின் களம் பக்கத்தில், உங்கள் பாடசாலையையோ, பிரதேசத்தையோ அல்லது கழகத்தையோ சேர்ந்த விளையாட்டுச் செய்திகளும் இடம்பெற வேண்டுமாயின், sports@tamilmirror.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, அல்லது இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கோ அல்லது 0112 304114 என்ற தொலைநகல் இலக்கத்துக்கோ அனுப்பி வைக்கலாம்.



## ஆசியாவில் முல்லைத்தீவு மாணவி முதலிடம்

முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி தர்சிகா தேவராசா, மலேஷியாவில் இடம்பெற்ற ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கலில் முதலாமிடம் பெற்றுள்ளார். இவருக்கான வரவேற்பு நிகழ்வு, வலய கல்விப் பணிமனையால் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. (படம்: சண்முகம் தவசீலன்)



நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டி, மகட்டேரேயில் இலங்கை நேரப்படி இன்று முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்தியன் பிறீமியர் லீக்கின் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக ஆஷிஷ் நெஹ்ராவும், துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக கரி கேர்ஸ்டனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.





“

நாங்கள் மேலும் ஓட்டங்களைப் பெற வேண்டும். நாங்கள் பெரிய சதங்களைப் பெற வேண்டும். நாங்கள் அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் பார்த்துள்ளோம். பெரிய ஓட்ட எண்ணிக்கைகளை, பெரிய சதங்களைக் கொண்ட அணியே வென்றது அல்லது முன்னிலை பெற்றது.



– ஜேம்ஸ் அன்டர்சன் (இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர்)

## ‘மெல்பேண் ஆடுகளம் மோசமானது’



அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரின் நான்காவது டெஸ்ட் போட்டி நடைபெற்ற மெல்பேண் ஆடுகளம் மோசமானது என, சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 14 நாட்களுக்குள் இதற்கான பதிலை, அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் ஐந்து நாட்களிலும் 24 விக்கெட்டுகளே வீழ்த்தப்பட்டிருந்த நிலையில், போட்டி, வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்திருந்தது.

அந்தவகையில், அவுஸ்திரேலியாவின் சர்வதேச ஆடுகளமொன்று மோசமானது என சர்வதேச கிரிக்கெட் சபையால் குறிப்பிடப்படுவது இதுவே முதற்தடவையாகும். கடந்த மாதம் பெண்கள் ஆஷஸ் டெஸ்ட் இடம்பெற்ற வட சிட்னி ஓவல் ஆடுகளம், சராசரிக்கும் குறைவானது என சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்திருந்தது.

## ‘நெருக்கடியான அட்டவணையால் வீரர்களுக்குப் பாதிப்பு’



இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் நெருக்கடியான போட்டி அட்டவணை, வீரர்களுக்கு பாதிப்பாக அமைந்துள்ளதென, மன்செஸ்டர் சிற்றியின் முகாமையாளர் பெப் குவார்டிலோ தெரிவித்துள்ளார்.

11 நாட்களில் நான்கு போட்டிகளைக் கொண்டிருந்த மன்செஸ்டர் சிற்றி, காயங்கள் காரணமாக, தமது முக்கியமான இரண்டு வீரர்களான, மத்தியகள வீரர் கெவின் டி ப்ரூனே, முன்கள வீரர் கப்ரியல் ஜெஸூஸ் ஆகியோரை இழந்துள்ள நிலையிலேயே, பெப் குவார்டிலோவின் மேற்குறித்த கருத்து வெளியாகியுள்ளது.

ஸ்பானியக் கழகமான பார்சிலோனா, ஜேர்மனியக் கழகமான பொரிசியா டொட்டமுண்ட் ஆகியவற்றின் முகாமையாளராகவும் பெப் குவார்டிலோ இருந்திருந்த அங்கெல்லாம் குளிர்கால விடுமுறை இருக்கின்ற நிலையில், இங்கிலாந்தில் அக்காலத்திலும் போட்டிகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல்-இல் விளையாட ஸ்டோக்ஸுக்கு அனுமதி



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ், இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி. எல்) பங்கேற்பதற்கு, இங்கிலாந்து கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்தாண்டு செப்செம்பரில், பிறிஸ்டலிலுள்ள இரவு விடுதியொன்றுக்கு வெளியே இடம்பெற்ற சம்பவமொன்றின் பென் ஸ்டோக்ஸின் பங்களிப்புக் காரணமாக அவர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையில், தற்போது இங்கிலாந்து அணிக்காக தெரிவு செய்யப்படாமலிருக்கின்றார்.



இங்கிலாந்து பிறிமியர் லீக்:

# எவெர்ற்றனை வென்றது மன்செஸ்டர் யுனைட்டெட்

## பேர்ண்லியை வென்றது லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில், மன்செஸ்டர் யுனைட்டெட், லிவர்பூல், லெய்செஸ்டர் சிற்றி ஆகிய அணிகள் வென்றுள்ளன.

மன்செஸ்டர் யுனைட்டெட், 2-0 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றனை வென்றது. மன்செஸ்டர் யுனைட்டெட் சார்பாக, அந்தோனி மார்ஷியல், ஜெஸி லிங்கார்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இந்த இரண்டு கோல்கள் பெறப்படுவதற்கான பந்துப் பரிமாற்றங்களையும், போல் பொக்பா வழங்கியிருந்தார்.

அந்த வகையில், தொடர்ச்சியாக கடந்த மூன்று போட்டிகளில் சமநிலை முடிவுகளைப் பெற்று வந்த மன்செஸ்டர் யுனைட்டெட், அந்தத் தொடர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து, இப்போட்டியில் வென்றது.

இப்போட்டியில், காயம் காரணமாக மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்கள வீரர்களான றொமேலு லுக்காக்கு, ஸல்டான் இப்ராஹிமோவிக் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எவெர்ற்றனுக்கெதிராக பிறீமியர் லீக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் பெறும் 35ஆவது வெற்றியாய் இப்போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டெட் பெற்ற வெற்றி அமைந்திருந்த நிலையில், பிறீமியர் எந்தவோர் அணியாலும் எந்தவோர் அணிக்கெதிராகவும் பெறப்பட்ட அதிகூடிய வெற்றிகள் இவையாகும்.

இதேவேளை, 2-1 என்ற கோல் கணக்கில் பேர்ண்லியை, லிவர்பூல் வென்றது. லிவர்பூல் சார்பாக சாடியோ மனே, றக்னர் கிளவன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பேர்ண்லி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொஹன் குட்முன்டசன் பெற்றார்.

இதேவேளை, லெய்செஸ்டர் சிற்றி, 3-0 என்ற கோல் கணக்கில் ஹட்டெர்ஸ்பீல்ட் டௌணை வென்றது. லெய்செஸ்டர் சிற்றி சார்பாக, றியாட் மஹ்ரேஸ், இஸ்லம் ஸ்லிமானி, மார்க் அல்பிரைட்டன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

| யுனைட்டெட் | எவெர்ற்றன் |
| --- | --- |
| 2 | 0 |



இரகசிகரொருவரைத் தாக்கியமையடுத்து

## ஒப்பந்தத்தை இழந்தார் சபீர் ரஹ்மான்

முதற்தரப் போட்டியொன்றின்போது இரசிகரொருவரைத் தாக்கியமைக்கான தண்டனையாக, பங்களாதேஷின் துடுப்பாட்ட வீரர் சபீர் ரஹ்மானின் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையுடனான மத்திய ஒப்பந்தம் நீக்கப்பட்டுள்ளது.

இது தவிர, சபீர் ரஹ்மானுக்கு ஏறத்தாழ 25,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த ஆறு மாதங்களுக்கு உள்ளூர்ப் போட்டிகளில் விளையாடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் இவ்வாறாக தண்டவைக்குள்ளான முதலாவது கிரிக்கெட் வீரராக சபீர் ரஹ்மான் மாறியுள்ளார்.

ஒழுக்காற்றுச் செயற்குழுவால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்தே, சபீர் ரஹ்மானுக்கான தண்டனைகளை, பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் ஹஸன் வழங்கினார்.

இந்நிலையில், தனக்கு வழங்கப்பட்ட தண்டனைகளை சபீர் ரஹ்மான் ஏற்றுக் கொண்டுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

டாக்கா மெட்ரோ பொலிஸ் அணிக்கெதிரான, ராஜ்ஷகி டிவிஷனிந்தேசிய கிரிக்கெட் லீக் போட்டியின் இரண்டாம் நாளான கடந்த மாதம் 21ஆம் திகதியே, குறித்த சம்பவம் இடம்பெற்றிருந்தது. இரசிகரொருவரைத் தாக்கியமைக்கு மேலதிகமாக, விசாரணைக்காக அழைக்கப்பட்டபோது போட்டி மத்தியஸ்தருடன், சபீர் ரஹ்மான் தவறான முறையில் நடந்து கொண்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற விசாரணையின்போது தனது நடவடிக்கைகளுக்காக, சபீர் ரஹ்மான் மன்னிப் கோரியுள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தம் செய்யப்பட்ட கிரிக்கெட் வீரர்களுக்கான பட்டியலில், பி பிரிவில் இடம்பெற்றிருந்த சபீர் ரஹ்மான், கடந்தாண்டு 30,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களைப் பெற்றிருந்தார்.

2016ஆம் ஆண்டு பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில், மோசமானதொரு ஒழுக்க மீறலொன்றுக்காக 16,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அபராதம், சபீர் ரஹ்மானுக்கு விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

டெஸ்ட் போட்டிகளில்

## நாளை அறிமுகமாகிறாரா மேஸன் கிரேன்?

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரின் ஐந்தாவது டெஸ்ட் போட்டி, சிட்னியில் நாளை ஆரம்பிக்கவுள்ள நிலையில், இப்போட்டியில் இங்கிலாந்தின் புறச்சுழற்பந்து வீச்சாளரான மேஸன் கிரேன், டெஸ்ட் போட்டிகளில் தனது அறிமுகத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுழற்பந்துவீச்சு சகலதுறை வீரர் மொயின் அலி அல்லது வேகப்பந்துவீச்சாளர் டொம் குரானுக்குப் பதிலாகவே, மேஸன் கிரேன், நாளைய போட்டியில் இங்கிலாந்து அணியில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஷஸ் தொடரை இங்கிலாந்து இழந்துள்ளதோடு, வெள்ளையடிப்பைத் தவிர்த்துள்ள நிலையிலுமே, மேஸன் கிரேனைச் சோதிப்பதற்கான சந்தர்ப்பமாக, இங்கிலாந்து இதைக் நோக்குகிறது.



அந்தவகையில், டெஸ்ட் போட்டிகளில் மேஸன் கிரேன் நாளை அறிமுகத்தை மேற்கொண்டால், அவரின் வளர்ச்சி அபரிதமானதொன்றாகவே இருக்கும். ஏனெனில், இங்கிலாந்தில் முதற்தரப் போட்டிகளில் கடந்தாண்டு 16 விக்கெட்டுகளை மாத்திரமே, அதுவும் 44.68 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் என்ற வகையிலேயே, மேஸன் கிரேன் கைப்பற்றியிருந்தார். எனினும் ஓராண்டுக்கு முன்னர் சிட்னியில் உள்ளூர் போட்டிகளில் விளையாடிய மேஸன் கிரேன், நான்கு 5 விக்கெட் பெறுதிகளையும் 3 ஏழு விக்கெட் பெறுதிகளையும் கைப்பற்றியிருந்தார்.

2017ஆம் ஆண்டின் இறுதியில், Takas.lk, தனது தொகுதியில் சிறந்த வருவாயை பதிவு செய்துள்ளது.



இந்தியாவின் முன்னணி மென்பொருள் ஏற்றுமதி நிறுவனமாகத் திகழும் இன்போசிலுக்கு, பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில், புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக சலில் பாரிக் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூலதனச் சந்தையும் முதலீடுகளும்:

# பங்குச் சந்தையுடன் தொடர்புடைய நிறுவனங்கள்

இலங்கையின் மூலதன சந்தை அல்லது பங்கு சந்தையுடன் பல நிறுவனங்கள் தொடர்பு பட்டுக்காணப்படுகின்றது. அவற்றில் அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வங்கிகள் போன்ற பல வகையான நிறுவனங்கள் காணப்படுகின்றன.

### அவையாவன,

- இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC)
- கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் (CSE)
- மத்திய வைப்பு திட்ட (தனியார்) கம்பனி (CDS)
- பங்குத்தரகர்கள் (Stock Brokers)
- பட்டியலிடப்பட்ட கம்பனிகள் (Listed Companies)
- அலகுப்பொறுப்பாட்சி (Unit Trust)
- பொறுப்புடைய வங்கிகள் (Custodian Banks)
- இலங்கைப்பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்பது இலங்கையில் பிணையங்கள் சந்தையை முறைமைப்படுத்தும் நிறுவனமாகும்.
- நியாயமானதும் முறைமை சார்ந்ததுமான பிணையங்கள் சந்தையொன்றை உருவாக்குதல் மற்றும் அதனைப்பராமரித்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இந்நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது.

**“ கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தின் அங்கத்தவர்களாக கருதப்படுவது பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் தரகுத் தொழில் புரிவதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற தரகு நிறுவனங்களாகும்**

### ஆணைக்குழுவின் அங்கத்துவம்

நியமிக்கப்படும் அங்கத்தவர்கள்

- மத்திய வங்கி ஆளுநரினால் நியமிக்கப்படும் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஒருவர்
- சட்டம், நிதி, வர்த்தகம், நிர்வாகம் ஆகிய துறை சார்ந்த அனுபவமும் சாமர்த்தியமும் கொண்டவர்கள் என அமைச்சினால் கருதப்படும் ஆறுபேர்.

பதவி வழி நியமனம் பெறும் அங்கத்தவர்கள்

- திறைசேரிப்பிரதிச் செயலாளர்
- கம்பனிப்பதிவாளர் நாயகம்

இலங்கைப்பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் தலைவர்

### ஆணைக்குழுவின் நோக்கங்கள்

- ஒழுங்கானதும் நியாயமானதுமான பிணைகள் சந்தையை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்
- முதலீட்டாளர்களை பாதுகாத்தல்

**“ கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் பணிப்பாளர் சபையானது 9 பேரை உள்ளடக்கியதாகும். இதில் 4 பேர் நிதியமைச்சரினால் நியமிக்கப்படும் வேளை ஏனைய 5 பேரும் தரகு நிறுவனங்களின் பிரதிநிதிகளாவர்**

- நட்ட ஈட்டு நிதியத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பங்குதரகர் பங்குவர்த்தகர் ஆகியவர்களால் ஏற்படக்கூடிய பொறுப்பு மீறல் நட்டத்திலிருந்து முதலீட்டாளர்களை பாதுகாத்தல்
- பிணைகள் சந்தை ஒழுங்குபடுத்துவதுடன் தொழில்சார் தரத்தினை தொடர்ந்து பேணுதல்
- பங்கு பரிவர்த்தனை நிலையத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதலும் அதன் சரியான தொழில்பாடுகளை உறுதிப்படுத்தல்
- பங்கு தரகர் மற்றும் பங்கு வணிகர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதலும் அதன் சரியான தொழில்பாடுகளை உறுதிப்படுத்தல்
- அலகு பொறுப்பாட்சி நிறுவனத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதலும் அதன் சரியான தொழில்பாடுகளை உறுதிப்படுத்தல்
- சந்தை இடையீட்டாளர்களுக்கு பதிவு சான்றிதழை வழங்குவதுடன் அதன் சரியான தொழில்பாடுகளை உறுதிப்படுத்தல்
- பங்கு பரிவர்த்தனை நிலையம், பங்கு தரகர், பங்கு வணிகர், அலகு பொறுப்பாட்சி நிறுவனம் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கு பொது மற்றும் விசேட அறிவுறுத்தல்களை வழங்குதல்
- பங்கு தரகர் மற்றும் பங்கு வணிகர் என்பவர்களால் ஏற்படக்கூடிய பொறுப்பு மிறல் நட்டங்களுக்கு நட்ட ஈட்டினை வழங்குதல்
- பிணைகள் சந்தையின் அபிவிருத்திக்காக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல்
- ஆணைக்குழுவின் வேலைகளை செய்வதற்காக அதிகாரிகளையும்வேலையாட்களையும் வேலைக்கு அமர்த்துதல்
- பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் பங்குகளை வழங்குதல் மற்றும் பட்டியல் படுத்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்தல்.

### கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம்

- கொழும்பு பங்குப்பரிமாற்றகம் கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உத்தரவாதத்தால் பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனியாகும்.
- கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் பணிப்பாளர் சபையானது 9 பேரை உள்ளடக்கியதாகும். இதில் 4 பேர் நிதியமைச்சரினால் நியமிக்கப்படும் வேளை ஏனைய 5 பேரும் தரகு நிறுவனங்களின் பிரதிநிதிகளாவர். ஒரு பணிப்பாளர் இங்கு தலைவராக நியமிக்கப்படுவார்.

Sectors of CSE — COLOMBO STOCK EXCHANGE

### கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தின் அங்கத்துவம்

- கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தின் அங்கத்தவர்களாக கருதப்படுவது பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் தரகுத் தொழில் புரிவதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற தரகு நிறுவனங்களாகும்.
- தற்போது கொழும்பு பங்குச்சந்தையில் 31 அங்கத்துவ நிறுவனங்கள் காணப்படுகின்றன. இதில் 15 பூரண அங்கத்தவர்களும் 16 வியாபார அங்கத்தவர்களும் அடங்குவர்.

### கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் கிளைகள்

இலங்கையின் பின்வரும் நகரங்களில் பங்குச்சந்தையின் கிளைகள் காணப்படுகின்றன.

- மாத்தறை
- கண்டி
- குருணாகல்
- நீர்கொழும்பு
- யாழ்ப்பாணம்
- ஹம்பாந்தோட்டை
- அநுராதபுரம்
- இரத்தினபுரி

### கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தின் தொழிற்பாடுகள்

### கொழும்பு பங்குச்சந்தையின் தொழிற்பாடுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- கம்பனிகளைப்பட்டியல்படுத்தல்
- ATS முறைகளை நடைமுறைப்படுத்தல்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளை மேற்பார்வை செய்தல்
- விதிகளை மீறும் கம்பனிகளுக்கு நடவடிக்கை எடுத்தல்
- பங்குச்சந்தை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்

### மத்திய வைப்பு திட்ட (தனியார்) கம்பனி(CDS)

- பங்குச்சந்தையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள விரும்பும் எந்த ஒரு முதலீட்டாளரும் கட்டாயமாக மத்திய வைப்புத்திட்ட கணக்கொன்றை வைத்திருப்பது அவசியமாகும்.
- மத்திய வைப்புத் திட்டமானது, கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பிணையங்களை வைப்பிலுடும் நிறுவனமாவதுடன், பங்கு சந்தையில் பிணையங்கள் மற்றும் வாடிக்கையாளர்களைப் பதிவுசெய்தல், கொடுக்கல் வாங்கல் தீர்வக நடவடிக்கை மற்றும் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து வைத்தல் ஆகிய பிரதான பணிகளை நிறைவேற்றுகின்றது.

### மத்திய வைப்புத்திட்டத்தின் செயற்பாடுகள்

- வாடிக்கையாளரைப் பதிவு செய்தல்
- பங்குகளை வைப்பிலிடல்
- பங்குகளை மீளப்பெறுதல்
- பங்கு மாற்றல்
- தீர்த்து வைத்தல்

### பங்குத்தரகர்கள் (Stock Brokers)

பங்குச்சந்தை கருமங்கள், சகல கொடுக்கல் வாங்கல்களும் பங்குத் தரகர்கள் ஊடாகவே மேற்கொள்ளப்படும்.

- கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தின் அங்கத்தவர்களாக கருதப்படுவது பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் தரகுத் தொழில் புரிவதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற தரகு நிறுவனங்களாகும். தரகு நிறுவனமாக பணிபுரிவதற்கான அனுமதிப்பத்திரத்தை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவே வழங்குகின்றது.

### பங்குத்தரகர்களின் தொழிற்பாடுகள்

- மத்திய வைப்புத் திட்ட கணக்கை வாடிக்கையாளர்களுக்காக திறத்தல்.
- முதலீட்டாளர் சார்பில் பிணைகளைக்கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல்
- முதலீட்டு ஆலோசனை வழங்குதல்
- ஆய்வு அறிக்கைகளைத்தயாரித்தல்

### சந்தை இடையிட்டாளர்கள்

- கடன் தரப்படுத்தல் முகவர்கள் (Credit Rating Agencies)
- முதலீட்டு முகாமையாளர்கள் (Investment Managers)
- எல்லை வழங்குனர்கள் (Margin Providers)
- ஒப்புரவாளர்கள் (Under writers)
- வைப்பகங்கள்

சந்தையிடையீட்டாளர்கள் தொடர்பான விளக்கங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.

– இலங்கைப்பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைஆணைக்குழு

## பங்குச் சந்தை

COLOMBO STOCK EXCHANGE

2018.01.02

| அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண் | S&P SL20 விலைச் சுட்டெண் |
|---|---|
| 6,411.27 | 3,702.63 |

## நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்



2018.01.02

TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

| விலை உயர்ந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| புளூ டயமன்ட்ஸ் | 0.90 | 1.10 | 0.20 |
| டெஸ் ஆக்ரோ (சாதாரண) | 1.00 | 1.10 | 0.10 |
| பார்ம் கார்டன் ஹோட்டல் | 26.10 | 28.70 | 2.60 |
| ரேணுகா ஹோல்டிங்ஸ் (சாதாரண) | 17.00 | 18.40 | 1.40 |
| ஏசியா எசெட் | 1.40 | 1.50 | 0.10 |
| ஜெஸ்டெட்னர் | 110.10 | 117.90 | 7.80 |
| டிப்பர் புரொடக்ட் | 85.00 | 90.00 | 5.00 |
| லங்கா ஐஓசி | 28.00 | 29.60 | 1.60 |
| ரிச் பீறிஸ் | 177.00 | 186.90 | 9.90 |
| சிலோன் டொபேக்கோ | 1004.50 | 1060.00 | 55.50 |

| விலை சரிவடைந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| பிசி பர்மா | 0.20 | 0.10 | (0.10) |
| அமானா டக்காபுல் | 0.80 | 0.70 | (0.10) |
| ஹன்டர்ஸ் | 444.80 | 390.00 | (54.80) |
| சுவர்ணமகால் பின். | 0.90 | 0.80 | (0.10) |
| கொழும்பு லேண்ட் | 19.80 | 18.10 | (1.70) |
| டெஸ் ஆக்ரோ | 1.20 | 1.10 | (0.10) |
| லங்கா டைல்ஸ் | 115.00 | 106.00 | (9.00) |
| உடபுஸ்ஸலாவ | 42.50 | 40.00 | (2.50) |
| சிட்றஸ் ஹிக்கடுவ | 3.80 | 3.60 | (0.20) |
| கேகாலை | 70.00 | 66.90 | (3.10) |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

TT RATES
ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT
DATE : 03 JANUARY 2018

| CURRENCY | CURRENCY | SELLING RATE |
|---|---|---|
| Australian Dollar | 117.34 | 122.55 |
| Canadian Dollar | 119.98 | 124.70 |
| Chinese Yuan (Renminbi) | 23.05 | 24.18 |
| Euro | 180.86 | 187.61 |
| Japanese Yen | 1.3369 | 1.3875 |
| Singapore Dollar | 112.91 | 117.09 |
| Sterling Pound | 203.91 | 210.75 |
| Swiss Franc | 154.38 | 160.55 |
| US Dollar | 151.43 | 155.23 |

| COUNTRY | CURRENCY | INDICATIVE RATE |
|---|---|---|
| Bahrain | Bahrain Dinar | 406.79 |
| Kuwait | Kuwait Dinar | 507.84 |
| Oman | Oman Rial | 398.62 |
| Qatar | Qatar Riyal | 42.14 |
| Saudi Arabia | Saudi Arabian Riyal | 40.92 |
| UAE | UAE Dirham | 41.78 |

சரவதேச பெற்றோலிய பொருட்களின் விலை

| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | |
|---|---|
| பிரென்ட் | 66.62 அமெ.டொ. ஃ பீப்பாய் |
| ஒபெக் | 64.47 அமெ.டொ. ஃ பீப்பாய் |

| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை | |
|---|---|
| பெற்றோல் | 74.60 அமெ.டொ. ஃபீப்பாய் |
| டீசல் | 77.78 அமெ.டொ. ஃ பீப்பாய் |
| மண்ணெண்ணெய் | 79.37 அமெ.டொ. ஃ பீப்பாய் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2018 ஜனவரி 02 இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்

| | |
|---|---|
| மறு நாள் | 8.15 |
| 7 நாட்கள் | 8.39 |
| 1 மாதங்கள் | 9.26 |
| 3 மாதங்கள் | 10.05 |
| 6 மாதங்கள் | 11.77 |
| 12 மாதங்கள் | 12.17 |

# தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டும் Jobpal.lk

வேலையொன்றுக்கு பொருத்தமான நபரைத் தேடுவதைப் போன்றே வேலை தேடுவதும் கடினமான பணியாகும். இலங்கையில் வேலை தேடுவோர் படும் கஷ்டங்களும் தற்போது வேலைபார்ப்போர் அவ்வேலையை அடைய பட்ட துன்பங்களும் விவரிக்க இயலாதவை. உண்மையில் வேலை தேடுவோரின் எதிர்பார்ப்புகளுக்கும் கூட்டாண்மை தொழில்தருநரின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையில் பாரிய இடைவெளியொன்று காணப்படுகின்றது. இந்தப் போராட்டமானது, நேரடியாக இவ்விரண்டிலும் நிலவும் பொருத்தப்பாடின்மையுடன் தொடர்புபட்டது. தற்போது நாட்டில் நிலவுகின்ற தொழில்தரும் கட்டமைப்பானது, இதனைத் தீர்க்கும் வகையானதாக அமைந்திருக்கவில்லை.

தொழில்தேடும் இணையத்தளமான Jobpal.lk அதற்குப் போட்டியான ஏனைய தொழில் தேடும் இணையத்தளங்களுடன் ஒப்பிடுகையில் தனித்துவம் மிக்கதாய் உள்ளதோடு, அதற்கான உள்ளடக்கத்தினை வழங்குவோராக தொழில்தருனர்கள், அதனை இலவசமாக பயன்படுத்தக்கூடியதாகவும் உள்ளது. இலங்கையில் கையடக்கத்தொலைபேசிகளின் மூலம் 100 சதவீதம் இயக்கக்கூடியதாக இருப்பதோடு தொழில்தேடுவோர் டேட்டா வசதிகள் இன்றியும் கூட பயன்படுத்தக் கூடியதாகவுள்ளது.

“எங்களது பிரதான இலக்காக இருப்பது, வேலை தேடுவோர் பிரிவாகும். வேலை தேடுவோர் தமக்குப் பொருத்தமான வேலைகளைத் தேடவும், அவற்றுக்கு விண்ணப்பிதற்கு உதவுவதும் போன்ற அடிப்படைச் சேவைகளை முற்றிலும் இலவசமாக வழங்குவதோடு, விண்ணப்பதாரிகள் எங்களது பிறிமியம் சேவைகளையும் நாடலாம். பிறிமியம் சேவைகளில், ww.jobpal.lk வேலை தேடுவோரின் சார்பில் அவர்களுக்குப் பொருத்தமான வேலைகளைத் தேடி உத்வேகத்துடன் விண்ணப்பிப்பதில் ஈடுபடும்” E-FutureTech Systems (Pvt) Ltd இன் பணிப்பாளரும் நிறைவேற்றதிகாரியுமான அஞ்சன ரத்னாயக்க என்றார்.




“அரசானது அதன் மூன்றாண்டுகால பொருளாதார அபிலிருத்தித் திட்டத்தின் கீழ், நடுத்தர கால எல்லை கொண்ட இலக்குகளான 5,000 அமெரிக்க டொலர் தலா வருமானம், ஐந்து பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், 2020ஆம் ஆண்டளவில் ஏற்றுமதிகளை 20 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இரட்டித்தல் என்பனவற்றோடு, சுமார் ஒரு மில்லியன் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

“வேலைவாய்ப்புச் சந்தையில் நுழைவதற்கு எனது நண்பர்களும் சகாக்களும், எதிர்நோக்கும் போராட்டங்களைக் கருத்தில் கொண்டு இச்சவால்களை ஒரேயடியாக முறியடிக்க Jobpal.lk திட்டமிட்டுள்ளது” என்று அஞ்சன நம்பிக்கை தெரிவித்தார்.

**“ இந்த மேம்பாட்டு முயற்சிகளோடு, தொழிற்சந்தையின் தேவைகளுக்கேற்ற திறன்கள் கொண்ட இளைஞர்கள் தொழிற்சந்தையில் இணைவர்**

அதனாலேயே இலங்கையில் வேலைவாய்ப்புக்கான இணையத்தளங்கள் நிறையவே காணப்படுகின்றன. ஆனால், நாங்கள் அவை எல்லவற்றிலும் மேம்பட்டவர்களாய் இருப்பதற்கு காரணம் நாங்கள் வேலை தேடுவோரின் தேவைகளை இனம்கண்டு அவற்றுக்கு முக்கியத்துவமளிப்பதையே எங்கள் பிரதான வர்த்தக முயற்சியாகக் கொண்டுள்ளோம்.

இதற்கு மேலதிகமாக, 2018ஆம் வரவு-செலவுத்திட்டத்தில் அரசின் முன்னெடுப்புகள் குறித்தும் அவர் பாராட்டிப் பேசினார். இலங்கையின் தொழில்முயற்சிகள் எனும் தலைப்பில் அமைந்த வரவு-செலவுத்திட்ட உரையில், தொழில்சந்தையில் தமக்கான வேலைகளைத் தேடுவதில் இலங்கையின் இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதாவது இலங்கையின் தொழிற்சந்தைக்குத் தேவைப்படும் திறன்களை இளைய சமூகத்தினர் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடப்பட்டது. இதனை நிவர்த்திக்கும் வகையில் தனியார் துறையினரால் கோரப்படும் திறன்களை இன்றைய தலைமுறையின் பெற்றுக்கொண்டு எதிர்கால தொழிற்சந்தைக்கு தம்மைத்தயார்ப்படுத்தும் வகையில் இளைஞர் குழாம்களுக்கு மூன்று முதல் ஆறுமாதகாலப் பயிற்சிகளை அரசு வழங்கவுள்ளது.

இந்த மேம்பாட்டு முயற்சிகளோடு, தொழிற்சந்தையின் தேவைகளுக்கேற்ற திறன்கள் கொண்ட இளைஞர்கள் தொழிற்சந்தையில் இணைவர். அதற்கிசைவாக தொழில் தேடுவோர் மற்றும் தொழில்தருநர் ஆகியோருக்கு தீர்வினை வழங்கத்தக்க முற்றுமுழுதான தொழில்தேடும் இணையதளமொன்றினை வழங்கவேண்டிய பணி எம்முன் உள்ளது.

இதுவரை ஆறுமாதகாலமே செயற்பட்டபோதும், Jobpal.lk ஆனது, நாளொன்றுக்கு குறிப்பிடத்தக்களவிலான, 50-80 வரையான புதிய வேலைவாய்ப்பு விளம்பரங்களைப் பெறுகின்றது. அவை உள்ளூர் மற்றும் வெளியூர் எனும் பிரிவுகளில் உள்ளன. தற்போது சுமார் 1500 உள்நாட்டு வேலைவாய்ப்பு விளம்பரங்களும் 500 வெளியூர் வேலைவாய்ப்பு விளம்பரங்களும் உள்ளன.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஈ.எச். மஹரூப்பின் புதல்வி ரோகினா மஹ்ரூப்பினால், கிண்ணியா – மாஞ்சோலையிலுள்ள வசதி குறைந்த 40 மாணவர்களுக்கு, கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (தீஷான் அஹமட்)



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தோப்பூர், செல்வநகர் கிராமத்திலுள்ள அல்–அமான் வித்தியாலய வளாகம், மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு மகிழ்வூட்டுவதற்காக, பெற்றோரது பங்களிப்புடன் அழகுபடுத்தப்பட்டது. (தீஷான் அஹமட்)








உல்லாசப் பயணத்துறைக்கு சவாலாகியுள்ள

# யால தேசிய வனவிலங்கு பூங்கா

**விலங்குகளைப் பாதுகாப்பது போன்று, இந்நாட்டு உல்லாசப் பயணத்துறையையும் பாதுகாக்க வேண்டியது, உரிய அதிகாரிகளின் கடமையாகும்**



யால தேசிய வனவிலங்குப் பூங்கா, இந்நாட்டு உல்லாசப் பயணத்துறைக்கு பாரிய பங்களிப்பு நல்கிவரும் தேசிய பூங்காக்களில் ஒன்றாக விளங்குகின்றது.

இந்நிலையில், வனவிலங்குகளின் பாதுகாப்பு கருதி, வனவிலங்குப் பூங்காவைப் பார்வையிடுவதற்காக, உல்லாசப் பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் ஸஃபாரி ஜீப் வண்டிகளுக்கான கட்டுப்பாடுகளை, அரசாங்கம் விதித்துள்ளது.

பூங்காவின் பிரதான நுழைவாயில் ஊடாக, சுமார் 400 ஸஃபாரி ஜீப் வண்டிகள், பூங்காவை நோக்கிப் புறப்படுகின்றன. இதனால், வனவிலங்குகளுக்கு ஏற்படும் தொந்தரவுகளைத் தடுப்பதற்காக, பூங்காக்குள் செல்லும் ஸஃபாரி ஜீப் வண்டிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் பாராட்டுதலுக்கு உரியதென்ற போதிலும், இந்த யோசனையை நடைமுறைப்படுத்தும் போதும் ஏற்பட்டுள்ள சிற்சில குறைபாடுகள், உல்லாசப் பயணத்துறையை வீழ்ச்சிப் பாதைக்குள் கொண்டுசெல்லவும் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வனவிலங்குப் பூங்காவுக்குள் செல்வதற்கான வாயிலில், நுழைவுச் சீட்டுகளை விநியோகிப்பதற்கு, ஒரேயொரு கவுண்டர் மாத்திரமே காணப்படுகின்றது.

இவ்வாறாக, நுழைவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கான பல மணி நேரத்தைச் செலவிடும்



உல்லாசப் பயணிகள், மலசலகூடங்களுக்குச் செல்லவேண்டுமாயினும், நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையையும் எதிர்நோக்கி வருகின்றனர். காரணம், அங்கு ஒரேயொரு மலசலகூடமே காணப்படுகின்றது.

இவ்வாறாக, யால வனவிலங்குப் பூங்காவைப் பார்வையிட வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதோடு, அவர்களுக்கான நேரமும் வீணடிக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டுகின்றனர். இது, இலங்கையின் உல்லாசப் பயணத்துறைக்கு சாதகமான விடயமல்ல என்றும், அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யால வனவிலங்குப் பூங்காவில் நடமாடும் விலங்குகளைப் பாதுகாப்பது போன்று, இந்நாட்டு உல்லாசப் பயணத்துறையையும் பாதுகாக்க வேண்டியது, உரிய அதிகாரிகளின் கடமையாகும் எனவும், அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதிகாரிகளின் கவனயீனத்தால் இடம்பெறும் நட்டம், யால வனவிலங்குப் பூங்காவுக்கு மாத்திரமன்றி, ஒட்டுமொத்த உல்லாசப் பயணத்துறைக்கும் ஏற்படும் நட்டமாகும் என்றும், அவர்கள் குறிப்பிடுகின்றனர்.









# கஞ்சிக்குடிச்சாறு குளக்கட்டு வெடிப்பு

■ பைஷல் இஸ்மாயில்

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா உணவு மற்றும் விவசாய அமைப்பினால், 61.7 மில்லியன் ரூபாய் நிதியில் நிர்மாணிக்கப்பட்ட கஞ்சிக்குடிச்சாறு குளக்கட்டு, வெடிப்புக்கு உள்ளாகி வருவதாகவும் இதற்கு, உரிய அதிகாரிகள் பதில் கூறியே ஆகவேண்டுமெனவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சந்திரநேரு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

“கஞ்சிக்குடிச்சாறின் நீர் கொள்திறனை, 6.29 மில்லியன் கனமீற்றரில் இருந்து 8.26 மில்லியன் கனமீற்றராக மாற்றியமைப்பதற்காகவும் இதன் மூலம் 1,700 ஏக்கர் விவசாய நிலத்தை இரு போகங்கள் செய்யக்கூடிய வகையில் மாற்றியமைப்பதற்காகவே, 61.7 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, மேற்படி குளக்கட்டு நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட குளக்கட்டு, கடந்த 28/06/2017 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால், இந்த நிர்மாணத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக, திறப்பு விழா இடம்பெற்று இரு வார காலத்துக்குள்ளேயே, இந்தக் குளக்கட்டு வெடித்துள்ளது.

“கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.திலகராஜா, அம்பாறை பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் யூ.எல்.ஏ.நசார், தம்பிலுவில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் டீ.தவராஜா, நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை நீர்ப்பாசனப் பொறியியலாளர்களான ஜீ.சுஜிதரன், எஸ்.சுபாகரன், அம்பாறை பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையின் பொறியலாளர் வை.பீ.ரஸ்மி, கஞ்சிக்குடிச்சாறு குளப்பகுதி தொழிநுட்ப உத்தியோகத்தர் ஆர்.ராஜஸ்வரன், மண் பரிசோதகர் இமாமுடீன் ஆகியோர், இக்குளக்கட்டு வெடிப்புக்கு பதில் கூறவேண்டும்.

“இது மழைகாலம் என்பதால், இக்குளக்கட்டு இன்னும் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்” என்றார்.



மைதான எல்லைப் பிரச்சினை;

# ஹக்கீம் ஆராய்வு

■ துஷாரா

ஓட்டமாவடி, மீரோவோடை பிரதேசத்தில் அமைந்துள்ள சக்தி வித்தியாலயத்தின் மைதான எல்லைப் பிரச்சினை காரணமாக, இரு சமூகங்களிடையே முறுகல்நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக ஆராய்வதற்காக, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கடந்த 31ஆம் திகதியன்று, சம்பவ இடத்துக்கு விஜயம் மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பாடசாலை சார்பான விடயங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

சக்தி வித்தியாலயத்தை அண்டிய 8 முஸ்லிம் குடும்பங்களின் காணிகளைச் சேர்த்து அடாத்தாக மைதானத்துக்கு சுற்றுமதில் அமைத்து வருவதால், அங்குள்ள தமிழ் - முஸ்லிம் மக்களிடையே முறுகல்நிலை தோன்றியுள்ளது. இப்பிரச்சினைக்கு, சட்ட ரீதியாகத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பிரச்சினை தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கல்குடா பிரதேசத்தின் மாஞ்சோலை - பதுரியா எல்லை வீதியானது, கோரளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச சபைக்குரியதா அல்லது கோரளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச சபைக்குரியதா என்று, நீண்டகாலமாக இழுபறி நிலவிவந்தது.

மீரோவோடை பிரதேசத்தின் சக்தி வித்தியாலயம் எனும் பாடசாலை அமைந்துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள், இப்பாடசாலையை அண்டிய பகுதியில் வசித்துவருகின்றனர். இந்நிலையில், பாடசாலை மைதானத்தை விரிவுபடுத்தும் நோக்கில், அயலிலுள்ள 8 முஸ்லிம்களின் குடியிருப்புக் காணிகள் அடாத்தாகப் பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப்பிரச்சினையால், தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையே முறுகல்நிலை தோன்றி வந்தது.

இக்காணிப் பிரச்சினை தொடர்பாக, கடந்த ஜூலை 18ஆம் திகதியும் ஓகஸ்ட் 15ஆம் திகதியும், மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிடியே சுமந்திர தேரர் தலைமையில், பாரியளவிலான போராட்டங்கள் நடைபெற்றன. இதன்போது, பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் பிரச்சினைகளும் மூண்டன.

இதன்பின்னர், வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், குறித்த காணிகள், முஸ்லிம் குடும்பங்களின் குடியிருப்புக் காணியெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில், பாடசாலை நிர்வாகம், முஸ்லிம்களின் குடியிருப்புக் காணிகளை மீண்டும் அடாத்தாகப் பிடித்து, சுற்றுமதில் அமைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், அப்பிரதேசத்துக்கு விஜயம்செய்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், பாதிக்கப்பட்ட மக்களின் காணிகள் தொடர்பான ஆவணங்களை ஒன்றுதிரட்டி, சட்டரீதியான தீர்வைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

இப்பிரச்சினையால், தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமை சீர்குலைக்கப்படுவதை, எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது என்றும், அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

**“இப்பிரச்சினை தொடர்பாக, கடந்த ஜூலை 18 மற்றும் ஓகஸ்ட் 15ஆம் திகதிகளில், மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிடியே சுமந்திர தேரர் தலைமையில், போராட்டங்கள் நடைபெற்றன**

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 3 ஜனவரி 2018, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.